வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமை தபால் நிலையத்தில் செய்திப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

புத்தகம் 20—திருவள்ளுவர் ஆண்டு 1997 ஆடி திங்கள் 23-ம் நாள் (8—8—1966) திங்கட்கிழமை ரபி:அவ் 20 | இதழ் 10




# பிரதமர் விஜயம்: சா. ஜே. வே. திட்டம் அங்கீகாரம்

## ஜீ. ஜீ. யின் பிடிவாதத்தால் வடபகுதிக்குக் குறை

பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா அவர்கள் இம் மாதம் 9-ந் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வதையிட்டு தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே வே. செல்வநாயகம் இரு ஆலோசனைகளைச் சமர்ப்பித்திருந்தாரென்றும், பிரதமர் தமிழரசுத் தந்தையின் இரண்டாவது ஆலோசனையை ஏற்று புகைவண்டி மூலம் யாழ்நகருக்குச் சென்று மீண்டும் அங்கிருந்தே கொழும்பு திரும்புவாரென்றும் இப்பொழுது முடிவாகி இருப்பதாகக் கூறப்படுகிறது.

பிரதமர் இம்மாதம் 9ந் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும்போது அவருக்கு அவரது விருப்பத்தின் பேரில் கட்சி வேறுபாடின்றி பொதுவரவேற்புகள் அளிக்கத் தமிழரசுக்கட்சி எடுத்த முயற்சிகள் எல்லாம் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் குறுகிய பிடிவாதப் போக்கினல் வியர்த்தமாகி விட்டனவென்று தெரிகிறது.

பிடிவாதத்தினல், திரு. டட்லி சேனநாயக்கா, கொழும்பிலிருந்து புகைவண்டி மூலம் யாழ்நகர் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதென்று கூறப்படுகிறது.

பிரதமருக்கு கிடைக்க விருந்த பிரமாண்டமான வரவேற்புக்களை யெல்லாம் தனது சுயநலம் கலந்த பிடிவாதத்தினல் குட்டிச்சுவராக்கிவிட்டார் திரு ஜீ. ஜீ. என்று அரசியல் வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது.

(9-ம் பக்கம் பார்க்க)

**அடுத்த இதழ்**
**இந்திய சுதந்திரதின சிறப்பிதழாக**
அதிக பக்கங்களுடன் மலரும்



இலங்கை வந்துள்ள இந்தியத் தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம், ஈழ மண்ணில் காலடியெடுத்து வைத்த மறு நாளே, தள்ளாத வயதிலும் தமிழர் உரிமை காக்க போராடிவரும் தமிழரசுத் தந்தை திரு சா. ஜே. வே. செல்வநாயகத்தின் இல்லத்துக்குச் சென்று, தந்தையுடன் அளவளாவி மகிழ்ந்தார். படத்தில் ம. பொ. சியுடன் கிளிநொச்சிப் பா. உ. பண்டிதர் கா. பொ. இரத்தினமும், தமிழரசுத் தந்தையும் காணப்படுகிருர்கள்.

படம்: ராஜப்பன்

## மீண்டும் பிரதமர் வடபகுதிக்குவருவார்

வடமாகாணத்திலுள்ள தமிழரசுக்கட்சியினர் பிரதிநிதித்துவம் வகிக்கும் தொகுதிகளுக்கு தாம் வெகு விரைவில் விஜயம் செய்ய விருப்பதாக பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களிடம் தெரிவித்திருப்பதாக அறியப்படுகிற .



இம்மாதம் 9-ம்திகதி யாழ் நகரில் நடைபெறும் பொ. கட்சி கூட்டத்திற்கு விஜயம் செய்யும் பிரதமர், திரு. பொன்னம்பலத்தின் பிடிவாதம் காரணமாக, ஏனைய தொகுதிகளுக்கு விஜயம் செய்ய முடியாமல் போனதாலும், தமிழரசு ஆதரவாளர்களின் வரவேற்பு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள முடியாது போனதாலும் மிகவும் மனவருத்தம் அடைந்துள்ளார் என்று தெரிகிறது. பௌத்தர்களின் வழிபாடடுத்தலமான நயினதீவிலுள்ள நாகதீபத்துக்குக்கூட செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டதையிட்டு பிரதமர் மிகுந்த துயரமடைந்துள்ளாராம்.

(9-ம் பக்கம் பார்க்க)

## பொ. கட்சி மாநாட்டை பகிஷ்கரிப்பர்

பிரதமரை வரவேற்பதற்கென்று திரு. பொன்னம்பலத்தின் கட்டளையின் பேரில் ஆங்காங்கே தம் செலவில் வரவேற்புப் பந்தல்களை நிறுவிய திரு. பொ. வின் ஆதரவாளர்கள், பிரதமர் சுற்றுலா கைவிடப் பட்டது காரணமாக, திரு. பொ. வின் மேல் ஆத்திரமடைந்திருக்கிருர்கள் என்று தெரிகிறது.

"நான் நினைத்தால் நடக்க முடியாதது எதுவுமில்லை. பிரதமரை நிச்சயமாக கூட்டி வருவேன். பந்தல் அலங்காரங்களை பிரமாதமாகச் செய்யுங்கள்" என்ற தங்கள் தலைவரின் உத்தரவை ஏற்று தங்கள் சொந்தச் செலவிலேயே திரு. பொ. வின் ஆதரவாளர்கள் சிலர் ஆங்காங்கே வரவேற்பு சோடனைகளைச் செய்திருந்தார்கள் என்றும் இப்பொழுது பிரதமர் பொ. கட்சி மாநாட்டு நிகழ்ச்சிகளை தவிர ஏனைய சுற்றுலா திட்டங்களைக் கை

(9-ம் பக்கம் பார்க்க)

## புதிய மொழி வழி தொழிற் சங்கம் திருமலையில் ஆரம்பம்

உள்ளூராட்சி மன்றங்களைச் சேர்ந்த எழுது வினைஞர்களினல் மொழிவழித் தொழிற் சங்கமொன்று இம்மாதம் 8ந் திகதி திருமலை நகரசபை மண்டபத்தில் திருமலை நகராண்மைக் கழகத் தலைவர் திரு. சி. சிவானந்தம் அவர்களால் அங்குரார் பணம்செய்து வைக்கப்படவிருக்கிறது. மொழிவழித் தொழிற் சங்கஅணியில் இதுவும் இடம்பெறுகிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள உள்ளூராட்சி மன்ற எழுதுவினைஞர்கள் தமக்கென ஒரு புதிய மொழி வழித் தொழிற சங்கத்தை நிறுவ இருக்கின்றனர். இதன் அங்குரார்பணக் கூட்டம், இம் மாதம் 8ம் திகதி காலை 9மணிக்கு திருமலை நகரசபை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. திருமலை நகரசபைத் தலைவர் டாக்டர் சி. சிவானந்தன், அங்குரார்ப்பணம் செய்து வைக்கிருர். யாழ் மாநகரசபையைச் சேர்ந்த திரு. ம. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்தில் திருமலை நகரசபையைச் சேர்ந்த திரு. ந. இராசகுலம் வரவேற்புரை நிகழ்த்துவார்.

திருமலை மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திருமலை நகராண்மைக் கழகத் தலைவர் டாக்டர், சிவானந்தன், மட்டக்களப்பு நகரசபையைச் சேர்ந்த திரு. க. சக்திவேல் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள்.

**இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்**

**அடுத்த இதழ்** வெளியூரில் 14-8-66 காலை தலை நகரில் 13-8-66 மாலை **கிடைக்கும்**




பெர்னட்ஷா வாழ்வில் .... 3

# "என்ன செய்வது; நேரமில்லையே"

— சி. சண்முகலிங்கம் —

ஷாவின் நகைச்சுவை துணுக்குகள், செய்கைகள் பிறரை கிண்டல் செய்வனவாகவே அமைந்ததனல் 'கிண்டல் எழுத்தாளர்' என்ற நாமம் அவருக்கு வரலாயிற்று. ஆனல் அவரின் நகைச்சுவை துணுக்குகளில் கருத்துப் பொதிந்திருப்பதை நாம் கண்கூடாய்க் காண்கின்றோம். பெரிய அரசியல் தலைவர்களாக இருக்கட்டும், கோடீசுவரனக இருந்தாலும் சரி, தன் "கூடப் பிறந்த நகைச்சுவைப் பொதிகளை" அவிழ்த்து விடும் துணிவுள்ள தன்மை அறிஞர் ஷாவிடம் நிறைய அமைந்துள்ளது. இப்படியான தன்மையினல் தான் ஷா உலகில் புகழ் மிக்கவரானர் என்ருல் அது மிகையாகாது.

ஷா தனது பேச்சுக்களையும், எழுத்துக்களையும் சுருக்கமாகவே எழுதுவார். சுருங்கக் கூறி விளங்க வைக்கும் தன்மை மட்டுமல்ல சிரிக்க வைக்கும் தன்மையும் ஷாவிடம் உண்டு. தாம் எழுதும் எதனையும் மிகவும் கவனமாகத் திருத்துவார். சுருக்குவார். அளவுக்கதிகமாய் ஒரு சொல் கூட இருக்கக்கூடாது என்பது அவர் கருத்து. ஷாவின் நாடகமொன்றை நடிப்பதற்கு அனுமதி கோரி நாடக மன்றங்களின் கழகமொன்று எழுதிய கடிதத்திற்கு, ஷா எழுதிய பதில் சற்றுநீண்டுவிட்டது. ஷா கடிதத்தின் அடியில் பின் கண்டவாறு குறிப்பிட்டார். 'இக் கடிதம் அளவுக்கதிகமாய் நீண்டுவிட்டதுபோல் தெரிகின்றது. தயவு செய்து மன்னிக்கவும் என்ன செய்வது, குறுகிய கடிதம் எழுத எனக்கு நேரம் கிடைக்கவில்லை.' நாடக மன்றத்தினர் பதிலைக் கண்டு விழுந்து விழுந்து சிரித்தனர்.

## எரிமலை ஆவி

எரிமலைகள் வெடிக்கும் போது எரிமலை ஆவி ஏற்படுகின்றது தெரியுமா உங்களுக்கு:

இது எரிமலைகள் அனைத்துக்கும் உள்ள பண்பாகும். 1906ம் ஆண்டு ஏப்பரல் மாதம் வெசூவியஸ் எரிமலை வெடித்த போது இந்த ஆவி சுமார் எட்டு மைல் உயரத்துக்கு எழுந்தது. 1883ல் கிரக்கடோவா என்னும் எரிமலை வெடித்த பொழுது சுமார் 20மைல் உயரத்துக்கு ஆவி எழுந்தது.

## உதவும் ரேடியோ

நமது வீட்டில் அலங்காரப் பொருள்களுடன், ரேடியோதான் முக்கியம் வாய்ந்ததாக இருக்கும். ஆனல் இந்த ரேடியோப் பெட்டிகளில் பாட்டுடன் செய்தி மற்றும் பலவும் கேட்கலாம். ஆபத்துச் சமயத்தில் உதவுதற்கும் ஒரு ரேடியோ உண்டு தெரியுமா உங்களுக்கு.

கையில் எடுத்துச் செல்லக் கூடியதும், தண்ணீர் புக முடியாததும் மிதக்கக் கூடியதுமான, ரேடியோ தொலைபேசி ஒன்றை ஆஸ்ட்ரேலியாவில் கண்டு பிடித்திருக்கின்றனர்கள். இதன் பெயர் 'விங்-லைன்' என்பது. சேதமுற்றுக் கைவிடப்பட்ட கப்பல்கள், மீன் பிடிக்கும் படகுகளிலிருந்து உயிர் தப்பியவர்கள். நெருக்கடியான சமயத்தில் இதை பயன்படுத்தலாம். இதன் எடை 5 றுத்தல். கப்பலில் உள்ள ரேடியோத் தொலைபேசிக் கருவி வேலை செய்யாத பொழுதும் இதை பயன்படுத்திக் கொள்ளலாம்.

## எக்கிட்னு

இது ஆஸ்திரேலியா, டாஸ்மானியா, நியூகினி என்னுமிடங்களில் வாழும் பாலூட்டி மிருகம். இது பாலூட்டியாக இருந்த போதிலும் ஊர்வன போல் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். இது முள்ளெலியைப் போல் சுருண்டு கொள்ளுகிறபடியால் இதை முள்ளெலி என்று சொல்வதுண்டு. ஆனல் இதற்கு முள்ளெலியை விடப் பலமான முட்களுண்டு. அவை உள்ளே குழலாக இருக்கும். இதற்கு வாயில் பற்கள் இல்லை. தன் நீண்ட பிசுபிசுப்பான நாக்கினல் எறும்புகளையும் மற்ற பூச்சி புழுக்களையும் பற்றிப் பிடித்து உண்ணும். இதனல் இதற்குமுள்ளெறும்புதின்னி என்ற மற்ருெரு பெயருமுண்டு. எக்கிட்னு குழி பறித்து வசிப்பதால் இயற்கையாகவே இதன் காலில் பலமான நகங்களுண்டு.

இது மெதுவான நிலத்தில் வெகு விரைவாகக் குழி தோண்டும். இதைப்பிடிக்க முயன்ருல் இப்படித் தோண்டிக் கொண்டே மணலில் மறைந்துவிடும். பின் காலில் நகங்கள் தவிர முள்ளும் உண்டு. இதன் உதவியால் கால்களைப் பலமாக உதைத்து தப்பித்துக் கொள்கிறது. இது ஒரு தடவையில் ஒரு முட்டையிடும். அது சிட்டுக்குருவி முட்டையளவு பருமனுகும். இரண்டு முட்டைகள் இடுவதுமுண்டு. எக்கிட்னு பாலூட்டிகளில் மிகத் தாழ்ந்த மானேட்ரிமேட்டா என்னும் உள்வகுப்பைச் சேர்ந்தது.

பொ. கணேசன்
கல்முனை-3

# "வாழ்ந்திடு"

—பால்முருகன்—

தங்கத் தம்பி எழுந்திடு
தமிழைக் காக்க முனைந்திடு
எங்கும் இன்பம் தங்கிட
எழுந்தே இன்னல் களைந்திடு.

வள்ளுவன் தன்னை வாழ்த்திடு
வாழ்வினைக் குறள்வழி யாக்கிடு
பள்ள மில்லாப் பாதையில்
பண்புடனே நீ வாழ்ந்திடு.

கல்லைக் களலைக் காற்றைக்
கடவு ளென்றே நம்பிடு
இல்லை யென்னு துலகினில்
இறையா யென்றும் இருந்திடு.

உருவம் இல்லாக் கடவுளை
உன்மன தினிலே பதித்திடு
மருவும் மாய வாழ்வினில்
மயக்க மின்றி வாழ்ந்திடு.

விதியை வென்ற வீரர்கள் 2

## நெப்போலியன்

— நல்லை அமிழ்தன் —

எல்பா தீவிலிருந்து மூன்று தோழர்களுடன் பிரஞ்சுக் கரையில் நெப்போலியன் இறங்கிவிட்டான் என்று கேள்விப்பட்ட லூயி மன்னர் நெப்போலியனைக் கண்ட விடத்தில் சுட வேண்டுமென்று நாடெங்கும் கட்டளையிட்டார்.

நெப்போலியனை தடுத்து நிறுத்துவதற்கு லூயி மன்னரின் 6000 வீரர்கள் அணிவகுத்து நின்றனர். சுடுவதற்குத் தயாராக துப்பாக்கிகளையும் நீட்டினர் 'சுடு' என்று தளபதி உத்திரவு பிறப்பித்து விட்டான். மூன்று தோழர்களையும் பினனே நிறுத்தி சேர்ட் பொத்தானைக் கழற்றி முன்னே பாய்ந்தார் நெப்போலியன். "உங்களுடைய சக்கரவர்த்தியை சுடக் கூடியவர்கள் உங்களில் யாரேனும் இருக்கிருர்களா"? என்று கர்ச்சித்துக் கொண்டே படைகளை நோக்கிச் சென்ருர். துப்பாக்கிகள் கீழே விழுந்தன. 6000 பேரும் அவர் வசமாயினர். 'கோடானு கோடி வினை வந்திடினும் மனம் கோணுதிருப்பதே சமாதி' என்ற வாக்கியத்திற்கு இணையாக வாழ்ந்த நெப்போலியனைப் போல் தைரியத்துடன் வாழுங்கள்.

# ஓடிப்போனவன்

... நவசோதி ...

(2)

## துயரச் செய்தி

முதுகிலே ஓங்கி ஒரு குத்துக் குத்தி ஒரு மாணவனை வகுப்பினுள் தள்ளிவிட்டார் வேலுப்பிள்ளை வாத்தியார்.

முதுகைத் தடவிக் கொண்டே கந்தசாமிக்குப் பக்கத்தில் சென்று அமர்ந்தான் அந்தமாணவன் வகுப்பறையேஅதிரும்படி 'கொல்' லென்று மாணவர்கள் சிரித்தனர்.

மேசையைப் பிரம்பினல் தட்டிய ஆசிரியர் மாணவர்களின் சிரிப்பொலி அடங்கு முன்பே 'டோய்...கந்தா இஞ்சை வா' என்று கந்தசாமியைஅழைத்தார். மாணவர்களின் சிரிப்பு அவருக்கு ஆத்திரத்தை மூட்டியது.

அடித்தொண்டையால் 'ஹக்க...ஹக்க...' என்று சத்தம் போட்டுச் சிரித்த கந்தசாமிதான் அகப்பட்டான். 'அடி விழுமே' என்ற பயத்தால் தயங்கித் தயங்கி ஆசிரியரை நோக்கிச் சென்ருன் கந்தசாமி.

'ஏன்டா சிரிச்சே...கையை நீட்டு...'

'நான் சிரிக்கலை சேர்'——கையை நீட்டாதிருந்தான் அவன்.

'டோய்...கழுதைபோல கத்திட்டு பொய்வேறை சொல்றியா' கால்களிரண்டிலும் மாறி மாறி விழும் அடிகளைப் பொறுக்க முடியாது துள்ளிக் குதித்தான். கால்களைத் தடவிக்கொண்டே தன் பெஞ்சில் ஒடிப்போய் அமர்ந்தான் கந்தசாமி.

அவனுக்கு அருகில்தான் ஆசிரியர்இழுத்துவந்தமாணவன் இருந்தான். அவனின் பெயர் சண்முகம்.

சிறிது நேரத்திற்கு முன்பு கல்லூரியைவிட்டுக் களவாய் வெளியேறும்போது ஒரு ஆசிரியரிடம் கையும் மெய்யுமாக அகப்பட்டுத் தலைமை ஆசிரியரிடம் இழுத்துச்செல்லப்பட்ட ஆசாமிதான் இந்தச் சண்முகம். தலைமையாசிரியரின் அறையிலே வகுப்பாசிரியர் வேலுப்பிள்ளை வாத்தியாரைக் கண்டு பேயறைந்த அதிர்ச்சியடைந்தான் சண்முகம்.

தலைமையாசிரியரோ, சண்முகத்திற்கு பிரம்பினல் நல்ல சாப்பாடு கொடுத்து அவனை வகுப்பாசிரியருடன் அனுப்பியிருந்தார். வகுப்பில் மீண்டும் அமைதி நிலவியது. மணி அடிப்பதற்குள் கட்டுரையை எழுதிமுடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அவசர அவசரமாக எழுதிக்கொண்டிருந்தனர் மாணவர்கள்.

டங்...டங்...

கல்லூரி முடிவடையும்முன் றரை மணிக்கு அறிகுறியாக கோபுரத்திலிருந்து ஒலிகிளம்பியது.

கட்டுரையினை எழுதிமுடித்தவர்கள் அதை ஆசிரியரிடம் கொடுத்துவிட்டு துள்ளிக் குதித்து வெளியேறினர். ஆனல், கந்தசாமி, சண்முகம் இருவரும் உட்பட இன்னும் மூவர் தங்கள் இருப்பிடங்களில் இருந்தவாறே ஆசிரியரின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தனர். இன்னும் அவர்கள் எழுதி முடிக்கவில்லை.

'நாங்களும் வீட்டிற்குப் போகவேண்டும்' என்று ஆசிரியரைக் கெஞ்சியது அவர்களின் பார்வை.

ஒரே ஒருமுறை அவர்களை முறைத்துப் பார்த்தார் ஆசிரியர். அவ்வளவுதான், அவரை தங்களுக்கு இரங்கும்படி பார்த்துக்கொண்டிருந்த முகங்கள் கொப்பிகளை நோக்கிக் கீழே தாழ்ந்தன.

கட்டுரையை ஆசிரியரிடம் கொடுத்துவிட்டு அமைதியுடன் வெளியேறினன் வசந்தன். வசந்தனின் வாடிய முகமும், சோர்வுற்ற நடையும் ஆசிரியரின் பார்வைக்குள் நுழைந்தன.

'வசந்தா!'—வசந்தனை அழைத்தார் வேலுப்பிள்ளை வாத்தியார்.

'ஏன்வசந்தா இன்டைக்கு ஒரு மாதிரியாய் இருக்கிருய்?-' அவரின் குரலிலே கனிவு குழைகிறது.

'ஒண்டுமில்லை சேர்.' அந்த நிலையில் ஆசிரியருக்கு முன்னல் நிற்கக்கூட அவனல் முடியவில்லை.

அப்பொழுது—

இளைக்க இளைக்க ஓடி வந்தான் வசந்தனின் எதிர்வீட்டுச்சிறுவன். சிறுவனின்திடீர் வருகை வசந்தனுக்கு ஆச்சரியத்தை அளித்தது.

'வசந்தா அண்ணே! உங்கடை வீடு திப்பிடிச்சு...'

'என்ன, எங்கட வீடா'——சிறுவன் கூறிமுடிக்கு முன்பே அவசரப்பட்டான் வசந்தன்.

'ஆமண்ணே.'

'ஐயோ...அம்மா...'

கல்லூரிக் கட்டிடமே கிடுகிடுக்கும்படி அலறிக் கொண்டு பைத்தியம் பிடித்தவன்போல ஒடினன் வசந்தன். அவனின் புத்தகங்களும் கொப்பிகளும் நாலாபுறமும் சிதறுண்டன.

வெறும் கைகளுடன் 'அம்மா...' என்று கத்திக் கொண்டு வழிநெடுகக் கண்ணீரைச் சொரிந்த வண்ணம் ஒடினன். வசந்தனுக்குப்பின்னல் ஓடினன் எதிர்வீட்டுச் சிறுவன்.

வழியெங்கும்வசந்தனையே கண்ணிமைக்காது அனைவரும் பார்த்தனர்.

வசந்தனையும் சிறுவனையும் பின்தொடர்ந்து ஓடினர் வேலுப்பிள்ளை வாத்தியார்.

தம்மையும் மறந்து ஓடுகின்ருரே என்று ஆசிரியரைப் பார்த்துக்கொண்டே 'தப்பினோம் பிழைத்தோம்' என்ற மகிழ்ச்சியுடன் வகுப்பை விட்டு வெளியேறினர்கள் கட்டுரையினை எழுதி முடிக்காத ஐந்து ஆசாமிகளும்.

வளரும்



## தமிழறிவுப் போட்டி

சரியான விடையும், பரிசு பெறும் அதிர்ஷ்டசாலியான பெருமகனின்பெயரும் அடுத்த வாரம் வெளிவருகிறது.




'காப்பாளர்',
கிளிநொச்சி,

கே: பெண்கள் சகல உத்தியோகங்களிலும் பங்குபற்றுவதினால் அரசாங்கத்துக்கு ஏதும் நன்மையுண்டா?

ப: நன்மையைவிட தீமைதான் அதிகம். அதனால் மறுபடியும் அல்லிராணியின் அரசு ஏற்பட வழிபிறக்கலாம்.

கே: பெண்களின் உடைகள் நாளொரு வண்ணமாகக் குறைந்து வருகிறதே; காரணமென்ன?

ப: ஆண்களின் ரசிகத் தன்மை அதிகரித்து வருவதுதான் காரணம்.

கே: நாட்டில் பெருகிவரும் கொலை, களவு என்பன செய்பவர்களைக் குறைக்க வழி என்ன?

ப: கொலையையும் களவையும் சட்ட பூர்வமாக்குவதுதான் அதற்கான வழி! சட்டவிரோதமான செயல்களில் ஈடுபடுவதில் ஆர்வம்கொண்டவர்கள் சட்டபூர்வமான செயல்களைச் செய்ய முன்வரமாட்டார்கள்.

ஃ

உ. தர்மலிங்கம்,
யாழ்ப்பாணம்,

கே: யாழ் நகர் வரும் பிரதம மந்திரியை வரவேற்கும் விடயத்தில் தமிழரசாரை தனிப்பெருந்தலைவர் வெறுப்பதேன்?

ப: பிரதமர் உதவியால் தலையைத் தூக்கும் முயற்சிக்குத் தமிழரசார் முட்டுக்கட்டையாகி விடுவார்களோ என்ற பயம் காரணமாயிருக்கலாம்.

ஃ

'ராஜிபவனம்',
மூச்சம்புலம்.

கே: இந்த அரசாங்கத்துக்கு நீங்கள் தனிப்பட்ட முறையில் கூறும் தாழ்மையான கருத்தென்ன?

ப: ஒன்றுமில்லை. ஏனெனில் எனது கருத்துகளெல்லாம் உயர்ந்தவையே யன்றி தாழ்மையானவை அல்ல.

கே: நீங்கள் குறிப்பிட்ட ஒரு கேள்விக்கு பரிசு கொடுப்பதென்றால் பிரசுரமாகும் மற்றக் கேள்விகள் எல்லாம் சிறந்தவை அல்ல என்பதுதான் அர்த்தமா?

ப: இல்லை. எல்லாக்கேள்விகளும் சிறந்தவைகளே. ஆனால் அவற்றிலொன்றுக்கு மட்டுமே பரிசு வழங்க முடிகிறது.

ஃ

ஆர். பாலகிருஷ்ணன்,
மாத்தளை.

கே: நீங்கள் ஒரு மோகினிப் பிசாசைக் கண்டால் என்ன செய்வீர்கள்?

ப: அந்தப் பிசாசு என்னைக் கண்டால் எதைச் செய்யுமோ, அதையே நான் அதைக் காணும்போது செய்வேன்.

ஃ

ஸ்ரீ மொட்டையப்புக்காத்து,
மட்டுவில்தெற்கு.

கே: எனக்கு வீடு நிறைய பொருளாய் இருக்கவேண்டும் என்ற ஆசை. என் மனைவிக்கோ காசுமட்டும் இருந்தால் போதும் என்ற எண்ணம். இதில் யாருடைய கருத்து சரியானது?

ப: உங்கள் கருத்துதான் சரி. காசு திடீர் திடீரென மதிப்பு குறைந்துவிடுகிறது. ரூபாயின் மதிப்பை இலங்கையும் குறைத்துவிட்டால், கைவசமுள்ள பணத்தின் மதிப்பு பாதிக்குமேல் குறைந்துவிடலாம். காசைச் சேர்த்து வைத்தல் எப்போதும் ஆபத்தாகும்!

ஃ

'முகிலன்',
சிலாபம்.

கே: தியாகமா சேவையா சிறந்தது?

ப: தியாகமே சிறந்தது. ஆனால் சேவையை அடிப்படையாகக் கொண்ட தியாகம்.

கே: வாழ்க்கையில்முன்னேற வேண்டுமாயின் எப்படி நடக்க வேண்டும்?

ப: தலையை உயர்த்தி, நெஞ்சை நிமிர்த்தி ராஜ நடை நடக்கவேண்டும்.

ஃ

கைதையூர். க. நடராசன்,
கைதடி வடக்கு.

கே: எனது நண்பர் ஒருவர் நாவலர் சைவப் பல்கலைக்கழக இயக்கம் ஆரம்பிக்கப்போவதாகவும் என்னைப் பிரசாரம் செய்ய வரும்படியும் கேட்கிறார்!

ப: பலே பேஷ்! இராமநாதன் இந்துப் பல்கலைக் கழகத்துக்கு போட்டியாகவா நாவலர் சைவப்பல்கலைக் கழகம் கிளம்புகிறது?

ஃ

செ. நவரத்தினராசா,
கொழும்பு-13.

கே: கொட்டாஞ்சேனைக் கள்ளுக்கடையைமூடுவதற்கு மாநகர சபை தீர்மானித்துள்ளது. உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: கள்ளுக்கடையை மூடுவதற்கு மாநகரசபைக்குஅதிகாரம் கிடையாதாம்.

ஃ

● ஏ. எல். எம். றஜபுத்தீன்,
கொடேகொட,
ஹெம்மாதகம.

கே: தற்போதுள்ள அரசியற் சூழ்நிலையில் திரு. பொன்னம்பலம் செய்யவேண்டியதென்ன?

ப: யு. என். பி. யில் அங்கத்தினராகச்சேர்ந்துவிடவேண்டும்.

கே. முருகையா,
தெல்தோட்ட.

கே: ம. பொ. சி. அவர்கள் இலங்கை வருகையையொட்டித் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: ஒரு மாமாங்கத்துக்கு ஒருமுறையன்றி அவர் அடிக்கடி இங்கு வரவேண்டுமென்று நினைக்கிறேன்.

ஃ

சி. மகேஸ்வரி,
வெள்ளவத்தை.

கே: குயுக்தியாரே, நீர்தேசிய அரசாங்கத்தை ஆதரிக்கிறீர் என்றுகூறுகிறார்களே, உண்மைதானா?

ப: பொய்! பச்சைப் பொய்!! தேசிய அரசாங்கந்தான் என்னை ஆதரிக்கிறது.

ஃ

சி. இ. மகேந்திரன்,
அல்வாய்தெற்கு.

கே: இரிய கொல்லையின் உயர் கல்விமசோதாவில் தமிழ்க் காங்கிரசின் நிலை என்ன?

ப: இரண்டும் கெட்டான் நிலைதான்.

ஃ

இ பத்மநாதன்,
புங்குடுதீவு-11.

கே: எமது நாடாகிய இலங்கையின் அமைதியை சீர்கெடுக்கும் இனப்பூசல்கள் என்றும் நீடிக்குமா?

ப: இனப்பூசல்கள் அடியோடு மறைந்துவிடும் சமஷ்டி ஆட்சிமுறை அமுலுக்கு வந்தால்.

ஃ

ச. ஆனந்தராசா.
அலிசாவளை

கே: வெளிநாடு சென்றுள்ள தமிழ் காங்கிரஸ் காரியதரிசி வரு முன் மகநாடு கூடுவதன் நோக்கம் என்ன?

ப: தாமதப்படுத்துவதால் பிரதம மந்திரியை வட பகுதிக்கு அழைக்கும் வாய்ப்பு தமிழரசாரிடம் போய் விடுமோ என்ற பீதிதான் இந்த அவசரத்துக்குக் காரணம்.

ஃ

ஆனந்தசர்மா,
நீர்கொழும்பு.

கே: தமிழ்ப்படங்கள் அன்று இருந்த நிலை, இன்று உள்ள நிலை, நாளை இருக்கும் நிலையைப்பற்றி உங்களால் விளக்கம் தரமுடியுமா?

ப: தமிழ்ப்படங்கள் என்றால் சைவசமய சாமிப்படங்களா..? அன்றிருந்ததைவிட இன்று பல வர்ணங்களில் கவர்ச்சியாகச் சாமிபடங்கள் அச்சிடப்படுகின்றன; எதிர்காலத்தில் இன்னும் கவர்ச்சியாகஅவை அச்சிடப்படலாம்.

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
த. பெ. இல, 1188
கொழும்பு-12.

● இந்த அடையாளத்தையுடைய கேள்வி கேட்ட வாசகர் மூன்று ரூபா பரிசு பெறுகிறார்.



தேசிய அரசாங்கத்துக்கு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் ஆதரவைக் கண்டு எதிர்க்கட்சியினர் விடும் பெருமூச்சுத்தான் இதற்குக் காரணமாக இருக்குமோ?

## சம அந்தஸ்து!

சகல தொழிலாளரையும் சமமாக அரசாங்கம் கவனிக்கும்.

— தொழில் அமைச்சர்

பூ! இதிலென்ன இருக்கிறது? தொழிலாளரையும் முதலாளிகளையுமல்லவா சமமாக கவனிக்கவேண்டும்!

## மைனு மொழி!

ராணி எலிசபெத்தின் தாயாரை, இந்திய மைனுவொன்று 'வாயை மூடு' என்று கட்டளையிட்டது.

— லண்டன் செய்தி

சுதந்திரப் போராட்ட காலத்து நினைவுகள் அந்த மைனுவின் மனதை விட்டு அகலவில்லைப் போலும்!

## பெரு மூச்சு!

நாடெங்கும் அதிக உஷ்ணம் பரவியுள்ளது.

— செய்தி

## படிப்பது தேவாரம்...

நாட்டில் சோஷலிச புரட்சியை ஏற்படுத்துவதற்கு சகல இனங்களுக்கு மிடையில் ஒற்றுமை ஏற்படுத்துவது அவசியம்.

— சமசமாசக்கட்சி

படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோவிலா?

## பூ இவ்வளவுதானா?

ஜூலி இறக்குமதிக்கு இரண்டரைக் கோடி ரூபா அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

— செய்தி

'பூ, இவ்வளவு தானா?' என்கிறார் ஒரு கறுவாக்காட்டுப் பெண்மணி.

## நாரீமணியின் கேள்வி

நிர்வாணமாக காரோட்டிய இளம் பெண்ணுக்கு அபராதம் விதிக்கப் பட்டது.

— செய்தி

நிர்வாணமாகத் தெருவில் நடந்தால் என்ன தண்டனை கிடைக்கும் என்று கேட்கிறார்கள் படிப்படியாக ஆடைகளைக் குறைத்து அரை நிர்வாணத்திலிருந்து முழு நிர்வாணத்துக்குச் சென்று கொண்டிருக்கு நம் நாட்டு நாரீமணிகள்




பாரிஸ், லண்டன், நியூயோர்க் ஆகிய கனவு லோகத்திலிருந்து

கோயா உங்களுக்கு, உலகிலேயே மிக்க மென்மையான, பட்டுப்போன்ற டால்க்கையும், அழகு சாதன சோப்பில் பூரண நிறைவு பெற்ற கோயா சோப்பையும் அளிக்கிறது. நீங்கள் கோயாவைத் தேர்ந்தெடுக்கும்போது, நீங்கள் ஆறு குளுகுளுக்கும் நறுமணங்களிலிருந்து வேண்டியதைத் தேர்ந்தெடுங்கள். பிளாக்ரோஸ், லவ்ஸப்பயார், கார்டினியா, என்ரைஸ், பாஸ்போற், நெ. 5, ஆகியவற்றிலிருந்து தெரிவுசெய்யுங்கள்.

கோயா • லண்டன் • பரிஸ் • நியூயோர்க்



● சிலம்புச் செல்வர் ● எல்லைக் காவலர் ● சுதந்திரத் தியாகி

# தலை வணங்காத் தலைவர்

# தாமே கற்ற தமிழறிஞர்

# ம. பொ. சி.


மனித இனத்தை வழி நடத்த அவ்வப்போது பெரியார்கள் தோன்றிக் கொண்டே இருக்கிறார்கள். அவர்கள் மண்ணுலகில் உதிக்கும் பொழுது மானிட சமுதாயத்திற்கு ஒரு செய்தியையும்கொண்டு வருகிறார்கள். இத்தகையவர்கள் மண் குடிசையிலும் தோன்றலாம் அல்லது மாட மாளிகையிலும் தோன்றலாம். ஆனால் காலம் வரும்பொழுது அவர்கள் தங்கள் கடமையைச் செய்தே தீருகிறார்கள். இந்த உண்மைகளை நாம் கண்ணூடாகக் காண்கிறோம்.

பணம் தேடுவதற்காக தென்னாபிரிக்கா சென்ற மோகனலால் கரம் சந்த் காந்தி பாரத நாட்டுக்குவிடுதலை பெற்றுக்கொடுப்பார் என்றுஎவர்தான்எதிர்பார்த்திருப்பார்கள். தென்னாபிரிக்காவில் காந்திக்கு ஏற்பட்ட அனுபவம்தான் அவரைத் தாய்நாட்டு விடுதலைக்கு உழைக்கத்தூண்டியது என்று கொள்வதும் தவறு. காந்தியடிகள் மனிதகுலத்திற்கு ஒரு செய்தியை விட்டுச் செல்வதற்காகத் தோன்றியவர். அவர் பரிஸ்டர் பட்டம் பெறாது சாதாரண மாடு மேய்க்கும் இடையராக இருந்திருந்தாலும் தமது கடமையைச் செய்து முடித்திருப்பார். இது நியதி.

## குப்பத்தில் பிறந்த மகவு

இதே போன்றுதான் 1906ம் ஆண்டு யூன் திங்கள் 26ம் நாள் சென்னை ஆயிரம் விளக்குப்பகுதியிலுள்ள சால்வன் குப்பத்தில் வறுமை மிக்கஒருகுடும்பத்தில் பிறந்த ஓர் ஆண்மகவும் தமிழ் நாட்டுக்குஒருசெய்தியைக்கொண்டுவந்தது. மூன்றும் வகுப்பில் சேர்ந்த மூன்றும்நாளிலேயே வறுமை காரணமாக இச்சிறுவன் தனது கல்லூரிப் படிப்புக்கு நிரந்தரமாக முற்றுப் புள்ளி வைத்துக்கொண்டான் குடும்பத்தின் வறுமையைப் போக்கும் பொறுப்பில் அச்சிறுவனும் பங்குகொண்டான். அதன் காரணமாக நெசவுத் தொழிலாளியாகவும் மாறினன். பத்து ஆண்டுகாலத்தின் பின் நெசவுத் தொழிலில்சலிப்பு ஏற்படவே அச்சுக்கோர்க்கும் தொழிலாளியாக அவன் மாறினன். 1928ம் ஆண்டு முதல் 1934ம் ஆண்டு வரை இந்த இளைஞன் டாக்டர் வரதராஜுலு நாயுடு நடாத்திய 'தமிழ்நாடு' நாளிதழ் அச்சகத்தில் அச்சுக் கோர்த்தான். அப்பொழுது அவ்விளைஞனின் மாத வருமானம் பதினைந்து ரூபாய்.

நாளிதழ் ஒன்றின் அச்சுக்கோர்க்கும்தொழிலாளியாக 28ம் அகவை வரை வாழ்ந்த அந்த இளைஞன் இன்று ஒரு சிறந்த பத்திரிகை ஆசிரியன்; அவன் ஒரு சிறந்த மேடைப் பேச்சாளன், விடுதலை வீரன், இலக்கியவாதி, எல்லைப் போராட்ட வீரன், அரசியற் கட்சி ஒன்றின் தலைவன், கலாசார இயக்கங்களின் காவலன், நெறியாளன். இத்தனை புகழும் ஒருங்கே பெற்ற-மூன்றும் வகுப்பில் மூன்று நாள் கற்ற-இவர் யார்?



மலேயகக் கலை விழாவில் கலந்து கொள்வதற்காக இலங்கை வந்துள்ள ம. பொ. சி. அவர்கள் கிறீன்லண்ட்ஸ் ஓட்டலை அடைந்த சில மணித் துளிகளுக்குள் அன்று (29-7-66) வெளியான 'சுதந்திரன்' ஏட்டை வரவழைத்து பார்வையிட்டார் அப்பத்திரிகையில் வெளியாகியிருந்த கிளிநொச்சிப் பிரதிநிதி பண்டிதர் கா. பொ இரத்தினம் அவர்களின் அரியணை உரை மீதான பேச்சை ம. பொ. சி. அவர்கள் கவனமாகப் படித்துக் கொண்டிருப்பதை புகைப்பட நிருபர் திரு. ராஜப்பன் எப்படியோ கண்டுவிட்டார்.

—அவர்தான் கடந்த யூன் திங்கள் 26ம் நாளன்று மணிவிழா கண்ட ம. பொ. சி. அவர்கள். ம. பொ. சி. அவர்கள் இளமையிலேயே விடுதலை வேட்கை கொண்டவராக விளங்கினர். வறுமையில் அவர் குடும்பம் வாடிய போதிலும் நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் முன்னணியில் திகழ்ந்தார்.

1926ம் ஆண்டு இந்திய காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து தொண்டர் ம. பொ. சி. அவர்கள் 1927ம் ஆண்டு நாட்டு விடுதலைத் தொண்டர்படையில் இணைந்து பணியாற்றத் தொடங்கினர். அன்றுமுதல் நாடு அன்னியராட்சியின்பிடியிலிருந்து விடுதலை பெறும் வரை அவர் தமது பணியிலிருந்து ஓயவில்லை.

பூங்குன்றன்

நாட்டின் விடுதலைக்காக அவர் ஆறு தடவைகள் காராக்கிரகத்தில் தவமியற்றியிருக்கிறார். 1928ம் ஆண்டு சைமன் ஆணைக்குழு பகிஷ்காரத்தில் ஈடுபட்டதற்காக முதல்தடவையாக சிறை சென்றார். அதைத்தொடர்ந்து 1932ம் ஆண்டு சென்னை நகரில் உயர்நீதிமன்றக் கடற்கரையில் ஆந்திர கேசரி பிரகாசம் தலைமையில் உப்புச் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டமைக்காக பொலிசாரின் தடியடிக்கு இலக்கானதுடன் சிறைக்கும் அனுப்பிவைக்கப்பட்டார். பின்னர் 1932ம் ஆண்டு நடைபெற்ற சட்ட மறுப்புஇயக்கத்தின்போதும் அவர் சிறைத்தண்டனை ஏற்க வேண்டி ஏற்பட்டது. 1940ல் நடைபெற்ற தனிநபர் சத்தியாக்கிரகத்தின் போதும், 1942ல் நடைபெற்ற ஆகஸ்டுப் புரட்சியின் போதும் ம. பொ. சி. அவர்கள் சிறைக்குள் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

1942ல் மத்திய மாகாணத்திலுள்ள அமராவதிச்சிறைச் சாலையில் அவர் வைக்கப்பட்டிருந்தார். இச்சிறையில் ஓராண்டுகாலம் அடைக்கப்பட்டிருந்தபோது அம்மாநிலத்தின் பருவநிலையும், பழக்கமற்ற உணவும்அவர் உடலை வாட்டியது. அவர் சிறிது காலத்தில் நோயுற்றார். 119 இறாத்தல் எடையுள்ளவராக சிறைசென்ற அவர் 88 இறாத்தல் குறைந்த நிலையில் விடுதலை செய்யப்பட்டார். அதுவும் இவர் பிழைக்கமாட்டார் என்று சிறை மருத்துவர்கள் கூறியதன் பேரிலேயே அவர் நிபந்தனையற்ற முறையில் விடுதலை செய்யப்பட்டார். அப்பொழுது இவரைப் பற்றிக் கொண்ட குடல் நோய் இன்றும் அவரை விட்டு விலகாது வேதனைப்படுத்திக் கொண்டே இருக்கிறது.

பாரதினைப்பட்ட பாரதத்தில் ஆறு தடவைகள் சிறை சென்ற ம பொ. சி. அவர்கள் சுதந்திர இந்தியாவிலும் இரண்டு தடவைகள் சிறை சென்றிருக்கிறார். அன்று பாரதத்தை மீட்க சிறை சென்றவர் பின்னர் தமிழகத்தை மீட்க சிறை சென்றார். 1953ம் ஆண்டு வடக்கெல்லைப் போரில் ஈடுபட்டுத் தணிகையில் சட்டத்தை மீறியதற்காக கைதியாகி ஆறு வாரக் கடுங்காவல் தண்டனை பெற்றார். பின்னர் 1956ம் ஆண்டு இக்கிளர்ச்சியின் தொடர்பாக சென்னை சட்டசபை முன் உண்ணாவிரதம் இருந்தமைக்காக மூன்று நாட்கள் சிறை வைக்கப்பட்டார்.

## சமூகப் பணியில்

நாட்டுவிடுதலையில் எத்தனை ஆர்வமும் அக்கறையும் காட்டினரோ அதேயளவு ஆர்வத்தை சமூக விரோதச் செயல்களைக் களைந்தெறிவதிலும் ம. பொ. சி. அவர்கள் செய்து காட்டியிருக்கிறார்கள். அவரின் சமூகப் பணிகளில் உயர்ந்து நிற்பது 1932ம் ஆண்டு நடைபெற்ற கள்ளுக்கடை மறியல் போராட்டமாகும். காந்தி - இர்வின் உடன்படிக்கை ஏற்பட்ட பின்னர் காந்தி அடிகள் மது அரக்கனை விரட்டும் பணியில் ஈடுபட்டார். சென்னையில் தீரர் சத்தியமூர்த்தி தலைமையில் கள்ளுக்கடை மறியல் ஆரம்பமாகியது. மறியல் போராட்டக் குழுச் செயலாளராக ம பொ. சிவஞானக்கிராமணியார் பணியாற்றினர். மறியல், மாணிக்கக் கிராமணியார் கடை முன் ஆரம்பமாகியது. தலைவருடன் செயலாளரும் மறியல் நடைபெற்ற இடத்திற்குச் சென்றிருந்தார். அப்பொழுது கடை சொந்தக்காரரான மாணிக்க கிராமணியார் திரு. சத்தியமூர்த்தியிடம் வந்து "நீங்கள் வேண்டுமானால் மறியலை நடத்துங்கள். அதற்கு யாரை வேண்டுமானாலும் அனுப்புங்கள், ஆனால் இந்தக் குலத்துரோகியை மட்டும் அனுப்பாதீர்கள்' என்று ம. பொ. சியைச் சுட்டிக் காட்டிக் கூறினார்.

கள்ளுக்கடை மறியல் போராட்டம் ம பொ. சி. அவர்களின் குடும்பத்திற்கு பெரும் சோதனையாக அமைந்தது, அவர்கள் குடும்பம் இருந்த இடத்திலிருந்து துரத்தப்பட்டதுடன் சமூகப் பகிஷ்காரமே செய்யப்பட்டார்கள். இவற்றையெல்லாம் கண்டு ம. பொ. சி தனது பணியை விட்டுவிடவில்லை- காந்தியப் பற்று அவரின் உள்ளத்தில் அத்தனை ஆழமாகப் பதிந்திருந்தது.

## காந்தியடிகள் தரிசனம்

காந்தியத்தின் மீது இத்தனை பற்றுக் கொண்ட ம. பொ. சி. அவர்கள் காந்தியடிகளை மூன்று தடவைகள் மட்டுமே சந்தித்திருக்கிறார். 1934ம் ஆண்டு காந்தியடிகள் சென்னை வந்திருந்த பொழுது அவரை வரவேற்று மாலை அணிவிக்கும் சந்தர்ப்பம் அவருக்கு கிடைத்தது. அதன் பின்னர் 1946ம் ஆண்டில் காந்தியடிகள் மீண்டும் சென்னை வந்த பொழுது ராஜாஜி அவர்கள் ம. பொ. சியை அறிமுகப்படுத்தி வைத்தார். அப்பொழுது கள்ளுக்கடை மறியல் போராட்டகால சம்பவங்கள் பற்றியும் ராஜாஜி குறிப்பிட்டார். அப்பொழுது காந்தியடிகள் தான் புளிப்புக்களுக்கு மட்டுமே விரோதி என்றும், ம. பொ. சி. அவர்களைத் தித்திப்புக்கள் பருகும்படியும், தித்திப்புகள் உடம்புக்கு நல்லதுஎன்றும் ஆலோசனை கூறினாராம். அதற்குப் பின்னர் 1947ல் டில்லி சென்ற பொழுதும் காந்தியடிகளை சந்திக்கும் பாக்கியம் ம. பொ. சி. அவர்களுக்குக் கிட்டியது.

1926ம் ஆண்டு இந்திய காங்கிரஸில்சேர்ந்த ம.பொ. சி. அவர்கள் 1954-ம் ஆண்டு வரை அம்மாபெரும் இயக்கத்தின் முக்கிய தூண்களில் ஒருவராக இருந்து வந்திருக்கிறார். அவர் காங்கிரஸ் கட்சியில் இருந்த காலத்தில் சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டி செலாளராகவும், தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியில் முக்கிய பதவிகளையும் வகித்ததுடன், மத்திய சட்ட சபை, மாநில சட்ட சபை, சென்னை மாநகராட்சி உள்ளிட்ட நகர மன்றத் தேர்தல்களில் காங்கிரஸ் கட்சியின் வெற்றிக்காக எழுத்தாலும், பேச்சாலும் உடல் உழைப்பாலும் தொண்டாற்றியிருக்கிறார்.

## சென்னையை காப்பாற்றினர்!

1953ம் ஆண்டு ஆந்திரம் பிரிய இருந்த நேரத்தில் சென்னையைக் காப்பாற்றிய பெருமையும் ம. பொ. சி. அவர்களுக்கே உரியது. சென்னை நகரில் ஆந்திர அரசிற்கும் இடம் கொடுப்பது என்று மத்திய அரசின் முடிவுக்கு எதிராக பலமான கிளர்ச்சியை நடாத்தி அன்று சென்னை முதலமைச்சராக இருந்த ராஜாஜி அவர்களின் கையைப் பலப்படுத்தினர்.

1956ம் ஆண்டு ராஜ்யங்களை மொழி வாரியாகத் திருத்தி அமைக்க வேண்டுமென்ற கோரிக்கைக்கு எதிராக தென்னகத்தில் தட்சிணப்பிரதேசம் அமைக்க மத்

(9-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வந்துள்ள இந்திய தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சி. அவர்களை இலக்கியவாதி என்ற முறையிலும் அரசியல்வாதி என்ற முறையிலும் நம் நாட்டவர்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள். என்றாலும் இளைஞர் சமுதாயம் அவர் பற்றிய பூர்வீகத்தை நன்கு தெரிந்து கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன் இக்கட்டுரையை 'பூங்குன்றன்' வரைந்துள்ளார். கட்டுரையில் ம. பொ சி. யின் ஆரம்ப வாழ்வு ஓரளவு தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.


அவசியமுள்ளவர்கள் யார்?

★ உத்தியோகத்தில் உங்களுக்கு நல்ல வெற்றி வேண்டுமா?
★ எதிரிகளை வெற்றிகொள்ள வேண்டுமா?
★ ஆண், பெண் விருப்பப்படி மணம் புரிய உதவி வேண்டுமா?

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே எங்களுக்கு கடிதமெழுதுங்கள்.

விலாசம்:-
பண்டார மந்திராச்சாரியார்
அன் கம்பெனி,
தலாவ (வழி) அநுராதபுரம்.

சகோதர, சகோதரிகளே!!

எவ்வளவு நல்ல உணவுகளைச் சாப்பிட்டாலும் உங்கள் உடம்பு தெம்பு குறைந்து மெலிந்து கொண்டே போகிறதா?

கை, கால் அசதி, வெள்ளை விழுதல்—பல் ஈறு கரைதல், மூத்திரக்கோளாறுகள், கெட்ட கனவுகளின் தொல்லை ஆகிய வியாதிகளுக்கும் கைகண்ட மருந்து ஆகும்.

ஸ்பெமடோன் கொம்பவுண்ட் (ஆண்களுக்கு)
லியூகோ கொம்பவுண்ட் (பெண்மணிகளுக்கு)
8 அவுன்ஸ் போத்தலின் விலை ரூ. 3-50
(தபால் தனி)

டாக்டர்
மோடர்ன் மெடிகல் ஹால்
மௌலானா கட்டிடம்,
192, இரண்டாம் குறுக்குத்தெரு,
கொழும்பு—11.

# சிங்களம் போதிப்பதற்கு தமிழரசார் காட்டிய எதிர்ப்பு

—————0—————

## "நாச வேலை" என்கிறது ஜனதின

"வட-கிழக்கு மாகாணங்களுக்கு சிங்கள ஆசிரியர்கள் நியமனம் செய்வதைத் தமிழரசுக்கட்சி ஆரம்பத்திலிருந்தே எதிர்த்து வந்தது. அந்த எதிர்ப்பைச்சட்டைசெய்யாமல், தேசபக்தியுள்ள மூன்று சோசலிச அரசாங்கங்களும் நாடு முழுவதும் சிங்களம் போதிப்பதற்கான முயற்சியில் இறங்கின. ஆனால் அதற்கு தமிழரசுக்கட்சி எத்தகைய ஒத்துழைப்பும் கொடுக்கவில்லை. அவர்கள் நாசவேலை செய்தனர்" என்று 'ஜனதின' 3-6-66ந் திகதி எழுதியதலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

தலையங்கம் மேலும் கூறுவதாவது:-

'தமிழரசுக்கட்சி இன்று அரசாங்க அதிகாரத்தை மேறசொண்டிருப்பதால் அவர்களைப் பயத்துடனும், குறைந்த நம்பிக்கையுடனும் நோக்குப் தமிழ்மக்கள்இன்று சிங்களம் படிப்பதால் ஏற்கனவே கொண்டிருந்ததை விடக் குறைவான ஆர்வமே கொண்டுள்ளனர். இலங்கையைத் தமிழ் ராஜ்யமாக்கும் நோக்கத்தைக் கொண்டுள்ள தமிழரசுக்கட்சி பிரதம மந்திரியினதும், மல்வத்தை மாநாயக்க தேரோவினதும் ஆசியைப் பெற்றுக்கொண்டுள்ளது.

'இதற்கிடையே, சிங்களம் படிப்பதைப் பகிஷ்கரிப்பதற்காகத் தமிழரசுக்கட்சி சட்ட விரோதமாகவும் செயலாற்றுகிறது. அத்துடன், 7-கட்சி கூட்டாட்சியின் தமிழ் மொழிச் சட்டத்தால் சிங்கள அரசகருமமொழிச் சட்டம் நாசமாக்கப்பட்டிருப்பதால், தமிழ்மொழிக்கு இந்நாட்டில் முதலிடம் கிடைத்துள்ளது.

'தமிழரசுக்கட்சியின்நோக்கங்களைக்கண்டு தமிழர்களை விட முஸ்லிம் மக்கள் பெரிதும்பீதிகொண்டிருப்பது ஆச்சரியமன்று. பிரதம மந்திரி வெள்ளையடிக்க எவ்வளவு தான் முயன்றாலும், வகுப்புவாதத்தால் ஏழுகட்சி கூட்டு நாற்றமெடுத்துள்ளது.

'முஸ்லிம்களின் கல்விக்கு, அவர்களின் தொழில் வசதிக்கு எவ்வளவு தடைகளும், முட்டுக்கட்டைகளும் 1956க்கு முன்பு ஏற்பட்டதென்பதுஅனைவருக்கும்தெரியும். 1956-65ல் இத்தடைகள் எவ்வளவு தூரம் நீக்கப்பட்டன என்பதையும் மறக்க முடியாது. 1965க்குப் பிறகு தமிழரசுக்கட்சி பிரதமரின் அதிகாரத்தைத் தனக்குத் தேவையானபடி உபயோகிப்பதால் முஸ்லிம் மக்களின் நிகழ்காலம் இருளடைந்துள்ளதென்பதை அவர்கள் அறிந்துள்ளனர்.

'இச்சூழ்நிலையில் சிங்கள மொழியைப் படித்து நம் நாட்டில் பெரும்பான்மையோரான சிங்கள மக்களின் நியாயமான அபிலாசைகளுக்குத் துரோகம்செய்யாமல், அமைதியாக வாழ்வதற்கான விருப்பம் முஸ்லிம் மக்களிடையே புத்துயிர் பெற்றுள்ளது ஆச்சரியமன்று. சிங்களம் படிப்பதற்கு முஸ்லிம் மக்கள் காட்டும் ஆர்வத்துக்கு சாத்தியமான அளவு ஊக்கமளிப்பது தேசபக்தியுள்ள சமதர்மிகளின் கடமையாகும்.'

## இராஜரத்ன விலகுவார்?

"மீன் பிடி அமைச்சருக்கும் மீன் பிடிக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. கே. எம். பி. இராஜரத்னவுக்கு மிடையே ஏற்பட்டுள்ள தகராறின் விளைவாகத் திரு. இராஜரத்ன பதவியிலிருந்து விலகத் தீர்மானித்துள்ளாராம். அவரைத் திருப்தி படுத்துவதற்காக, பின்னர் அவர் எண்ணெய்க் கூட்டுத்தாபனத் தலைவராகவும், சுப்பிரமணியம் என்பவர் மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் நியமிக்கப்படலாமென்று அறியப்படுகிறது"

— ஜனசத்திய (31-7-66)

## மாஜி பிரதமர் பற்றிவிசாரணை

"திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமராக இருந்தபோது, அவர் சென்ற பயணங்கள், தங்கியிருந்த நாட்கள், சந்தித்த நபர்கள், இரகசியப் பேச்சுவார்த்தைகளில் பங்கு பற்றினரா, நடத்திய சம்பாஷணைகள், அவருடன் சென்றவர்கள், அவர் பங்குபற்றிய பௌத்த சங்கங்கள் சந்தித்த பௌத்த தலைவர்கள் முதலிய விபரங்கள் பற்றி இராணுவத்தின் பாதுகாப்புப் பிரிவைச்சேர்ந்தவர்களிடம் அரசாங்கம் விசாரணை செய்து வருகிறது. இதுவரை 200 இராணுவத்தினருக்கு மேல் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

திருமதி சிறிமாவுக்கெதிராகசிலஇராணுவத்தினரிடம் பொய் வாக்குமூலம் வாங்கவும் முயற்சி செய்திருப்பதாகவும், சிலர் அத்தகைய வாக்குமூலம் கொடுத்திருப்பதாகவும் அவர்கள் கூறினர். விசாரணை செய்வதற்காக ஒரு விசேட குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

— ஜனசத்திய (31-7-66)

## சிங்கள வகுப்பு மறைகிறது

"சிங்களம் தெரியாத அரசாங்க ஊழியர்கள் சிங்களத்தில் தேர்ச்சி பெறுவதற்காக நடத்தப்பட்டு வந்த சிங்கள வகுப்புகள் வட, கிழக்கு மாகாணங்களில் இப்பொழுது மறைந்துகொண்டுவருகின்றன. சிங்கள வகுப்புகளுக்கு இத்துரதிர்ஷ்ட நிலைமை கடந்த ஆண்டில் தான் ஏற்பட்டுள்ளதென்பது அரச மொழி இலாகா நிர்வாக அறிக்கையிலிருந்து தெளிவாகிறது"

— தவச (2-8-66)

## சிங்கள இதழ்களில் . . .

## வடபகுதிக் காணிகள் தமிழர்களுக்கு மட்டுமே

"யு. என். பி.—தமிழரசு ஏழுகட்சிகூட்டரசாங்கம் வட, கிழக்கு மாகாணங்களில் இதுவரை காணிகள் வழங்குவதை தமிழ் மக்களுக்கு மட்டுமே வரையறுத்திருக்கிறது. அத்துடன், மாவட்டசபைகள் அமைக்கப்படும்வரை சிங்களவர்களுக்கு காணி வழங்குவதில்லை என்று உள்ளூராட்சி அமைச்சர் திரு. திருச்செல்வம் தீர்மானித்திருக்கிறார்" என்று 'ஜனதின' (28-7-66) ஒரு செய்தியை வெளியிட்டிருந்தது.

'பெரியகுளத்தைபொட்டியுள்ள காணிகள் சிங்களவருக்கு வழங்குவதற்காக காணிக் கச்சேரிகள் மூன்று நடத்தப்பட்டதெனினும், அமைச்சரின் கட்டளையால் அவை திடீரெனக் கைவிடப்பட்டன.

பெரியகுளத்தில் புராதன பௌத்தாலயத்தைச் சுற்றியுள்ள காணிகளை சிங்களவர்களுக்கு மட்டும் வழங்குவதற்கு முன்னாள் அரசாங்கம் செய்தமுடிவைச்செயல்படுத்துவதற்கு முக்கிய முட்டுக்கட்டையாக இருப்பது தமிழரசுக்கட்சிதான்' என்று அந்தப் பிரதேசத்து மக்கள் கூறுகின்றனர்.

காணிகள் பெறுவதற்கான விண்ணப்பப் பத்திரங்களைக் கோரும் அறிவிப்புதமிழிலும் ஆங்கிலத்திலும் மட்டும் வெளிபிடுவதாகும். அத்தகைய அறிவிப்பு வெளியிடமுன்பே கச்சேரியில் கடமையாற்றும் தமிழ் அதிகாரிகள் காணி வழங்குவதற்கான எல்லா விபரங்களையும் தங்களின் சகாக்களிடம் கூறி விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்வது, இந்தத் தந்திரத்தின் முக்கிய அம்சமாகும்.

சிங்களத்தில் அறிவிப்பு வெளியிடப்படாததால், குறிப்பிட்ட திகதியில் விண்ணப்பம் சமர்ப்பிக்க முடியாமல் போவதால் சிங்களவர்கள் பிறகு தவிக்கின்றனர்" என்று 'ஜனதின'ச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ் விடயம்பற்றி திருமலை பௌத்தாலயத்தைச் சேர்ந்த வண. பலப்பிட்டிய சாந்ததேரோ பிரதமருக்கும் டாஜாங்க அமைச்சருக்கும் புகார்செய்யமுயன்றாரெனினும், அவர்கள் அவருடன் பேசநேரமில்லைஎன்று கூறியதால், அவரது முயற்சி பலிக்கவில்லை என்றும் 'ஜனதின' எழுதுகிறது.

## த. அ. வா. மு. 11-வது மாநாடு

இலங்கைத் தமிழரசு வாலிப முன்னணியின் 11-வது மாநாட்டை இம் மாதம், பிற்பகுதியில் மாவிட்டபுரத்தில் நடத்த வாலிப முன்னணியின் செயற்குழு முடிவு செய்துள்ளது.

இம்மாநாடு நடைபெறும் சரியான திகதி 8-8-66-ல் கூடும் செயற்குழுவில் முடிவு செய்யப்படும்.

இம் மாநாட்டில் இராசாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கலந்து கொள்ளவிருக்கிறார்.

## காங்கேசன்துறைத் தொகுதி மாவட்டக் கிளை தமிழரசு வாலிப முன்னணி அலுவலர்கள்

தலைவர்: இ. தங்கராசா, உபதலைவர்கள்: சி. பாலசுப்பிரமணியம், வே. சின்னத்துரை, பொருளாளர்: க. மகேந்திரா, ஆட்சிக் குழு உறுப்பினர்கள்: க. பாலசுப்பிரமணியம், க. வ. இராமலிங்கம், வ. நடராசா, சு. இராசநாயகம், ந. நாகராசா.


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல், மேல் கால், கை, கணுக்கவில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 6-00 சிறியது ரூபா 3-25

இத்துடன் "ஆனந்தா தைலத்தை" த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 6-00 சிறியது ரூபா 3-25

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11

உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஷல்'

(போலிகளை வாங்கி ஏமாறாதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடமிருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,
கொழும்பு-11

# பிரிவினைத் தடைச் சட்டமும்— எதிர்க்கட்சிகள் உடன்பாடும்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் உயிர் நோக்காக திராவிட நாடு பிரிவினைக் கோரிக்கை இருந்தபொழுது தி. மு. கழகம் பெற்றிருந்த செல்வாக்கிலும் பார்க்க அக் கோரிக்கையைக் கைவிட்ட பின்னர் கழகம் பரவலான செல்வாக்கை சகலரிடமும் இருந்து பெற்றிருக்கிறது. இதற்கு தமிழரசுக் கழகம் தி. மு. கழகத்துடன் செய்துள்ள தேர்தல் உடன்பாடு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்.

சிலப்புச் செல்வர் ம. பொ. சி. அவர்களைத் தலைவராகக் கொண்டு உங்கும் தமிழ் நாடு தமிழரசுக்கழகம் இந்திய காங்கிரஸ் கட்சியின் ஒரு செல்வக்குழந்தை என்றே பலரும் வர்ணித்து வந்திருக்கிறார்கள். தமிழரசுக் கழகம் காந்தியத்தின் மீது கொண்டிருக்கும் பற்றும், இந்திய துணைக் கண்டத்தின் ஒற்றுமையில் வைத்திருக்கும் நம்பிக்கையுமே இதற்குக் காரணமாகும். அத்துடன் தமிழரசுக் கழகம் பல பிரச்சினைகளில் காங்கிரஸ் கட்சியுடன் வேறுபட்டு நின்ற போதிலும், தேர்தல் காலங்களில் நேரடியாகப் போட்டியிடாது காங்கிரஸ் கட்சியையே ஆதரித்துவந்திருக்கிறது.

### பிரிவினை தடுக்கப்பட்டபின்...

இந்தி மொழிப் பிரச்சினையிலும் தமிழரசுக் கழகத்தின் நிலை ஓரளவு காங்கிரசின் நோக்கத்திற்குச் சாதகமானதாகவே இருந்து வருகிறது. இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்ற காலத்தில் திரு ம. பொ. சி. அவர்கள் பகிரங்கமாகவே இப்போராட்டம் ஆங்கிலத்திற்குச் சாதகமானது என்று குற்றஞ் சாட்டியிருக்கிறார். இங்ஙனம் தி. மு. கழகத்துடன் பல வழிகளிலும் முரண்பட்டு நிற்கும் தமிழரசுக் கழகம் அதன் வரலாற்றில் முதல் தடவையாக எதிர்க் கட்சிகளுடன் குறிப்பாக தி. மு. கழகத்துடன் தேர்தல் உடன்பாடு செய்திருக்கிறது.

தமிழரசுக் கழகத்தின் இம்முடிவு தமிழ்நாட்டில் காங்கிரசின் எதிர்காலம் பிரகாசமானது அல்ல என்பதை எடுத்துக்காட்டப் போதுமானதாகும். தமிழரசுக்கழகம் போன்ற இயக்கங்கள் கடந்த தேர்தல் காலங்களிலேயே காங்கிரசின் போக்கில் வெறுப்புக் கொண்டிருந்தன. என்றாலும் தி மு. கழகத்தின் பிரிவினைக் கோரிக்கையால் இவ்வியக்கங்கள் காங்கிரசைவிட்டு தூரச்செல்ல முடியாத நிலையில் இயங்கி வந்தன. இப்பொழுது பிரிவினை சட்டமூலமாகத் தடுக்கப்பட்டிருப்பதுடன், எதிர்கட்சிகளும் அக்கோரிக்கையை கைவிட்டுள்ள காரணத்தால் தமிழரசுக் கழகம் போன்ற இயக்கங்கள் புதிய உத்வேகத்துடன் செயல்பட சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

1967ம் ஆண்டுப் பொதுத்தேர்தல் தமிழ் நாட்டில் காங்கிரஸ் நிர்வாகத்திற்கு ஒரு பெரிய சோதனைக்காலம். காங்கிரஸ் தலைவர்களே இதை நன்கு உணர்ந்திருக்கிறார்கள். காங்கிரஸ் தலைவர்களின் பேச்சு அவர்களின் மனப்பயத்தைபடம் பிடித்துக்காட்டுவதாக இருக்கிறது.

## இந்திய தேர்தற் களம் நமது நிருபர்

கடந்த பொதுத் தேர்தலில் தி. மு கழகம் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை கழகத்தின் வளர்ச்சியை மிகத் தெளிவாக படம் பிடித்துக் காட்டுவதாக இருக்கிறது. அத்துடன் 1962ம் ஆண்டுப் பொதுத் தேர்தலின பின்னர் கழகம் நடாத்திய போராட்டங்கள் அனைத்திற்கும் மக்களின் ஆதரவு வேண்டிய மட்டும் கிடைத்திருக்கிறது இத்துடன் எதிர்கட்சிகள் மத்தியில் தோன்றியிருக்கும் தேர்தல் உடன்பாடும் சேர்ந்து காங்கிரசின் பயத்தை பலமடங்கு அதிகரிக்கச் செய்திருக்கிறது.

### தி. மு. க., காங்கிரஸ்

1962ம் ஆண்டுத் தேர்தலில் தி. மு. கழகம் 33 இலட்சம் வாக்குகளையும் காங்கிரஸ் 52 இலட்சம் வாக்குகளையும் பெற்றது. ஆனால் காங்கிரஸ் 52 இலட்சம் வாக்குகளை பெற்றுள்ள தனை தொகுதிகளைக் கைப்பற்றியதோ அதே விகிதம் தொகுதிகளைத் தி. மு. கழகம் வெற்றிபெற முடியவில்லை காங்கிரஸ் பெற்ற வெற்றி விகிதத்தில் தி. மு. கழகமும் வெற்றி பெற்றிருந்தால் கடந்த தேர்தலில் தி. மு. கழகம் குறைந்தது 76 தொகுதிகளையாவது கைப்பற்றியிருக்க வேண்டும். ஆனால் தி. மு. கழகம் 51 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றது. இப்பொழுது எதிர்க்கட்சிகளுக்கிடையில் ஏற்பட்டிருக்கும் தொகுதிஉடன்பாட்டுடன் கடந்த தேர்தலின்போது தி. மு. கழகம் பெற்ற வாக்குகளை மட்டுமே இம்முறை பெற்றாலும்கூட காங்கிரஸ் நிர்வாகம் ஆட்டம் காணுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

கடந்த பொதுத் தேர்தலின்போது ஏற்பட்ட எதிர்க்கட்சி முக்கூட்டணியுடன் தமிழரசுக் கழகம், கம்யூனிஸ்டுக்கட்சி (இடது சாரா) ஆகியனவும்தொகுதி உடன்பாடு கண்டிருக்கின்றன. இந்த சூழ்நிலையில் தி. மு. கழகம் வெற்றிப் பாதையில் நடைபோடுவதை காங்கிரஸ்கட்சி அத்தனை சுலபமாகத் தடுத்துவிடும் என்று கூறிவிடமுடியாது.

தி. மு. கழகம் ஒரு கலாசார இயக்கமாக ஆரம்பித்து இன்றுபலம்பொருந்திய அரசியல் கட்சியாக மாறியிருக்கிறது 1952ம் ஆண்டுத்தேர்தலில் தி. மு. கழகம் நேரடியாக போட்டியிடவில்லை. அப்பொழுது சில உடன்பாட்டின் கீழ் கம்யூனிஸ்டுகளையும், சில சுயேட்சைவாதிகளையும் கழகம் ஆதரித்துப் பிரச்சாரம் செய்தது.

### தி. மு. க. வளர்ச்சி

முதல் தடவையாக 1957ம் ஆண்டுத் தேர்தலிலேயே கழகம் போட்டியிட்டது. அப்பொழுது கழகம் 15 சட்டமன்றத் தொகுதிகளையும் 2 பாராளுமன்ற தொகுதிகளையும் வெற்றிகொண்டது. அம்முறை கழகம் 14 இலட்சம் வாக்குகளைப்பெற்றது. 1962ம் ஆண்டுத் தேர்தலில் கழகம் 51 சட்டமன்றத் தொகுதிகளையும், 8 பாராளுமன்றத்தொகுதிகளையும் வெற்றி கொண்டு 33 இலட்சம் வாக்குகளைப் பெற்றது. அத்துடன் சென்னை மாநகராட்சியை தொடர்ச்சியாக இரண்டுமுறைகழகம் கைபற்றிவிட்டது. வேறு பல உள்ளூராட்சி மன்ற நிர்வாகங்களும் கழகத்தவர் கையிலே இருக்கின்றன. இத்தனை வளர்ச்சியுடன் கழகம் 1967ம்ஆண்டுப் பொதுத் தேர்தலை நோக்குகிறது




மலச் சிக்கல் மற்றும் அஜீரணக்கோளாறுகளுக்கு

## ரிஷிலேகியம்

66 வருடங்களாகப் புகழ் பெற்றதும் வைத்திய பரம்பரை ஆயுர்வேத டாக்டர் F. H மதுரநாயகம் வைத்தியராஜ் அவர்களால் தயாரிக்கப்பட்டதுமான அபூர்வ சஞ்சீவி.

ரிஷி லேகியம் நாள்தோறும் மலத்தை ஒழுங்காக வெளியேற்றி, கைகால் அசதி, கை கால் கணுக்களில் வலி, தேக காங்கை, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வாய்வு, வாதம், திரேகமெலிவு, பசியின்மை, கண் எரிச்சல, நெஞ்செரிவு, வாய்ப்புண், சோம்பல், சூதக சிக்கல், உள்மூலம், வெளிமூலம், இரத்த சீழ்மூலம் முதலிய வியாதிகளை அதிவிரைவாக குணப்படுத்துகிறது. ஆபரேசனின்றி மூலவியாதியை குணப்படுத்த விரும்புவோர் ரிஷி லேகியம் சாப்பிட்டால் உடன் பலனடைவர். சுகபேதியாகவும் உபயோகிக்கலாம். பத்தியமில்லை.

**15 நாள் மருந்து ரூ. 3-50**

**30 நாள் மருந்து ரூ. 6·50**




ரிஷி நேத்திர சஞ்சீவியின் புதிய விலை:

**6 அவுன்ஸ் பாட்டல் 3·50**

**12 „ „ 6·50**


# "இளைஞர் கையிற்தான் இனத்தின் விடுதலை"

## த. வா. மு. ஆண்டுக்கூட்டத்தில் திரு. செ. இராசதுரை பேச்சு

## புதிய நிர்வாகத்தினர் தெரிவு

"ஒரு இனத்தின் விடுதலை அந்த இனத்தின் ஒவ்வொரு வாலிபனின் உள்ளத்திலே தான் தங்கியுள்ளது. வாலிபன் — விடுதலையின் பிறப்பிடம். வீரத்தின் சின்னம் அவனே! எமது தமிழ் பேசும் வாலிபர்கள், எந்தவொரு சந்தர்ப்பத்திலும், தமது மொழியையும் கலாசாரத்தையும், பேணிவளர்த்து வரவேண்டும். நமது ஒவ்வொரு, மூச்சிலும் பேச்சிலும், இலட்சிய உறுதியே காணப்படவேண்டும். வாலிபர்களின் உரமிக்க உழைப்பினால் தான் தமிழ் பேசும் இனம் தனது விடுதலையைப் பெற முடியும்" இவ்வாறு தமிழரசு வாலிப முன்னணியின் வருடாந்தக் கூட்டத்தில் பேசிய மட்டக்களப்புப் பிரதிநிதி திரு. செ. இராசதுரை கூறினார்.

இலங்கைத் தமிழரசு வாலிப முன்னணியின் 11-வது வருடாந்தப், பொதுக் கூட்டம் 23-7-66 பி. ப. 4மணிக்கு கட்சித் தலைமை அலுவலகத்தில் திரு. நா. செல்லையா தலைமையில் கட்சியின் தேசிய கீதத்துடன் ஆரம்பமாகியது.



துணைச் செயலாளர் திரு. க. சினனத்துரை

சென்ற கூட்ட அறிக்கையும், வருடாந்த வரவு, செலவு, அறிக்கையும், கடந்த காலத்தின் செயல் திரட்டுகளும் வாசிக்கப் பட்டன.

### புதிய நிர்வாகிகள்

இதன் பின் புதிய உத்தியோகத்தர்கள் தெரிவின் போது, மட்டக்களப்பு பிரதிநிதி திரு. செ. இராசதுரை அவர்கள் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப் பட்டார். அடுத்து செயலாளராக கொக்குவில் கிராம சபை அங்கத்தவரும் கட்சியின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவருமான திரு. ந. அருணாசலம் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். பொருளாளராக வாலிப முன்னணியின் முன்னாள் செயலாளரில் ஒருவரும், கட்சியின் தொண்டர்களில் ஒருவருமாகிய திரு சோ. சிவரத்தினம் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். உபதலைவர்களாக, புங்குடுதீவு கி. ச. அங்கத்தவரும் கட்சியின் செயற்குழு உறுப்பினருமாகிய திரு. க. திருநாவுக்கரசு அவர்களும் யாழ்ப்பாணம்



துணைத் தலைவர் திரு. பி. எம். சேவியர்

(9-ம் பக்கம் பார்க்க)


## தமிழ் பேசும் மக்களை

# மத அடிப்படையில் கூறுபோடாதீர்!

## மாற்றுக் கட்சியினருக்கு தமிழரசுத் தந்தை வேண்டுகோள்

"பல ஆண்டுகளாக, வடக்கு, கிழக்கு, மலைநாடு என்றும், இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமியர் என்றும், உயர்சாதி, தாழ்ந்த சாதி என்றும் பல கூறுகளாக, பல பிரிவுகளாக, பிளவு பட்டு ஒற்றுமை இழந்து வாடி நின்ற இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களை ஒரு தேசிய இனமாக ஒன்று சேர்த்து, வேறுபாடுகளை நீக்கி ஐக்கியத்தை ஏற்படுத்தி ஒரு கொள்கையின் கீழ், ஒரு கொடியின் கீழ், ஒன்று படுத்தும் முயற்சியில், இலங்கைத் தமிழரசுக்கட்சி வெற்றி கண்டுள்ளது. இந்த முயற்சியில் தமிழரசுக்கட்சி அடைந்த இன்னல்கள் அளப்பரியது. பலரின் தியாகங்களினால் உருவாக்கப்பட்ட இந்த ஒற்றுமையுணர்ச்சியை - இந்துப்பல்கலைக் கழகக் கோரிக்கையை கிளப்புவதன் மூலம் சிலர் தகர்த்து விடப் பார்க்கிறார்கள். இவர்களைப் பற்றி தமிழ் பேசும் மக்கள் விழிப்புடனிருக்க வேண்டும்." இவ்வாறு நெல்லியடி தமிழரசு வாலிப முன்னணியின் ஆண்டு விழாவில் பேசிய தமிழரசுத்தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் குறிப்பிட்டார்.

நெல்லியடி தமிழரசு வாலிப முன்னணியின் 1வது ஆண்டு விழா சமீபத்தில் மட்டக்களப்பு முதலாவது பிரதிநிதி திரு. செ.இராசதுரை தலைமையில் நடைபெற்றது. திரு. க. ஜெயக்கொடி வரவேற்புரை நிகழ்த்தினர்.



### இராசதுரை பேச்சு

தலைமையுரை நிகழ்த்திய திரு. செ. இராசதுரை பேசுகையில் கூறியதாவது:

"வஞ்சகக் காரர்களின் சூழ்ச்சிகளினால், சின்னாபின்னப்பட்டு, சீர்குலைந்து நின்ற இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களை, ஒரு தலைவனின் கீழ் ஒன்று படுத்தியது தமிழரசுக் கட்சிதான். தமிழ் பேசும் மக்களை ஒரு முகப்படுத்தி ஒரு கட்சியின் கீழ் ஒற்றுமைப்படுத்தியதனால்தான், நமது வலிமையை, மாற்றாரும், உலகமும் உணர முடிந்தது. இன்று தமிழ் பேசும் மக்களுக்கு இந்நாட்டில் ஓரளவு கௌரவமும், மதிப்பும் ஏற்பட்டதற்குக் காரணம் தமிழ்பேசும் மக்கள், தமிழரசுக் கட்சியின் கீழ் ஒற்றுமையாக நின்றமையே. இந்த ஒற்றுமையில் ஓட்டை விழாதா, தமிழ் பேசும் மக்கள் மீண்டும் சிதறிச் சின்னாபின்னப்பட்டு போக மாட்டார்களா? என்று, சில வல்லூறுகள் காத்துக் கொண்டிருக்கின்றன. தனியே இந்துக்களுக்கு மட்டும் இந்துப்பல்கலைக்கழகம் வேண்டும் என்ற கோரிக்கையும் தமிழ் பேசும் மக்களுக்குள் மீண்டும், இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர் என்ற பேதத்தை ஏற்படுத்திவிடும்.

"ஆண்டாண்டு காலமாக, தமிழ்பேசும் மக்களின் உரிமைகளுக்கு துரோகம் செய்தவர்கள் - தமிழ் மக்களைக் காட்டிக் கொடுத்தவர்கள் இன்று மீண்டும் சமய அடிப்படையில் தமிழ் மக்களை பிரிக்க முற்படுகிறார்கள். ஒற்றுமையைக் குலைக்க முற்படும் இனத்துரோகிகளிடமிருந்து தமிழ் பேசும் மக்கள் எச்சரிக்கையுடனிருக்க வேண்டும்."

### மீண்டும் பிரிவா?

தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் பேசுகையில் கூறியதாவது:


"தமிழ் பேசும் தேசிய இனத்தின் விடுதலைக்காக தமிழரசுக் கட்சி போராடி வருகிறது. இந்நாட்டுத் தமிழ் பேசும் இனம் தனது பாரம்பரியத் தனித்தன்மையையும், கலாச்சாரத்தையும் கல்வியையும் வளர்ப்பதற்காகவே, தமிழ் பல்கலைக்கழகக் கோரிக்கையை தமிழரசுக்கட்சி முன்வைத்துள்ளது. இத் தமிழ் பல்கலைக் கழகக் கோரிக்கையை தமிழ் பேசும் இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் எம். பி.க்கள் பெரும்பாலோர் ஆதரிக்கிறார்கள். ஆனால் வடமாகாணத்திலுள்ள எமது மாற்றுக்கட்சியின் தலைவர் மட்டும் இந்து பல்கலைக் கழகம் வேண்டும் என்கிறார். பல காலமாக பிரிந்து நின்ற தமிழ் பேசும் மக்கள், ஐக்கியப்பட்டு, அதனால் அவர்களது இழந்த உரிமைகளை ஒவ்வொன்றாகப் பெற்று வரும் இந்நேரத்தில், மீண்டும் சமய அடிப்படையில் பிரிப்பது சரியா என்பதை அவர் எண்ணிப்பார்க்க வேண்டும்.

### திருமலையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஏன்?

"நாம் தமிழ் பல்கலைக் கழகத்தை திருகோணமலையில் நிறுவ வேண்டுமென கோருவது ஏன் எனச் சிலரால் புரிந்து கொள்ள முடியவில்லை. கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் மக்கள் கல்வியில் பின் தங்கியவர்களாக இருக்கிறார்கள். இவர்களின் கல்வியை முன்னேற்றுவதோடு, வடக்கு, கிழக்கு, மலைநாட்டுத் தமிழ் பேசும் மக்களின் ஐக்கியத்தைக் கட்டி காத்து வளர்ப்பதற்கும் தமிழ்ப் பல்கலைக்கழகம் உறுதுணையாக இருக்கும்."

இவ் விழாவில், தமிழரசுத் தலைவர், டாக்டர் இ. மு. வி. நாகநாதன், திரு. க. துரைரத்தினம், திரு. வி. என். நவரத்தினம், திரு. எஸ். எம். மாணிக்கராசா, திரு. சி. கதிரவேற்பிள்ளை, பண்டிதர் கா. பொ. இரத்தினம், திருமதி. மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் ஆகியோர் பேசினர்கள். இறுதியில் திரு. க. செ. சுவர்ணராசா நன்றி நவின்றார்.

இக்கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்பு, ஒரு மாபெரும் ஊர்வலமும் நடைபெற்றது.



கரவாகு தெற்கு கிராமசபையின் உறுப்பினர்களை இங்கே காணலாம். இருப்பவர்கள், இடமிருந்து வலம் ஐ. முகம்மதுதம்பி, திரு. எஸ். சுந்தரநாதம் (உபதலைவர்), ஜனாப் செ. செ. ம. மவ்லானா (தலைவர்), திரு. குலசேகரம். நிற்பவர்கள். ஜனாப் எஸ். எம். சுல்தான், திரு. இ. எல். சின்னத்தம்பி, ஜனாப் எம். எஸ். எம். அபூபக்கர், திரு. எஸ். தர்மலிங்கம். இவர்கள் எல்லோரும் தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழரசு வாலிபரின் புதிய தலைவர்

இலங்கைத் தமிழரசு வாலிப முன்னணியின் புதிய தலைவராக செந்தமிழ் செல்வர் திரு. செ. இராசதுரை பா. உ. அவர்கள் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்.

பல்லாயிரம் இளைஞர்களை தன்பால் கவர்ந்திழுக்கும் மிடுக்கான சொற்திறனும், எடுப்பான தோற்றமும் செயலாற்றும் ஆர்வமும், பழுகுதற்கினிய பண்பும்கொண்ட திரு. செ. இராசதுரை அவர்கள் இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டிருப்பது முற்றிலும் பொருத்தமானதாகும்.

தமிழரசு வாலிப முன்னணி இதுவரைகாலமும் வடமாநிலத்தில் மட்டுமே இயங்கிவந்தது. திரு. இராசதுரை தலைவராகத்தெரிவு செய்யப்பட்டதன் மூலம், இனி கிழக்கு மாகாணத்திலும் உரம்பெற்று வளர்ச்சியடையும் என்று நம்பலாம். அதுமட்டுமின்றி வடக்கு-கிழக்கு மாகாண மக்களிடையேயுள்ள உறவு இதன்மூலம் இன்னும் பலம் பெறவும் ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

தமிழரசு வாலிபர்கள் தங்களை வழிநடாத்த ஒரு ஒப்பற்ற தலைவனைத் தேர்ந்தெடுத்துள்ளனர் இப்புதிய தலைவரின் கீழ்புதிய மிடுக்கோடு இனத்துக்கும் மொழிக்கும் பணிபுரிய தமிழ் வாலிபர்கள் திரளுவார்கள் என்று எதிர்பார்ப்போமாக.


ஈழத்தில் தனிப்பெரும் சாதனையை ஏற்படுத்தி ஈடு இணையற்று விளங்குவது

கல்கி பீடி



சிறந்தது, சிக்கனமானது, சிந்தனையூட்டுவது

சோர்வு நீக்கி உற்சாகத்தை அளிப்பது
புகைக்க புகைக்க இன்பம் பயப்பது

786 கல்கி பீடிகளே

தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும்

சி. சின்னத்துரை அன் பிரதர்,

44, 3ம் குறுக்குத் தெரு, கொழும்பு.

தொழிற்சாலை: 79,79/1, மெசஞ்சர் வீதி,
கொழும்பு - 12.

# சுதந்திரன்

SUTANTIRAN

1966 ஆகஸ்ட் மாதம் 8-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் - 8411 த. பெ. 1188


## அபிவிருத்திக்கு வழிகாட்டும் திட்டம்

நிதி அமைச்சர் திரு. வன்னிநாயக்கா நேர்மையான முறையில் நாட்டுக்குச் சேவை செய்வதில் ஆர்வம் கொண்டவர். அவரது நேர்மையும், பணியாற்றும் உறுதியும், நாட்டு நலனில் கொண்டுள்ள அக்கறையும், புதிய வரவு—செலவுத் திட்டப் பிரசங்கத்திற் தெளிவாக எதிரொலிக்கின்றன. அவரிடம் படாடோபமில்லை—அவரது வரவு—செலவுத் திட்டத்திலும் படாடோபமில்லை.

நாட்டின் எதிர்கால சுபீட்சத்தைக் கருத்திற்கொண்—அதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்டதே புதிய வரவுடு—செலவுத் திட்டம். நாட்டிலே தொழில்களை வளர்த்து' விவசாயத்தைப் பெருக்கி, பொருளுற்பத்தியிலும் உணவு உற்பத்தியிலும் தன்னிறைவு காண்பதற்காக நிதி அமைச்சர் முயன்றிருக்கிறார் என்பதை அவரது வரவு—செலவுத் திட்டம் எடுத்துக் காட்டுகிறது. எனவே அதனை 'அபிவிருத்தி வரவு—செலவுத் திட்டம்' என்று கூறலாம்.

அரசாங்கத்தை எதிர்க்கும் கோஷ்டிகள் நாடெங்கினும் சென்று அரசாங்கம் அரிசிவிலையைக் கூட்டப் போவதாகவும், அரிசிப் பங்கீடு அளவைக் குறைக்கப் போவதாகவும் பிரசாரம் செய்து வந்தனர். அந்த விஷமப் பிரசாரத்துக்கு ஆப்பு அறைந்து விட்டார் நிதி அமைச்சர். இதில் ஏமாந்துபோன எதிர்க்கட்சியினர் இப்பொழுது மாவு விலையைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கின்றனர்.

அரிசி மானியம் ஒரு பெரிய பளு. அதைக் குறைத்தாலன்றி பொருளாதார அபிவிருத்திக்கான நிதியைத் தேட முடியாது என்று சில அரசாங்கப் பாராளுமன்ற உறுப்பினர்களே பகிரங்கமாகக் கூறினர். 'அரிசிமானியம்' என்னும்சனியனைத் தொலைத்துக் கட்டுங்கள் என்று சிலர் நிதி அமைச்சரை நச்சரித்தனர்.

ஆனால், நிதி அமைச்சரோ அரிசி மானியத்தில் கைவைக்காமலே அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி திரட்ட வழி அமைத்துவிட்டார். இஃது இதற்கு முன்பு எந்த நிதி அமைச்சரும் சாதிக்காத ஒரு மாபெரும் சாதனையாகும்.

அரிசி மானியத்தைக் குறைக்கவேண்டுமென்றுநல்லெண்ணத்துடன் வற்புறுத்தியவர்களின் கண்ணேட்டத்துக்கு நேர்மாருக இருந்தது நிதி அமைச்சரின் கண்ணேட்டம். அரிசி அளவை வெட்டுவதற்குப் பதிலாக இந்நாட்டிலேயே போதுமான அரிசியை உற்பத்தி செய்து, அதன் பின் அரிசி இறக்குமதியையே நிறுத்திவிடுவதுதான் நிதி அமைச்சரின் நோக்கம். அந்த நோக்கமே இந்த வரவு—செலவுத் திட்டத்தின் அடிப்படை. வரவு—செலவுத் திட்டத்தில் விவசாய அபிவிருத்திக்கு ரூபா 20 கோடிக்குமேல் ஒதுக்கியிருப்பதற்கும் அதுதான் காரணம்.

தேசிய அரசாங்கத்திற்கு விவசாயத்தில் மட்டுமே அக்கறை—தொழில் வளர்ச்சிபற்றி அவர்களுக்குச் சிரத்தை கிடையாதென்றெல்லாம் எதிர்க்கட்சியினர் பிரசாரம் செய்து வந்தனர். அந்தப் பிரசாரத்துக்கும் முற்றுப்புள்ளி வைத்துவிட்டார் நிதி அமைச்சர். தொழிற்சாலைகளை விஸ்தரிக்கவும், புதிய இயந்திரங்களையும் மூலப் பொருட்களையும் இறக்குமதி செய்யவும் புதிய வரவு—செலவுத் திட்டத்தில் பெருந்தொகையான பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தொழில் வளர்ச்சியும், விவசாய அபிவிருத்தியும் வரவு—செலவுத் திட்டத்தில் கைகோர்த்துச் செல்கின்றன. இத்தகைய அபிவிருத்திகளைச் செய்வதற்காகவே ஓர் முத்தல் மாவுக்கு 5 சதம் தியாகம் செய்யும்படி நிதி அமைச்சர் மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தே தீருவதென்று உறுதி பூண்டு, தீவிரமாகச் செயலாற்றி வரும் தேசிய அரசாங்கத்துக்காக ஒரு 5 சதத்தைத் தியாகம் செய்ய மக்கள் தயங்கமாட்டார்களென்பதுதிண்ணம். இந்த 5சதத்தை ஆயுதமாகக் கொண்டு அரசாங்கத்தை வீழ்த்திவிட எதிர்க்கட்சியினர் செய்யும் முயற்சி நிச்சயம் வெற்றிபெறாது.

தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோது நமது வெளிநாட்டு ஆஸ்தி சுமார் ரூபா 30 கோடிதான் இருந்தது. ஆனால் 1965 இறுதியில் அது 40 கோடியாக உயர்ந்துவிட்டது. இது கடந்த ஓராண்டில் தேசிய வருமானம் அதிகரித்திருப்பதையும், நாடு சுபீட்சப்பாதையில் செல்வதையுமே எடுத்துக்காட்டுகிறது.

அத்துடன் கடந்த ஆண்டில் தேசிய அரசாங்கம் வாழ்க்கைச் செலவைப் பெருமளவு குறைக்காவிட்டாலும், அது மென்மேலும் உயர்ந்துகொண்டு போவதைத் தடுத்து நிறுத்தியுள்ளது. வாழ்க்கைச் செலவு புள்ளி குறைந்து வருவதே அதற்குச் சான்று. பொருளாதாரப்படுகுழியில் தள்ளப்பட்டிருந்த நாட்டைக் கைகொடுத்து தூக்கிவிட்டு, ஒரே ஆண்டில் அதை சுபீட்சப்பாதையில் செலுத்தியது ஒரு மகத்தான சாதனையாகும். அதற்கென ஓர் அபிவிருத்தி வரவு-செலவுத் திட்டம் தயாரித்திருப்பது அதைவிடப் பெரிய சாதனையாகும்.

வரவு-செலவுத் திட்டத்தில் சுமார் ரூபா 90 கோடி துண்டுவிழுகிறது. இத் தொகையைச் சரிக்கட்டுவதற்காக நிதி அமைச்சர் புதிய வரிகளை விதிப்பார் என்றுபவர் எதிர்பார்த்து ஏமாந்தனர். ஏழைகளை வாட்டும் [illegible] முட்டையிடும் வாத்தைக் கொல்லவும் அமைச்சர் முயற்சி செய்யவில்லை.

கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் மண்ணெண்ணெய்விலை குறைக்கப்பட்டது. அதுமக்களுக்குப்பெரும் ஆறுதலாயிருந்தது. அம்மாதிரியான சலுகை எதுவும் புதிய வரவு-செலவுத் திட்டத்தில் இல்லாவிட்டாலும், வரிப்பளு கூட்டப்படவில்லை. எனவே வரிப்பளுவின்றி பொருளாதார சுபீட்சத்தைக் கொண்டுவரும் இந்த வரவு-செலவுத் திட்டத்தை மக்கள் மனநிறைவுடன் வரவேற்கின்றனர்.

வெளிநாட்டினர் இலாபத்தைத் தத்தம் நாடுகளுக்குக் கொண்டுசெல்ல நிதி அமைச்சர் அனுமதித்திருப்பதின் மூலம், வெளிநாட்டு மூலதனம் இந்நாட்டினுள் தங்குதடையின்றி நுழைய வழிவகுத்துள்ளார். பின்தங்கிய நாடாகிய இலங்கையின தொழில் வளர்ச்சிக்கு வெளிநாட்டு மூலதனம் அத்தியாவசியமாகும். இங்குள்ள அன்னிய வாங்கிகளின் மீது குறுகிய நோக்குடன் முன்னாள் அரசாங்கம் விதித்திருந்த கட்டுப்பாடுகளை நிதி அமைச்சர் தளர்த்தியுள்ளார். இதன் மூலம் இந்நாட்டின் தொழில் வளர்ச்சியில் பங்குபற்றும் வாய்ப்பு அந்த வங்கிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திக்குப் புதிய வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கியிருப்பது ஒரு முக்கிய அம்சமாகும். தமிழ்ப்பேசும் மக்களின் ஒருநீண்டகாலத் தேவை இதன்மூலம் நிறைவேற்றப்படுகிறது. வடபகுதியில் ஆஸ்பத்திரிகளின் சிரமைப்புக்கும் ரூபா 30 லட்சம் வரை ஒதுக்கப்பட்டிருக்கிறது. கடற்றொழிலுக்குப் பெருந்தொகையான பணம் ஒதுக்கியிருப்பதால் புதிய வருடத்தில் மீன்பிடித் தொழில் விருத்தி அடையுமென்பதில் ஐயமில்லை. வீடு கட்டுவதற்காக ஒருவர் அரசாங்கத்திடமிருந்து ரூபா 15,000 வரை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது. இத்தொகையை ரூபா 18,000 வரை உயர்த்தியிருப்பதின் மூலம் வரவு-செலவுத் திட்டம் வீடமைப்புக்கும் ஊக்கமளித்துள்ளது.

சுருங்கக்கூறின், மக்கள்மீது பாரத்தைச் சுமத்தாமல் அபிவிருத்திக்கு வழிகாட்டியிருக்கும் புதிய வரவு-செலவுத் திட்டம் [illegible] ஒரு சிறந்த திட்டமாகும்.

# பிரதமர் திட்டத்தையே ஜீ. ஜீ. ஏற்க மறுத்தார்

# சிறுமதியாளர் செயலால் தமிழினம் தலை குனிகிறது

தமிழ் பேசும் மக்களின் அன்பை ஒரு முகமாகப்பெற்ற இலங்கைப் பிரதமர் வட பகுதிக்கு நாளை (9-8-66) அடியெடுத்து வைக்கிறார்.

கையில் கறுப்புக் கொடி ஏந்தி 'திரும்பிப்போ' என்று முன்னாள் அமைச்சர்களுக்கு எதிர்ப்புக் காட்டிய தமிழ் பேசும் மக்கள் இன்று மலர்மாலை ஏந்தி வாயில் வாழ்த்தொலி எழுப்பிக் கொண்டு திரு. டட்லி சேனநாயக்காவை வரவேற்க வரிசையாக நிற்கிறார்கள். பிரதமருக்கு தங்கள் அன்பையும் ஆதரவையும் தெரிவிக்க எத்தனை பேருக்கு இம் முறை சந்தர்ப்பம் கிடைக்கவிருக்கிறது என்பது பெரும் கேள்வியாக இருக்கிறது.

வட மாநிலத்தில் உள்ள பதின் மூன்று தொகுதிகளினதும் பிரதிநிதிகள் தேசிய அரசாங்கத்தினது உறுப்பினர்களாக இருப்பதால் பிரதமரின் வருகை ஒரு பொதுவானதாக அமையும் என்று மக்கள் அனைவரும் எதிர்பார்த்திருக்கிறார்கள். ஆனால் நிலைமை அப்படியாக இல்லை. பிரதமரின் வருகையை ஏதோ தனது குடும்ப நிகழ்ச்சியாக, சொந்த விடயமாக ஆக்கிவிட்டார் யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள்.

பிரதமர் அவர்களே தமது வட பகுதி விஜயம் பொதுவானதாக சகலரும் கட்சி வேறுபாடு அற்ற முறையில் கலந்து கொள்ளக் கூடியதாக ஒரு திட்டத்தைத் தயாரித்து சம்பந்தப்பட்டவர்களிடம் கொடுத்திருந்தார். பிரதமரின் திட்டத்தைக் கண்ணுற்ற தமிழரசு பா. உறுப்பினர்கள் அதன் பிரகாரம் ஒழுங்குகளைக் கவனிப்பதாக அவருக்கு உறுதி கூறி ஒழுங்குகளை மேற்கொள்ளத் தொடங்கினார்கள்.

### ஜீ. ஜீ. ஏற்ற திட்டம்

யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. பொன்னம்பலமோ அத் திட்டத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும், பிரதமரை அழைத்தது தானே என்றும்; எனவே பிரதமரின் வட பகுதி விஜயத்தில் தன்னைத் தவிர வேறு எவரும் பங்கு கொள்ள முடியாது என்றும் அடித்துக் கூறி விட்டார். தேசிய அரசாங்கம் பல மாதங்களுக்கு முன்னரே

சுதந்திரன் அரசியல் நிருபர்

அமைச்சர்களின் சுற்றுலா பற்றி ஒரு திட்டத்தை ஏற்றுக் கொண்டிருந்தது. அத் திட்டம் அரசாங்கக் கட்சிப் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அதனைத் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலமும் ஏற்றுக் கொண்டார்.

அமைச்சர் ஒருவர் அரசாங்கக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் தொகுதிக்கு ஊடாக உத்தியோக ரீதியில் செல்லும் பொழுது அவர் அத் தொகுதி உறுப்பினரின் விருந்தினராக இருக்க வேண்டும் என்பதே அத் திட்டம். இத் திட்டம் இன்று வரை அமைச்சர்களாலும், அரசாங்கக் கட்சிப்பிரதிநிதிகளாலும் ஏற்றுக் கொள்ளப் பட்டு வருகிறது. இத் திட்டத்தின் பிரகாரமே தமது விஜயம் அமைய வேண்டும் என பிரதமர் விரும்பினார்.

### சம்பிரதாயத்தை மீறினார்

முதலில் இருந்த ஏற்பாட்டின் பிரகாரம் பிரதமர் விமான மூலம் பலாலியில் வந்திறங்கும் பொழுது பலாலி காங்கேசன்துறைத் தொகுதிக்குள் இருப்பதால் பிரதமரை வரவேற்கும் பொறுப்பு அத் தொகுதிப் பிரதிநிதியிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது. பலாலியிலிருந்து பிரதமர் எந்த தொகுதிகளினூடாகயாழ்ப்பாணம் சென்றடைகிறாரோ அத் தொகுதி உறுப்பினர்கள் அவரின் வரவேற்பைக் கவனித்துக் கொள்வார்கள்.

இந்த ஏற்பாட்டின் வண்ணம் காலை 9 மணிக்கு பலாலியை வந்தடையும் பிரதமர் நண்பகல் 12.30 வரை தமிழரசு உறுப்பினர்களின் விருந்தினராக (பாதையில் உள்ள தொகுதிகளின் பிரதிநிதிகள் அனைவரும்தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள்) இருப்பதாகவும், அதன் பின்னர் யாழ்ப்பாணத் தொகுதிப் பிரதிநிதியின் விருந்தினராக இருக்கவும் சம்மதம் கொடுத்திருந்தார்.

இப்பொழுது யாழ்ப்பாணத் தொகுதி உறுப்பினர் தமது பொதுக்கூட்டத்தில் பிரதமர் கலந்து கொள்ள வட பகுதிக்கு விஜயம் செய்வதால் பிரதமரின் வரவேற்பு எதிலும் தமிழரசார் கலந்து கொள்ளக் கூடாது என கேட்டிருக்கிறார்.

### பிரதமருக்கு அவமானம்

திரு. ஜீ. ஜீ.யின் குறுகிய மனப்பான்மையால் தமிழ் பேசும் மக்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட இலங்கையின் முதலாவது பிரதமரின் விஜயம் முழுப்பயனும் அடைய முடியாததாகி விட்டது. இது பிரதமரை அவமானப்படுத்தும் செயலாகவும் அமைந்து விட்டதென்று அரசியல் வட்டாரங்களில் சுட்டிக்காட்டப்படுகிறது.

ஐக்கியம், ஒற்றுமை என்ற கோஷத்தைக் காலத்துக்குக் காலம் எழுப்பும் திரு. ஜீ. ஜீ. அவர்களே இன்று உலகனைத்துக்கும் நாம் ஒற்றுமையற்றவர்கள் என்பதைப் பறையறைந்துள்ளார். தமிழ்மக்கள் கீழானவர்கள், சுயநலவாதிகள் என்று சகோதர மக்கள் எண்ணக்கூடிய ஒரு நிலையை அவர் இன்று ஏற்படுத்தி வைத்துவிட்டார் என்று கூறினுல் தவருகாது.

திரு. ஜீ. ஜீ. யின் செயல் தமிழ் இனத்துக்கு மாரு அவமானத்தைமட்டும் பெற்றுக் கொடுப்பதுடன் மட்டும் நின்று விடவில்லையென்றும், யாழ்ப்பாணத் தொகுதி தவிர்ந்த ஏனைய தொகுதி மக்களின் விருப்பத்திற்கும் தடையாக அமைந்துவிட்டதென்றும் கூறலாம். பிரதமரை வரவேற்க சகலரும் ஆவல் கொண்டுள்ளனர். ஆனுல் இன்று அது நடைபெற முடியாது போய் விட்டது.

திரு. ஜீ. ஜீ. யின் இந்த பிடிவாதத்துக்கு அடிப்படைக் காரணம் உண்டு. பிரதமர் யாழ்ப்பாணத் தொகுதிக்கு மட்டும் வந்தால் வட பகுதியில் உள்ள அனைவரும் முண்டியடித்துக் கொண்டு பிரதமரைப் பார்க்க வருவார்கள், அவர்கள் அனைவரையும் தமது ஆதரவாளர்

(9-ம் பக்கம் பார்க்க)

# தலை வணங்காத்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

திய அரசு முயன்ற சமயத்தில் அதனை எதிர்த்துப் போரிட்டார். இப்போராட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட அனைத்து எதிர்க்கட்சிகளும் கலந்து கொண்டன.

## இலக்கிய ஈடுபாடு

அரசியலில் ம. பொ. சி. அவர்கள் எத்தனை தூரம் ஈடுபாடு கொண்டிருந்தார்களோ அதேயளவு ஈடுபாடு பழந்தமிழ் இலக்கியத்திலும் அவருக்கு உண்டு. பண்டிதர்களிடம் சிறைப்பட்டிருந்த சிலப்பதிகாரத்தை பாமர மக்கள் கையில் ஒப்புவித்த பெருமை அவருக்கு உண்டு. சிலம்பை மக்கள் காப்பியமாக ஆக்கியதன் எதிரொலியாக மத்திய அரசு பூம்புகாரில் கண்ணகிக்கு உருவச்சிலை எடுத்து பத்தினித் தெய்வத்தின் புகழை மேலும் பரப்பியது. 1948 ம் ஆண்டு மே த் திங்களில் நாகர் கோயிலில் கூடிய எழுத்தாளர் மாநாட்டில் பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் இவரின் பணியைப் பாராட்டி "சிலம்புச் செல்வர்" என்ற பட்டத்தை வழங்கினர்.

1799ம் ஆண்டு ஆங்கில ஆட்சியால் தூக்கிலிடப்பட்டு மாண்டு மடிந்த கட்டப்பொம்மனுக்கு 1949 ம் ஆண்டு அக்டோபர் 16-ம் நாள் முதல் முதலாக சென்னையில் விழா எடுத்தார். 1942 ம் ஆண்டிலேயே கட்டப்பொம்மனின் வீரவரலாற்றினை நூல் வடிவில் எழுதி முடித்து சிலகாலத்தின் பின் வெளியிட்டார். இந்நூலை அவரே தன்கையால் அச்சுக் கோத்து வெளியிட்டது குறிப்பிடத்தக்க ஒரு சிறப்பாகும்.

பத்திரிகையில் அச்சுக்கோக்கும் சாதாரண தொழிலாளியாக இருந்த இவர் சிறந்த பத்திரிகை யாசிரியரும் கூட. 1934-ல் 'கிராமணிய குலம்' என்ற ஏட்டை நடத்தினர். அதன் பின்னர் "தமிழ் முரசு" "தமிழ் நேசன்" ஆகிய ஏடுகளின் ஆசிரியராக இருந்திருக்கிறார். 1951-ல் "செங்கோல்" என்னும் வார ஏட்டை தொடங்கி அதன் ஆசிரியராக இருந்து இன்று வரை தொடர்ந்து நடாத்தி வருகிறார். தமிழ் நாட்டிலிருந்து வெளியாகும் ஒரு பிரபல வார ஏட்டின் ஆசிரியப் பதவியை ஏற்கும் வண்ணம் ம. பொ. சி. அவர்களுக்கு அழைப்பு வந்தது. அப் பதவியை ஏற்கின் 'செங்கோல்' ஏட்டை நிறுத்த வேண்டுமென்றும் மாதம் ரூபா 1500/= சம்பளம் கொடுப்பதாகவும் கூறப்பட்டது. ஆனல் அப்பதவியை ஏற்க அவர் மறுத்துவிட்டார்.

பேராசிரியர் கல்கி அவர்களின் மரணத்தையொட்டி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைமைப் பதவியை ஏற்று திறம்பட பணியாற்றி யிருக்கிறார். கட்டப் பொம்மன், கப்பலோட்டிய தமிழன், தமிழன் குரல், வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, வீரக் கண்ணகி, கம்பர் கவியின்பம் போன்ற அறுபதுக்கும் மேற்பட்ட வரலாற்று இலக்கிய நூல்களை இது வரை எழுதி வெளியிட்டுள்ளார். இப்பொழுதும் 'ஔவை-யார்' என்ற ஒரு பெரிய வரலாற்று ஆராய்ச்சி நூலை எழுதிக் கொண்டிருக்கிறார்.

## கழகத் தலைவர்

சகல துறைகளிலும் ஈடுபாடு கொண்டு பெருமையுடன் வாழ்ந்து வரும் இவர் 1946-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 21-ம் நாள் பாரதம் விடுதலை பெறும் நாள் நிச்சயிக்கப் படவிருந்த தருணத்தில்-விடுதலை பெற்ற இந்தியாவில் சமதர்ம தமிழ் குடியரசைக் காணும் குறிக்கோளுடன் காங்கரஸ் கட்சிக்குள்ளேயே தமிழரசு கழகம் என்ற கலாசார இயக்கத்தை நிறுவினர், அன்று முதல் கழகத்தின் தலைவராக இருந்து பணியாற்றி அதன் குறிக்கோளை அடைய உழைத்துவருகிறார். 1960ம் ஆண்டு தமிழ் நாடு பெயர் சூட்டும் போராட்டத்தை நடத்தினர். இது போன்று பல போராட்டங்களை சுதந்திர இந்தியாவின் தமிழ் நாட்டில் நடாத்திய ம. பொ. சி. இன்று தேர்தலில் நேரடியாகக் குதிக்கப்போகிறார். சட்ட சபை அவருக்குப் புதியதல்ல. இதற்கு முன்னர் நேரிடையாக தேர்தலில் குதிக்காவிட்டாலும் 1948-ம் ஆண்டு முதல் 1955-ம் ஆண்டு வரை இரு முறை ஆல்டர் மேயனுகத் தேர்ந்தெடுக்கப்பட்டு சென்னை மாநகராட்சியில் அங்கம் வகித்தார். 1952-ம் ஆண்டு சென்னை சட்ட சபைத் தொகுதியிலிருந்து மேல் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு எம். எல். சி. யாக பதவி பெற்றார்.

## தேர்தலில் நிற்கிறர்

எதிர்வரும் தேர்தலில் நேரிடையாக போட்டியிடப் போகிறார். எதிர் கட்சிகளுடன் சேர்ந்து தொகுதிஉடன்பாடும் உருவாகியிருக்கிறது. பெரும் பாலும் தமிழரசுக் கழகம் 40 தொகுதிகளில் போட்டியிடலாம் என்று நம்பப்படுகிறது. தலைவர் ம. பொ. சி. சென்னை நகரில் உள்ள பத்து தொகுதிகளில் ஒன்றில் போட்டியிடுவார். அது பெரும்பாலும் திருவல்லிக்கேணியாக இருக்கலாம்.

குப்பத்தில் பிறந்த ம. பொ. சி. இன்று மக்கள் தலைவர். அவர் தமிழ் நாட்டைக் காக்கும் பணியுடன் பிறந்தவர். அதை செய்து வருகிறார். அவரின் முயற்சி வெல்ல நாமும் வாழ்த்துவோம்.

[ஆதாரம்: 'ம. பொ. சி. மணி விழா மலர்']

# பிரதமர் விஜயம்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### திரு. பொ. வின் எதிர்ப்பு

பிரதமரைபொன்னம்பலம் கட்சியினரே முதன் முதலில் யாழ்நகரில் நடைபெறும் தமது கூட்டத்துக்கு வரும்படி அழைத்தனர் என்றும், 9-8-66 அன்று மதிய உணவு, மாலை 5 மணிக்கு பொதுக் கூட்டம் இவை இரண்டிலும் கலந்துகொள்ள மட்டுமே பிரதமர் அழைக்கப்பட்டதாகவும், அறியப்படுகிறது.

ஆனல், தமிழ்பேசும் மக்களின் கட்சியான தமிழரசுக் கட்சியினரும், தம்மை வரவேற்காவிடின், தமது யாழ்ப்பாண விஜயம் பூரணத்துவமாகாது என்பதை உணர்ந்த பிரதமர், 9ந் திகதி காலை 9 மணியிலிருந்து 12மணிவரை வரவேற்பு ஒழுங்குகளைக் கவனிக்கும்படி தாமாகவே.திரு. செல்வநாயகத்துக்குஅறிவித்திருந்தார். இச் செய்தி பத்திரிகையில் வெளிவந்ததைத் தொடர்ந்து திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம், பிரதமரிடம் உடனடியாகச் சென்று வரவேற்பு நிகழ்ச்சி எதிலும் தமிழரசார் கலந்துகொள்ளக்கூடாதெனஎதிர்ப்புதெரிவித்தாரென்று தெரிகிறது.

### சமரச முயற்சி

இதன்பின் பிரதமர் இப் பிரச்சினையில் ஒரு சமரச முடிவு ஏற்படுத்த முயற்சி எடுத்து, பலாலியில் இருந்து யாழ்நகர் செல்லும்வரை இருகட்சியினருமே சேர்ந்து வரவேற்பளிக்கலா மென்று, தமிழரசுத் தலைவர் டாக்டர் இ. மு. வி. நாகநாதனி[illegible]ம் பதத்தின்பேரில் திரு. ஜீ. ஜீ. யிடம் தெரிவித்திருந்தார் என்றும் அதற்கும் திரு. ஜீ. ஜீ சம்மதம் அளிக்கவில்லை யென்றும் தெரிகிறது.

திரு. ஜீ. ஜீ. தமது இரண்டாவது திட்டத்துக்கும் முரண்டு பிடிப்பதைக் கண்ட பிரதமர், 9ந் திகதி திரு பொன்னம்பலம் மட்டுமே வரவேற்பளிக்க சம்மதமளிக்கும்படியும், பத்தாந் திகதியன்று முழுவதும் தமிழரசாருடன்தான் இருப்பதாகவும் தமிழரசுத் தந்தைக்கு கூறினர் என்றும், தமிழரசுத் தந்தை சம்பந்தப்பட்ட ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துபேசிய பின்பு அதற்கு இசைந்து கொடுக்கவில்லையென்றுப், அவர் பிரதமருக்கு அனுப்பிய கடிதத்தில், பிரதமர், ஏற்கெனவே ஆரம்பத்தில்கூறிய திட்டப்படி 9ந் திகதி 9 மணியிலிருந்து 12 மணிவரை மூன்றுமணி நேரத்தை தமிழரசாருக்கு ஒதுக்கவேண்டுமென்றும் அப்படியின்றி பொ. கட்சி மாநாட்டில் மட்டும் கலந்துகொள்வதாகுல், கொழும்பிலிருந்து யாழ்ப்பாண நகரத்துக்கு நேரடியாகச்சென்று திரும்பவேண்டும் என்றும் கேட்டிருந்தார்.

### பிரதமர் திட்டம்

திரு. பொன்னம்பலத்தை சமாதானப்படுத்த பிரதமர் எடுத்த முயற்சிகள் எல்லாம் விழலுக்கிறைத்த நீராகவே, தமிழரசுத்தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் சமர்ப்பித்த இரண்டாவது ஆலோசனைப்படி கொழும்பிலிருந்து புகையிரதமூலம் யாழ்நகர் சென்று பொ. கட்சி கூட்டத்தில் மட்டும் கலந்துகொண்ட பின்பு அன்றே கொழும்பு திரும்பும் திட்டத்தைஅவர் ஏற்படுத்தியுள்ளார் என்று கூறப்படுகிறது.

எது எப்படியிருந்தாலும், பல ஆண்டுகளுக்கு பின்பு தமிழ்பேசும் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒரு பிரதமர், தமிழ்பேசும் மக்களின் தாயகமான வடமாகாணத்துக்கு விஜயம் செய்யும்போது, அவருக்கு பெரும்பான்மையான தமிழ் பேசும் மக்களின்வரவேற்புக் கிடைக்காமல் செய்த 'பெருமை' பொ கட்சித் தலைவரையே சாரும் என்று அரசியல் வட்டாரங்களில் சுட்டிக்காட்டப்படுகிறது.

# பொ. கட்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டதும் அவர்கள் பெருத்த ஏமாற்றத்துக்குள்ளாகியதுடன், திரு. பொ. வின் மேல் எரிச்சலடைந்துள்ளனர் என்றும் தெரிகிறது. இந்தப் பந்தல் சோடனைகளுக்கு என்று பொ. கட்சியினர் கொடுத்த பணத்தையும், பந்தல் செலவுக்கு போக விடாது சில 'குட்டிச் சாத்தான்கள்' தின்று விட்டதும், குறித்த ஆதரவாளர்களின் கோபத்துக்கு இன்னெரு காரணம் என்றும் சொல்லப்படுகிறது.

இதற்கிடையில் உடுப்பிட்டித் தொகுதியைச் சேர்ந்த —குறிப்பாக கரவெட்டியைச் சேர்ந்த திரு. மு. சிவசிதம்பரத்தின் ஆதரவாளர்கள் பொ கட்சி மாநாட்டை பகிஷ்கரிக்க முடிவு செய்திருக்கிறார்கள் என்றும் தெரிகிறது.

# இளைஞர் கையிற்றன்....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மாநகரசபை 3-ம் வட்டார முன்னாள் அங்கத்தவர் திரு. பி. எப். சேவியர் அவர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

### உபசெயலாளர்

துணைச் செயலாளர்களாக வாலிப முன்னணியின் கடந்த வருட செயலாளரும் புத்தூர் கி. ச. உறுப்பினருமாகிய திரு. க. சின்னத்துரை அவர்களும், கட்சிப் பொதுச் சபை உறுப்பினரும் திருமலை மாவட்டக் கிளை உறுப்பினருமான திரு. வீரசுப்பிரமணியம் அவர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள். இத்துடன் ஒவ்வொரு மாவட்டக்கிளைக்கும் 2 பேர் வீதம் செயற்குழு உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

கட்சியின் சென்ற நிர்வாக சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டபடி. கடந்த வருட வாலியமுன்னணி, பொருளாளரும், ஊர்காவற்றுறை தொகுதி மாவட்டக் கிளையின் காரியதரிசியுமான, திரு. சி. பாலசிங்கம், அவர்கள் வாலிப முன்னணியின் நிர்வாகச் செயலாளராக தெரிவு செய்யப்பட்டார்.

# மீண்டும் பிரதமர்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையில், உடுப்பிட்டித் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் இலங்கையிலில்லாத இந்நேரத்தில், பிரதமரை உடுப்பிட்டித் தொகுதிக்கு அழைத்துச் செல்ல சிலர் எடுத்த முயற்சிக்கு பிரதமர் சம்மதம் அளிக்க மறுத்து விட்டாரென்றும் கூறப்படுகிறது.

வெகு விரைவில் தாம் மீண்டும் வடபகுதிக்கு விஜயம் செய்து வடபகுதி முழுவதையும் சுற்றிப் பார்க்க விரும்புவதாகவும், அப்பொழுது தமிழரசார் வரவேற்பு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து கொள்ளலாமென்றும், நாகதீபத்துக்குச் செல்லவும் தாம் அதிக ஆவல் கொண்டிருப்பதாகவும் அவர் தமிழரசுத் தலைவர் திரு. செல்வநாயகத்துக்கு கூறியிருப்பதாக அறியப் படுகிறது. வடமாகாணத்தில் உள்ள 13 தொகுதிகளில் 10 தொகுதிகளை தமிழரசாரே பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# பிரதமர்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் என்று பிரதமருக்குக் காட்டி ஏதாவது பெற்றுவிடலாம் என்று எண்ணுகிறார் போலும்! திரு. ஜீ ஜீ எண்ணுகின்ற அளவுக்கு பிரதமர் அரசியல் குழந்தையல்ல. அவர் நிலைமையை நன்கு உணர்ந்திருக்கிறார். எனவே திரு. ஜீ ஜீ யின் உபாயங்கள் இங்கு பலிக்காது. ஆனல் அவர் எதிர்பார்க்கும் "ஏதாவது" தொடர்ச்சியான நெருக்குதலின் பேரில் கிடைக்கலாம்.

இன்றைய ஏற்பாடு தமிழரசாரின் பண்பட்ட, பரந்துபட்ட பொதுநல உள்ளத்தையும், திரு. ஜீ. ஜீ. யின் குறுகிய, சுயநல உள்ளத்தையும் தெளிவாக எடுத்துக் காட்டுகிறதென்றும் திரு. ஜீ. ஜீ. யின் செயல் அவரையே முதலில்சிறுமைப்படுத்திவிட்டதென்றும் கூறலாம்.

யாழ்ப்பாணத் தொகுதி வாக்காளர்கள் கடந்த தேர்தலில் விட்ட சிறு தவறுக்காக இன்று சகல தமிழ் பேசும்மக்களும் தலையில் முக்காடு போட வேண்டியேற்பட்டு விட்டது. இத்தவறை எதிர்காலத்தில் நிச்சயமாக யாழ்ப்பாணத் தொகுதி வாக்காளர்கள் விடமாட்டார்கள் என்று நம்புகிறோம்.

SATHYALAYAM'S
KASA NASINI
காஸ நாஸினி காச நாசனி

"காச நாசனி" எல்லாவிதமான இருமல்களையும், அவை, எவ்வளவு நாள் பட்டதானலும், கடுமையானதானலும், விரைவில் சுகப்படுத்துகிறது. பீனிசம், நெஞ்சுச் சளி (ப்ரோங்கைடீஸ்) சயரோகம் முதலிய வருத்தங்களுக்கும் மிகச் சிறந்தது.

"ப்றதிச்சாய தகோகாஸ:
காஸால் ஸம்ஜாயதேஹய"

என்னும் பிரமாணப்படி, பீனிசத்திலிருந்து இருமலும், இருமலிலிருந்து சயரோகமும் உண்டாகிறது. ஆதலால் இருமலை வளர விடாமல், தகுந்த மருந்தை உடனே பாவிக்க எவரும் கடமைப்பட்டிருக்கிறர்கள்.

நீண்டகால ஆராய்ச்சியின் பயனுகக் கண்டு பிடிக்கப்பட்ட இம் மருந்தின், சிக்கிரமாயும், நிரந்தரமாயும் குணமளிக்கும் தன்மை, மற்றெரு இருமல் மருந்துக்கும் இல்லை என்பதை பாவித்தவர்கள் சொல்லுகிறார்கள்.

அளவு: 15 - 25 சொட்டுகள் விகிதம் தினம் மூன்று முறை.

விலை: 1 அவு. போ. ரூ. 5/-

எஸ். என். குரு மெடிக்கல் ஹால்
80. புதுச்செட்டித் தெரு,
கொழும்பு - 13.

# அறிவித்தல்

## இலங்கைத் தொழிலாளர் கழகம்
## மூன்ருவது ஆண்டுப் பொதுக்கூட்டம்

இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் மூன்ருவது ஆண்டுப் பொதுக் கூட்டம் 1966-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12-ம் 13-ம் திகதிகளில் அட்டனில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் விவாதத்திற்குரிய பிரேரணைகள், செயற்குழுவிற்கான நியமனங்கள் யாவும் ஆகஸ்ட் மாதம் 24-ம் திகதிக்குப் பிந்தாமல் உறுப்பினர்களிடமிருந்து பொதுச் செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டும்.

இவையாவும் உறுப்பினர் ஒருவரால் பிரேரிக்கப்பட்டு இன்னெரு உறுப்பினரால் ஆமோதிக்கப்படல் வேண்டும். நியமனப் பத்திரங்களில் இவற்றுடன் பிரேரிக்கப்படுபவரின் சம்மதத்திற்கான ஒப்பமும் தரப்படல் வேண்டும்.

இங்ஙனம்,
ஒப்பம்/செ. கலியப்பெருமாள்,
பொதுச் செயலாளர்.

102, டிக்கோயா வீதி,
அட்டன்.
1-8-1966.

# இழுக்கு வெளுக்கிறது

**'சத்தி'**

சுந்தரலிங்கம் வழக்கத்தை விட அன்று மிகவும் கல கலப்பாகக் காணப்பட்டான். காலையில் கந்தோருக்கு வந்த நேரம் முதல் அவனுக்கு இருப்பே கொள்ளவில்லை. தட்டெழுத்துப் பொறிக்கும் பகுதிக்குப் போவதும் அங்கிருந்து நேரே கிளார்க்குகள் பிரிவுக்கு வருவதுமாக நேரத்தை ஒட்டிக் கொண்டிருந்தான். வெளியே கந்தோர்க் கட்டடத்தின் 'போர்ட்டிக்கோவில்' உதவியாணையாளரின் காரின் 'ஹார்ன்' சத்தம் கேட்டது எங்கும் ஒரே அமைதி. சுந்தரலிங்கமும் தனது ஆசனத்தில் அமர்ந்து கொண்டான்.

சுந்தரலிங்கத்திற்கு அன்று அதிட்டம் அவனது கையிலிருக்கும் கடித உருவில் வந்திருந்தது. அதனால் ஏற்பட்ட மகிழ்ச்சிப் பிரவாகம் அவனது முகத்திற் பொங்கி வழிந்தது. அவனது சக கிளார்க்குகள் அவனை ஒரு வி்சித்திரப் பிறவியைப் போல நோக்குகிறார்கள். பக்கத்திலிருந்த நந்தசேனா கூட அவனது பூரிப்புக்குக் காரணம்கேட்டான். சுந்தரலிங்கம் ஏதோகூறி மழுப்பிவிட்டான்.

உதவியாளர் வந்து சில நிமிட நேரங்கள் கழித்து சுந்தரலிங்கத்திற்கு எதிர் ஆசனத்திலுள்ள கிளாக்கர் நமசிவாயம் வந்து கொண்டிருந்தான். சுந்தரலிங்கத்தின் முகத்திலே காணப்பட்ட புன்னகை மாயமாய் மறைந்தது. நமசிவாயம், எல்லாக் கிளார்குகளின் கவனமும் சுந்தரலிங்கத்தின் பக்கம் திரும்பி இருப்பதை அவதானித்தான். நேரே சுந்தரலிங்கத்தின் மேசைக்குச் சென்று அவனது கையிலிருக்கும் கடிதத்தைக் குறிப்பாகப் பார்த்துவிட்டான்.

'என்ன சுந்தரலிங்கம்! பதவி உறுதிப்படுத்தற் கடிதம் போலே, இனி உனக்குச் சகட யோகந்தான். அது சரி, எப்ப பார்ட்டி எங்களுக்கு கெல்வாம்.'

எல்லார் தலையையும் குடைந்து கொண்டிருந்த பிரச்சினையை நமசிவாயம் தீர்த்து வைத்தான். எல்லாக் கிளார்க்குகளும் ஏககாலத்தில் சுந்தாலிங்கத்தைச் சூழ்ந்துகொண்டார்கள்.

புற்றுக்குள்ளேயிருக்கும் நச்சுப் பாம்பை விடப் புற்றுக்கு வெளியேயிருக்கும். நச்சுப் பாம்பு மேல் என்பதைச் சுந்தரலிங்கம் அறிந்திருந்தான். அவனைப் பொறுத்த மட்டில் நமசிவாயம் புற்றுக்குள்ளிருக்கும் நச்சுப்பாம்பு எப்பொழுது விஷத்தைக் கக்கும் என்று சொல்ல முடியாது. நமசிவாயம் வெளிக்குத் தனது மகிழ்ச்சியைக் காட்டிக் கொள்வது போலிருந்தாலும் உள் மனதில் சுந்தரலிங்கத்தின் வீழ்ச்சியில் மகிழ்ச்சி காணும் நோக்கத்தை அவன் விடவில்லை.

இவர்கள் இங்கே சுந்தரலிங்கத்தைச் சூழ்ந்து ஆரவாரித்து நிற்க சுந்தரலிங்கத்தை உதவியாளர் அழைப்பதாக அவரது பியோன் வந்து சொன்னான். சுந்தரலிங்கத்தின் இதயம் விட்டுவிட்டு அடித்துக்கொண்டது அவனது கண் முன்னே மூன்று வருடங்களுக்கு முன்னே முதல் நியமனம் பெற்று அந்தக் கந்தோருக்கு வருதபோது நடந்த நிகழ்ச்சிகள் நிழலாட்டம் ஆடின.

மின் விசிறி தன் பாட்டில் சுற்றிக் கொண்டிருந்தது. உதவியாணையாளர் அறையின் குறுக்கேயும் நெடுக்கேயும் நடந்து கொண்டிருந்தார். வழக்கத்தில் காலை ஒன்பதரை மணிக்குப் பின்னரே அலுவலகத்திற்கு வரும் அவர், அன்று சற்று நேரம் முன்னதாகவே வந்திருந்தார். எதற்காகவோ ஆத்திரமும் அவசரமும் கொண்டவராகக் காணப்பட்டார்.

மணி எட்டு ஐம்பத்தைந்தைக் கடந்து கொண்டிருந்தது. திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டவரைப் போல் கதிரையை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தார். மேசையிலிருந்த 'காலிங் பெல்'லை அமுக்கினார். அறை வாசலில உள்ள கதிரையில் காலையிலேயே தூங்க ஆரம்பித்த அவரது பியோன் வந்து நின்றான்.

'அந்தச் சுந்தரலிங்கம் என்ற கிளார்க்கைக் கூப்பிடு.' சிங்களத்தில் உத்தரவிட்டார் உதவியாணையாளர்.

போன பியோன் சில நிமிடங்கள் கழித்து மீண்டும் அறையைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான்.

'சுந்தரலிங்கம் ஐயா இன்னும் வரவில்லை சேர்.'

உதவியாளரின் மீசை ஒரு சில நிமிட நேரம் துடித்தது.

'அந்த ஆள் வந்ததும் நான் கூப்பிட்டதாகச் சொல்லு, போ!' எரிந்து விழுந்தார் உதவியாணையாளர்.

இது அவரின் வழக்கமான பல்லவியான படியால் மிகச் சாதாரணமாகவே பியோன் அறையை விட்டு வெளியேறினான். பியோன் வெளியே வந்த சமயம் சுந்தரலிங்கம் தின வரவு இடாப்பில் கையெழுத்திட்டுவிட்டுத் தன் பகுதிக்குச் சென்று கொண்டிருந்தான்.

'பெரிய ஐயா கூப்பிட்டார் சேர்!'

பியோனின் குரல் காதில் விழுந்தது தான் தாமதம் சுந்தரலிங்கம் உதவியாணையாளரின் அறைக் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தான்.

உதவியாணையாளரின் வாயில் நான்காவது சிகரெட் புகைந்துகொண்டிருந்தது. அவரின் மேசைக்குக் கிட்டச் சென்று நின்றான் சுந்தரலிங்கம்.

சிகரெட் புகையை வெளியே ஊதியபடியே ஓரக் கண்களால் நிமிர்ந்து பார்த்தார் உதவியாணையாளர்.

அவரது பார்வை, ஏன்? இவ்வளவு நேரம் என்ற ஒலிக்குறிப்பைபுலப்படுத்தியது.

'இப்பொழுது நேரம் என்ன?'

எமது சிறுகதை

ஆங்கிலத்தில் கேட்டார் உதவியாணையாளர்.

'ஒன்பது மணி சேர்.'

அமைதியாகப் பதில் சொன்னான் சுந்தரலிங்கம்.

'நீ இந்தக் கந்தோரில் ஒழுங்காகவேலைசெய்வதாயிருந்தால் சரி. இல்லாவிட்டால் உன்னை 'டிஸ்மிஸ்' செய்துவிடும்படி ஆணையாளருக்கு முறையிடப் போகின்றேன்! போய்த் தொலை.'

ஆயிரம் சம்மட்டிகள் கொண்டு மண்டையைப் பிளப்பது போன்றிருந்தது சுந்தரலிங்கத்திற்கு. வேலைநீக்கம் என்ற வார்த்தையை முதன் முதலாக உதவியாணையாளரின் வாயினால் அன்றுதான் கேட்டான். வயோதிப கோலத்திலிருக்கும் அவனது அன்னையும், திருமணக் கோலத்தை எதிர்நோக்கியிருக்கும் சகோதரியும் அவன் கண்முன்னே ஒரு முறை தோற்றி மறைந்தனர்.

ஆடுகதவுகளை நீக்கிக் கொண்டு வெளியே வந்தான் சுந்தரலிங்கம். அவனது மேற்சட்டை தெப்பமாக நனைந்திருந்தது. காலையில் கந்தோருக்கு வந்ததும் வராததுமாக வியர்க்க விறுவிறுக்க உதவியாணையாளரிடம் சென்ற அவனை அவரது வசைபுராணம் திக்கு முக்காட வைத்தது.

சுந்தரலிங்கம் அலுவலக வேலை சம்பந்தப்பட்ட வகையில் அவ்வளவு அசட்டையானவனல்லன். புதிய கிளார்க்குகள் கந்தோருக்கு வந்தாலும் அவர்களுக்கு அலுவலக அலுவல்களில் பயிற்சியளிக்குமளவிற்கு அசாத்தியத் திறமை பெற்றிருந்தான். என்றாலும் உதவியாணையாளருக்கு அவனைக்கண்டால் பிடிக்காது. தினமும் அவன்பேரில் எரிந்து விழுவதில் அவருக்கும் பரம திருப்தி.

சுந்தரலிங்கத்திற்கே சில சமயங்களில் உதவியாணையாளர் தன்மேல் கோபப்படுவதற்குக் காரணம் விளங்குவதில்லை. இந்த வசைபுராணம் தன்னைத் தவிர அந்த அலுவலகத்தில் வேறு யார் மேலும் பாடப்படுவதாகவும் அவனுக்குத் தெரியவில்லை. அலுவலக அலுவல்களைப் பொறுத்த மட்டில் அவனுக்கும் அவனது சக கிளார்க்குமாருக்கும் வித்தியாசமிருப்பதாக அவன் என்றுமே உணர்ந்ததுமில்லை.

ஆனால் இன்று உதவியாணையாளர் தன்மேல் எரிந்து விழுந்ததற்கு ஒரு விசேட காரணமிருப்பதை அவன் அவரது அறையிலிருந்து நேரே தனது ஆசனத்தில் வந்து அமர்ந்த போது உணர்ந்துகொண்டான்.

சுந்தரலிங்கம் தனது கதிரையில் வந்து அமர்ந்த கோலத்தைக் கண்ட அவனது சக ஊழியர்கள் தங்களுக்குள் குசு குசுத்துக் கொண்டார்கள். குறிப்பாகக் கிளார்க் நமசிவாயத்தின் முகத்தில்மகிழ்ச்சி தாண்டவமாடியதைச் சுந்தரலிங்கம் கவனிக்கத் தவறவில்லை.

சுந்தரலிங்கத்தைப் பொறுத்தமட்டில்நமசிவாயம் அவனது பரம வைரி. சுந்தரலிங்கம் ஊசியை நிலத்தில் போட்டாலும் அது உதவியாணையாளருக்குத்தெரிந்துவிடும் அந்தளவிற்கு நமசிவாயம் உதவியாணையாளருடன்ஒட்டியும் ஒட்டாமலும் பழகி வந்தான். இன்று உதவியாணையாளர் சுந்தரலிங்கத்தின் மேற் பாயுமளவிற்கு அவருக்கு உருவேற்றியிருந்தான் நமசிவாயம்.

நேற்று மாலை நடைபெற்ற 'வள்ளுவர் விழா'விலே 'வள்ளுவரும் தமிழும்' என்ற பொருள்பற்றிச் சுந்தரலிங்கம் சிறந்த சொற்பெருக்காற்றியிருந்தான். இதை நமசிவாயம் மூலம் கேள்வியுற்றுக் கொதிப்படைந்த உதவியாணையாளர் இன்று சுந்தரலிங்கத்தை வறுத்தெடுத்தார்.

உதவியாணையாளர் சுந்தரலிங்கத்தின் மேற் கொண்ட இந்த வேண்டா வெறுப்பு நிலைக்குவேறொரு மூலகாரணமும் இருந்தது.

தமிழ் அரசாங்க ஊழியர்களுள் பிரச்சினைக்குரியவர்களாக இருக்கும் புதிய ஊழியர்களுள் ஒருவனாக இருந்தும் சுந்தரலிங்கம் சிங்களமொழியில் தேர்ச்சி பெறவில்லை. எண்பதுருபா அடிப்படைச் சம்பளத்துடன் குடும்பபாரத்தைச் சுமந்துகொண்டிருக்கும் அவன் அதைப்பற்றிக் கவலைப்பட்டவனாகவும்தெரியவில்லை.

சம்பள ஏற்றத்தடை, பதவியுயர்வுத்தடை முதலிய முட்டுக்கட்டைகளுக்கிடையே மூன்றாம் வகுப்பு எழுதுவினைஞனாக வாழ்க்கையை ஆரம்பித்த சுந்தரலிங்கம் வாழ்க்கையோடு போராடிக் கொண்டிருந்தான்.

சிங்களத் தேர்ச்சிப்பரீட்சைகளிற் சித்திபெற்றுத் தங்கள் பதவிகளை இறுகப் பிடித்துவிட்ட உதவியாணையாளர், நமசிவாயம்போன்றோர் கண்முன்னே தமிழபிமானங்கொண்ட சுந்தரலிங்கம் போன்றோர் பகடைக்காயாக ஆட்டிப் படைக்கப்படுகின்றனர்.

பத்து வருடங்களாக அரசாங்க சேவையில் சிங்கள மொழித் தகமையின்றி எண்பதுருபா அடிப்படைச் சம்பளத்துடனே காலங் கழித்து விட்ட சுந்தாலிங்கம் போன்றோர் வேறு தொழில் செய்யவும் வகையின்றித் தவிக்கிறார்கள்.

ஈழமணித் திருநாட்டின் அரசியல் வானிலே திரண்டிருந்த கருமேகங்கள் மெல்ல மெல்ல நீங்கிக் கொண்டு வருகின்றன. உதய சூரியன் அவற்றினூடே தன் செம பொற்கிரணங்களை நீட்டுகின்றான். கிழக்கு வெளுத்துக் கொண்டு வருகிறது.

இலங்கை மாதா பெற்றெடுத்த புத்திரர்கள் ஒரு தாய்வயிற்றிற் பிறந்த பிள்ளைகள் போன்று சொந்த நாட்டுக்காக உழைக்கக் கங்கணங்கட்டி நிற்கிறார்கள். சுந்தரலிங்கத்தின் வாழ்க்கையிலும் ஒரு புதிய திருப்பம் ஏற்படுகிறது. அவன் எதிர்பார்த்திருந்த அந்த நன்னாளும் வந்து விட்டது.

சுந்தரலிங்கம் தன் நினைவலைகளிலிருந்து விடுபட்டான். பியோன், உதவியாணையாளர்

(15-ம் பக்கம் பார்க்க)

# அரியணை உரை நீண்டிருப்பது ஏன்?

## பட்டிருப்பார் விளக்கம்

"தேசிய அரசாங்கத்தின் இந்த இரண்டாவது அரியணை உரை மிக நீண்டு விட்டதாக எதிர்க்கட்சியினர் குறைகூறியிருக்கிறார்கள். அவர்களின் குறை அர்த்தமற்றதாகும். கடந்த கால அரசாங்கங்கள் அரியணை உரைகளில் பல வாக்குறுதிகளைக் கூறிவிட்டு அவற்றையெல்லாம் நிறைவேற்றாது விட்டுவிட்டார்கள். இன்று தேசிய அரசாங்கம் புது வாக்குறுதிகளைக் கொடுத்திருப்பதுடன், பழைய அரியணை உரைகளில் கூறப்பட்டிருக்கும் திட்டங்களையும் ஏற்று அமுல் நடத்த முன் வந்திருக்கிறது. இதனால் தான் இம்முறை அரியணை உரை சற்று நீண்டிருக்கிறது. எதிர்க்கட்சியினர் அரியணை உரையில் குறிப்பிடப்பட்டிருக்கும் அம்சங்களைக் கண்டனம் செய்வார்கள் என்றால் அது அவர்களின் திட்டங்களைக் கண்டனம் செய்வதாகவே அமையும்" என்று பட்டிருப்புப் பிரதிநிதி திரு. சி. மூ. இராசமாணிக்கம் அரியணை உரை விவாதத்தில் பேசுகையில் கூறினார்.

திரு. இராசமாணிக்கம் அவர்கள் அரியணை உரை மீது பாராளுமன்றத்தில் நிகழ்த்திய பேச்சின் விபரம் வருமாறு:

"இலங்கையின் அரசியற் சரித்திரத்தில் 1956 ஆம் ஆண்டு தொடக்கம் 1965 ஆம் ஆண்டு வரை உள்ள காலம் சரித்திர பூர்வமானது என்பதே எனது அபிப்பிராயம். அந்தக்காலத்திலே, இலங்கையின் அரசியலில் மக்களின் எளிய உணர்ச்சிகளைத் தூண்டி அரசியல் நிர்வாகத்தையும் அதிகாரத்தையும் அரசியல் வாதிகள் கைப்பற்ற முயன்ற சரித்திரத்தையும் மக்களின் உன்னதமான எண்ணங்களையும் கற்பனைகளையும் அபிப்பிராயங்களையும் கொண்டு அரசியல் ஆட்சியை மீட்டிய சரித்திரத்தையும் நாம் காணக்கூடியதாக இருக்கிறது. 1956 ஆம் ஆண்டிலே மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சி பீடத்துக்கு வந்ததன் பின் இந்நாட்டிலே மக்கள் சமூகவேற்றுமையினால், சமய வேற்றுமையினால், மொழி வேற்றுமையினால் சின்னாபின்னமாகச் சிதைவடைந்து, நாட்டின் முன்னேற்றமும் பொருளாதாரமும் குன்றிச்சிதைத்து நாடு ஒரு பள்ளத்தாக்கில் இறங்கிக் கொண்டிருந்ததை நாம் காணக்கூடியதாக இருந்தது. அன்று ஆட்சிபீடத்தில் ஏறிய பிரதம மந்திரி என்றால் என்ன, அவரைப் பின் தொடர்ந்து வந்த அங்கத்தவர்கள் என்றால் என்ன, அவர்கள் இந்நாட்டிலே வசிக்கும் மத, மொழி, இன வேறுபாடுகளைக் கொண்ட மக்களிடையே உள்ள பேதங்களைப் பிரயோசனப் படுத்தி அதன் மூலம் ஆட்சிபீடத்திலேறி ஒரு பிளவு நிலைமையை இந்நாட்டிலே நிரந்தரப் படுத்த முயன்றார்கள்.

### இனிமேல் இடமில்லை

இன்று ஏற்பட்டிருக்கும் தேசிய அரசாங்கமானது இந்த நாட்டு மக்களுடைய உயர்ந்த சிந்தனைகளையும் எண்ணங்களையும் கற்பனைகளையும் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. 1956 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது போன்ற அரசாங்கங்களுக்கு இந்த நாட்டில் இனிமேல் இடமில்லை என்பதே எனது கருத்தாகும். நீண்ட காலம் நிலைத்திருக்கக்கூடிய ஒரு அரசாங்கமாகத்தான் இன்று தேசிய அரசாங்கம் இந்த நாட்டிலே இருக்கிறதென்பதே பொது மக்களது கருத்தாகும். பொது மக்களது பாதுகாப்பையும் நலனையும் கருத்திற்கொண்டு இந்த நாட்டில் இன, மத, சமூக ஒற்றுமையை ஏற்படுத்தியுள்ள இன்றைய தேசிய அரசாங்கமானது சரித்திரத்தில் இடம் பெற்று மிக நீண்ட காலம் ஆட்சி செலுத்தும் என்பது எனது நம்பிக்கை.

### அரியணை உரை

"தேசிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் நிகழ்த்தப்பட்ட இரண்டாவது சிம்மாசனப் பிரசங்கம் பற்றி இங்கு விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. இந்த வருடம் நிகழ்த்தப்பட்ட சிம்மாசனப் பிரசங்கத்தில் பல நல்ல கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. இந்த நாட்டின் எதிர் காலத் தேவைகள் எவை எவை பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதைச் சிம்மாசனப் பிரசங்கம்



எமக்குச் சுட்டிக் காட்டியுள்ளது. அத்துடன் கடந்த பத்து ஆண்டுகளாக நிறைவேற்றப்படாமல் இருந்த பல திட்டங்களைப் பூர்த்தி செய்வது பற்றியும் சிம்மாசனப் பிரசங்கத்தில் கூறப்பட்டுள்ளது. இந்த நாட்டிலிருக்கும் சமுதாய பழக்க வழக்கங்களில் எவற்றைச் சட்டரீதியாக ஒழிக்க வேண்டுமென்பது பற்றியும், மக்களின் விவசாய, கைத்தொழில் துறைகளில் எவ்வாறு முன்னேற்றம் காண வேண்டும் என்பது பற்றியும் விபரிக்கும் விதத்தில்தான் இந்த வருட சிம்மாசனப் பிரசங்கம் அமைந்துள்ளது.

### நீண்ட பிரசங்கம்

"இவ்வருட சிம்மாசனப் பிரசங்கத்தைப் பற்றி எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் பலவாறாக விபரித்துள்ளார்கள். எதிர்க்கட்சி அங்கத்தவர்களில் பலர் இவ்வருட சிம்மாசனப் பிரசங்கத்தை மிக மிக நீண்டதொரு சிம்மாசனப் பிரசங்கமென்றும் அதனைக் கேட்பதற்கே மிக நீண்ட நேரமெடுத்ததென்றும், இத்தகைய நீண்டதொரு சிம்மாசனப் பிரசங்கம் அவசியமற்றதென்றும் விபரித்தார்கள். இத்தகையதொரு நீண்ட சிம்மாசனப் பிரசங்கத்தைத் தேசிய அரசாங்கத்தினர் வழங்கியதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. கடந்த ஒன்பது வருடங்களாகப் பதவியில் இருந்த அரசாங்கங்கள் 'நாங்கள் அதைச் செய்வோம் இதைச் செய்வோம், அதைச் செய்யப் போகிறோம் இதைச் செய்யப் போகிறோம்' என்று வாயளவில் மட்டும் கூறிய பல விஷயங்களை எந்த வகையில் முடித்து வைக்கப்போகிறோம் என்று இவ்வருட சிம்மாசனப் பிரசங்கத்தில் தேசிய அரசாங்கம் கூறியுள்ளது. உதாரணமாக, இந்த நாட்டுச் சிறுபான்மை இனத்தவர்களது - குறிப்பாகத் தமிழ் பேசும் மக்களது — மொழிப் பிரச்சினை பற்றி கடந்த காலங்களில் பதவியில் இருந்த அரசாங்கங்கள் தமது சிம்மாசனப்பிரசங்கங்களில் குறிப்பிட்டதுடன் மட்டும் நின்றுவிட்டன. கடந்த ஒன்பது ஆண்டுகளிலும் இப்பிரச்சினையைத் தீர்க்க அவர்கள் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. பிரதேச சபைகளை ஏற்படுத்துவது பற்றியும் கடந்தகாலச் சிம்மாசனப் பிரசங்கங்கள் குறிப்பிட்டதுண்டு. ஆனால், பிரதேச சபைகளை ஏற்படுத்த எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டது கிடையாது.

### ஏமாற்றினார்கள்

"இப்படியாகப் பல குறைகளை முன்னைய அரசாங்கத்தினர் விட்டிருக்கிறார்கள். 'இதைச் செய்வோம், அதைச் செய்வோம்' என்று அவர்கள் மக்களை ஓரளவு ஏமாற்றி வந்திருக்கிறார்கள். ஆனால் இன்று தேசிய அரசாங்கம், சென்ற அரசாங்கம் தனது சிம்மாசனப் பிரசங்கங்களில் செய்வோமென்று குறிப்பிட்டுச் செய்யாமல் விட்டவைகளையும், இன்னும் குறிப்பிடாமல் விட்டிருந்தவைகளையும் செயலாற்றத் துணிந்திருப்பது ஒரு விசேட அம்சமாகும். இதை ஆங்கிலத்திலே சொல்வதானால் 'Blue print for future action of this Government' எனக் கூறலாம். இது தேசிய அரசாங்கம் எதிர் காலத்திலே அமுல் நடத்தவிருக்கும் ஒரு திட்டம் என்று நான் கூறுவேன். ஆகவே, இச்சிம்மாசனப் பிரசங்கத்தை ஒரு நீண்ட பிரசங்கம் என்றோ இப்படியான ஒரு நீண்ட பிரசங்கத்தைச் செய்திருக்க வேண்டியதில்லையென்றோ யாரும் கூறினால் அவர்கள் அறியாமையால் அப்படிக் கூறுகிறார்கள் என்றுதான் நான் கூறுவேன்.

### யாரை குறைகூறுகிறார்கள்?

"எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் கூறிய பல கண்டனங்களை ஆராய்ந்தால், அவர்கள் இங்கே சமர்ப்பித்துள்ள பிரேரணைகளை ஆராய்ந்தால் அவை அரசாங்கம் செய்யாமல் விட்ட செயல்களை இந்த அரசாங்கம் தனது ஆயுட்காலமாகிய கடந்த பதினறு மாதங்களிற் செய்து முடிக்கவில்லை என்று குறை கூறுவனவாகவே அமைந்திருக்கின்றன என்பது புலனாகும். ஒன்பது வருட காலம் ஆட்சி செய்த ஒரு அரசாங்கத்தினால் செய்து முடிக்க முடியாத விஷயங்களை எந்த ஒரு அரசாங்கத்தினாலாவது பதினறு மாத காலத்தில் செய்து முடிக்க முடியுமா என்று நான் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். அப்படியிருந்தும், இந்தத் தேசிய அரசாங்கம் இந் நாட்டுக்குச் செய்திருக்கும் பல செயல்களைக் கவனித்துப் பார்த்தால், அரசாங்கம் பதினறு மாத காலத்தில் மிகக் கூடிய செயல்களைச் செய்திருக்கின்றது என்றுதான் கூறவேண்டும். ஆகவே, தேசிய அரசாங்கம் எதிர்காலத்தில் பல பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் என்பதே என்னுடைய நம்பிக்கை.

"இன்று விவசாயிகள் பண்டைய முறைகளைக் கையாள்வதனாலும், நீர்ப்பாசன வசதி இல்லாமையினாலும், தக்க பாதைகள் இல்லாமையினாலும் பல விதங்களில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளது கஷ்டங்களை நீக்கி, நவீன முறைகளை அனுசரித்து விவசாயம் செய்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுப்பதோடு, தொழிலாளர்கள் தத்தமது தொழில்களை நவீன முறையில் கையாள்வதற்குத் தக்க வழிகளைத் தேசிய அரசாங்கம் எதிர்காலத்தில் செய்யும் என்பது என்னுடைய நம்பிக்கை.

### நம்பிக்கை

"இன்று நாட்டிலே என்றுமில்லாதவாறு ஒரு சுமுகமான, சமாதானமான சூழ்நிலை உருவாகியுள்ளது. இந்நிலை ஏற்படுவதற்குப் பிரதான காரணம் எங்களுடைய பிரதமர் என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. இந் நாட்டிலே சமூக ஒற்றுமையை ஏற்படுத்தி, சமூக ஒற்றுமையின் மூலம் இந்நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றவேண்டுமென்பதும் இந்தச் சமூக ஒற்றுமை நிலைத்து அதனால் பொருளாதாரமும் தொடர்ந்து வளரவேண்டுமென்பதும் அவருடைய அவாவாகும் என்பதை அவர் பல இடங்களில் குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே, திருவாளர் டட்லி சேனநாயக்க அவர்கள் இந்நிலையைக் கடைப்பிடித்து, அதனைத் தளரவிடாது செயலாற்றுவாரானால் இந்நாட்டிலே ஒரு சுமுகமான பரிபாலனம் அமைவதோடு, இந்நாட்டின் அரசியலைப் பலகாலங்களுக்குக் கொண்டு நடத்தக்கூடிய ஆதரவும் அவருக்கு இந்நாட்டு மக்களிடமிருந்து கிடைக்கும் என்பதே எனது நம்பிக்கை."




தீங்கிழைக்கும் கிருமிகளினின்று உங்கள் குடும்பத்தைக் காப்பாற்றுங்கள்

பயங்கரமான கிருமிகள் ஒவ்வொரு வீட்டிலும் பதுங்கியிருந்து நோய்களைத்தொற்றவைத்துப் பரப்புகின்றன.

இந்தத்தீங்கிழைக்கும் கிருமிகளினின்று உங்கள் குடும்பத்தைக் காப்பாற்ற உங்கள் வீட்டில் நம்பிக்கை வாய்ந்த ஒரு தொற்றுநாசினி தேவை.

டெற்றோல்— உலகின் அதி நம்பிக்கை வாய்ந்த தொற்று நாசினி—உங்கள் குடும்பத்தை எப்போதும் காப்பாற்றும்.

டெற்றோல்- வெட்டுக்காயம், கிறற்புண் முதலியனவற்றைத் தொற்றுக் கிருமிகளிலிருந்து காப்பாற்றும்.

டெற்றோல்- தொண்டைப்புண்ணைத் தடுக்கவும் குணமாக்கவும் உதவும்.

டெற்றோல்- மாதரின் பிரத்தியேக சுகாதாரத்துக்கு மிகவும் உகந்தது; ஏனெனில் டெற்றோல் இதமூட்டி, சுத்தம் தருவதோடு, தொற்றுக் கிருமிகளிலிருந்தும் காப்பாற்றும்.

டெற்றோல்- கர்ப்ப காலத்திலும், பின்னரும் குழந்தையையும் தாயையும் காப்பாற்றுகிறது.

எப்போதும் வீட்டில் ஒரு போத்தல் டெற்றோல் வைத்திருங்கள்.

டெற்றோல் உபயோகிக்குமுன் எப்போதும் நீர் கலந்து கொள்ள வேண்டும்.

உலகின் அதி நம்பிக்கைவாய்ந்த தொற்று நாசினியான டெற்றோலை உலகெங்குமுள்ள டாக்டர்கள் உபயோகிக்கிறார்கள்.

டெற்றோல்

# 'சித்தி'

## இலவச குறுக்கெழுத்துப் போட்டி

சிலோன் என்டர்டெயின்மெண்ட் லிமிட்டெட் நிறுவனத்தினர் அளிக்கும் 'சித்தி' படத்தை இலவசமாகப் பார்ப்பதற்கு இப் போட்டி மூலம் திரைப்பட இரசிகர்களுக்கு ஓர் வாய்ப்பு ஏற்படுகிறது. இப் போட்டியில் கலந்துகொள்வதற்கு எதுவித கட்டணமும் செலுத்தப்பட வேண்டியதில்லை. சுதந்திரன் பத்திரிகை நிறுவனத்தினதும், என்டர்டெயின்மெண்ட்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தினதும், ஊழியர்களையும் அவர்களுடைய நேரடி உறவினர்களையும் தவிர்ந்த ஏனையோர் இப் போட்டியில் தாராளமாகக் கலந்துகொள்ளலாம்.

சுதந்திரன் வாசகர்களுக்கான இப்போட்டியில் பங்குபற்றி வெற்றி பெறும் அதிர்ஷ்டசாலிகளுக்கு சிலோன் என்டர்டெயின் மெண்ட்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தினரே பரிசுகளை வழங்க ஒப்புதல் அளித்துள்ளனர்.

### விதிகள்:

1. சுதந்திரனில் விசேடமாகக் கொடுக்கப்பட்டிருக்கும் 'கூப்பன்'களிலேதான் விடைகள் நிரப்பி அனுப்பப்பட வேண்டும்.
2. ஒருவர் ஒரே உறையில் எத்தனை விடைகளையும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு விடையுடனும், சிலோன் என்டர்டெயின்மெண்ட்ஸ் லிமிட்டெட்டாரின் படங்களைத் திரையிடும் படமாளிகைகளில் படம் பார்த்த நுழைவுச் சீட்டின் அடிக்கட்டை இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். உறையின் மேல் போதுமான தபால் முத்திரைகள் ஒட்டப்பட்டிருத்தல் அவசியம்.
3. முழுக் கட்டங்களும் நிரப்பப்படாத விடைத்தாள்கள் நிராகரிக்கப்படும்.
4. போட்டி விடயமாக சுதந்திரனுடனோ என்டர்டெயின் மெண்ட்ஸ் நிறுவனத்தாரிடமோ எதுவித கடிதத் தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது.
5. போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

### பரிசுகள்

முற்றிலும் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விடைக் கூப்பன்களிலிருந்து தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரால் பரிசுக்குரிய விடைகள் பொறுக்கப்படும். முதலாவது எடுக்கப்படும் விடைக்கு முதல் பரிசும், ஏனைய பரிசுகள் முறைப்படியும் வழங்கப்படும்.

**1 வது பரிசு—6 மேல் வகுப்பு டிக்கட்டுகள்.**

**2 வது பரிசு—4 மேல் வகுப்பு டிக்கட்டுகள்.**

**3 வது பரிசு—3 மேல் வகுப்பு டிக்கட்டுகள்.**

மற்றும்

**3 ஆறுதல் பரிசுகள்—ஒவ்வொன்றும் 2 மேல்வகுப்பு டிக்கட்டுகள்விதம் வழங்கப்படும்.**

**முடிவுத் திகதி 25-8-66.**

6-9-66 சுதந்திரன் இதழில் முடிவுகள் வெளியாகும்.

விடைக்கான கூப்பன் 13-ம் பக்கத்தில் உள்ளது.

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:

ஆசிரியர்,
கலைப்பூஞ்சோலை,
சுதந்திரன்,
த. பெ. இல. 1183,
கொழும்பு.

உறையின் இடது பக்க மேல் மூலையில் 'சித்தி' இலவசப் போட்டி என்று எழுதப் பட்டிருத்தல் வேண்டும்.

ஆசிரியர்,
கலைப்பூஞ்சோலை.

# இலங்கை ரசிகர்களுக்கு நடிகர் ஜெய் சங்கர் பாராட்டு

"இலங்கை ரசிகர்கள் உயர்ந்த கலாரசனையுடையவர்கள். நடிப்புத்துறைக்கு புதிதாக வந்திருக்கும் என்மீது அவர்கள் அளவுகடந்த அன்பை வைத்திருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். இலங்கை மக்கள் என்மீது காட்டி வரும் அன்புக்கு என் நன்றியை தெரிவிப்பதோடு இந்த ஆதரவு நீடித்து நிலைக்க என்னாலியன்றதைச் செய்வேன்." இவ்வாறு சமீபத்தில் இலங்கை வந்த நடிகர் ஜெய்சங்கர் நமது நிருபரிடம் கூறினார்.



28 வயது இளைஞரான நடிகர் ஜெய்சங்கர் 'இரவும் பகலும்' மூலம் திரைக்கு அறிமுகமானவர் என்பது வாசகர்கள் அறிந்ததே. பதுளையில் நடைபெற்ற இலக்கிய விழாவில் கலந்துகொள்வதற்கு நடிகர் ஜெய்சங்கர் இலங்கை வந்திருந்தார். திரு. ஜெய்சங்கர் தமது பேட்டியில் மேலும் கூறியதாவது:-

'நான் நடித்த 'குழந்தையும் தெய்வமும்' என்றபடம் தமிழ்நாட்டில் நூறு நாட்களுக்குமேல் ஓடி வெற்றியீட்டியது 'குழந்தையும் தெய்வமும்' நூறாவது நாளன்று ஒரு பாராட்டு விழா நடத்தினார்கள். அதில் நடித்தவர்களுக்கு பரிசு அளித்தார்கள் அதன் டைரக்டர்களான கிருஷ்ணனும் பஞ்சுவும். எனக்கு பரிசளிக்க என் பெயரை கூப்பிட்டபோது, நான் மகிழ்ச்சி தாங்காமல் எழுந்து ஓடோடிச் சென்று பரிசைப் பெற்று கண்களில் ஒற்றிக்கொண்டேன். அன்றைய தினம் என் வாழ்வில் மறக்கமுடியாத ஒரு சுபநாள் என்று கூறுவேன்.'

'என்னைத் திரையுலகுக்கு இழுத்துவிட்ட 'இரவும் பகலும்' டைரக்டர்ஜோசப்தளியத்தை நான் எந்நாளும் மறக்க முடியாது.

'திரையுலகில் நான் இப்பொழுதுதான் காலடியெடுத்து வைத்துள்ளேன். நடிப்பில் நான் பயிலவேண்டியவை உலகளவு உள்ளன. எனது முன்னேற்றத்துக்கு, இலங்கை ரசிகர்களும், இலங்கை பத்திரிகைகளும் போதிய ஆதரவு தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

'திரையுலகில் எனக்குப் பிடித்த நடிகர்கள் அண்ணன் எம். ஜி. ஆரும் சிவாஜிகணேசனுமே. அண்ணன் எம். ஜி. ஆருடன் ஒரு படத்தில் நடித்து வருகிறேன்.'

திரு. ஜெய்சங்கரிடம் அவரது திருமணம்பற்றிக்கேட்டபோது அவர் கூறிய பதில். 'நிச்சயம் நடிகையை நான் திருமணம் செய்யப் போவதில்லை.'

திரை விமர்சனம்

# "இந்திய மகன்" ('சன் ஆவ் இந்தியா')

கொடுமைக்கார ஜமீன்தார் ஒருவரின் சூழ்ச்சியினால் ஒரு நல்ல குடும்பம் பிரிகின்றது. தந்தை ஒரு பக்கமும், தாயும் மகனும் மறுபக்கமுமாக வேறு வேறாகின்றனர். தந்தையைக் கண்டு பிடிப்பதற்காக தாயை விட்டுப் பிரிக்கப்பட்ட சிறுவன், பல துன்பங்களையும் துயரங்களையும் ஏற்கின்றான். இடையில் குறுக்கிட்ட கொடுமைக்கார ஜமீன்தாரையும் மிகவும் தந்திரமாக மடக்கி பொலீசாரிடம் ஒப்புவிக்கின்றான். ஆக, கெட்டார்கள் போங்கள்! ஒவ்வொரு கட்டங்களிலும் கதாபாத்திரமாகவே மாறி வெகு இயல்பாகவே நடித்துள்ளான். கள்ளங் கபடமற்று ஆண்டவன் முன்பு கண்ணீர் சொரியும் போதும் சரி, தான் பிக்பாக்கட் அடிக்கவில்லை என்று கோர்ட்டில் உணர்ச்சி பொங்க வாதிடும் போது சரி, ஜமீன்தார் கொலை வந்த நேரத்தில் வெகு சாமானியமாக பதட்டமின்றி அவருடன் பேசிக்கொண்டிருந்த போதும்சரி, இப்படி ஒவ்வொரு கட்டங்களிலும், நமது கண்களில் நீரை வரவழைத்துவிட்டான் மாஸ்டர் சஜீட். இப்பையனுக்கு இந்திப்பட உலகில் நல்லஎதிர்காலம் உண்டு என்று கூறலாம்.



12 வயதுச்சிறுவன் ஒருவனின் சோகமும், துயரமும், வீரச் செயல்களும் கொண்ட ஒரு கதைதான் இப்பொழுது கெப்பிட்டல் திரையில் காட்டப்படும் இந்திப்படமான 'இந்திய மகன்' (சன் ஒவ் இந்தியா)

கதை முழுவதும் இச் சிறுவனை வைத்தே பின்னப்பட்டிருக்கிறது. "மதர் இந்தியாவில்" தூர்நடத்தையுள் பையனாக ஒருசிறுவன் நடித்தானே ஞாபகமிருக்கிறதா? அவனையே இதில் கதாநாயகனாக்கியிருக்கிறார் இப்படத்தின் இயக்குனரான காலஞ் சென்ற மெஹ்பூப். மாஸ்டர் சஜீட் என்ற அந்தச்சிறுவனின் நடிப்புக்கு முன் நமது முன்னணி நடிகர்கள் எல்லாம்

மெஹ்பூப்பின் பாணியே தனி. வெகு இயல்பான முறையில்படத்தை உருவாக்கியுள்ளார். அவரது டைரக்ஷன் நுணுக்கங்கள் பலவற்றை இப்படத்தில் காணலாம். நௌஷத்தின் இசை கேட்பதற்கு இனிமையாக இருக்கிறது.

வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது என்பது அரசியலில் எப்படியிருந்தாலும் திரைப்பட வளர்ச்சியைப் பொறுத்தவரையில் உண்மை என்பதை 'சன் ஒவ் இந்தியா' பார்த்தவர்கள் ஒப்புக் கொண்டே தீர வேண்டும்.

— வரன்.

# பட்டணத்தில் பூதம்

விஜயாவும், ஜெய்சங்கரும் ஒருவரையொருவர் மனமாரக் காதலித்தார்கள். விஜயாவின் இடையை மெதுவாகப் பற்றிய ஜெய்சங்கர்,

"எதிர் பாராமல்
விருந்தாளி - இங்கு
ஏன் வந்தாய்
என நினைத்தாயோ
அழைக்காமல் வரும்
வெண்ணிலவே
அது தானே இந்தப்
பெண் மனதே"

என்று பாடினார். ஜெய்சங்கரின் பிடியிலிருந்து விலக விருப்பமற்ற கே. ஆர். விஜயா அவரது தோளில் சாய்ந்தவாறே

"இரவுக்குத் துணையாய்
சேர்ந்திருப்பேன்
என் மடியில் உன்னைத்
தூங்க வைப்பேன்
உலகத்தை ஒரு நாள்
மறக்கச் செய்வேன்
அந்தஉறக்கத்தின் முடிவை
பிறகு சொல்வேன்"

என்று பாடினார்.

இப்படி ஒருவருக்கொருவர் தங்களது உள் விருப்பங்களைக் கவிதையாக மாற்றிப் பாடினார்கள்.

- இக் காட்சி சாரதா புரொடக்ஷன்ஸ் 'பட்டணத்தில் பூதம்' படத்துக்கென அண்மையில் விஜயா ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டது.


# எஸ். எஸ். ஆர். தமாஷ்

மெஜஸ்டிக் ஸ்டுடியோவில் எஸ். எஸ். ஆர் பிக்சர்சாரின் 'மணிமகுடம்' படப்பிடிப்பில் அன்று இலட்சிய நடிகரும், எஸ். ஏ. நடராசனும் கலந்து கொண்டனர்.

திவானாக நடிக்கும் எஸ். ஏ. நடராசன், மன்னன் வேடத்திலிருந்த எஸ். எஸ். ஆரிடம் உத்தரவொன்றில் கையொப்பமிட வேண்டிய காட்சி அது!

படப்பிடிப்பின் ஆரம்பத்தில் ஒளிப்பதிவாளர் 'பவர் ஆன்' என்று குரல்கொடுத்துவிட்டு எஸ். எஸ். ஆரை நோக்கினர்.

"பதினெட்டாண்டுகளாக 'பவர்' எங்கள் கையில் இல்லை. எப்படிப் 'பவரை' 'ஒன்' பண்ண முடியும்?" என்று சொல்லி அங்கிருந்த எல்லோரையும் சிரிக்க வைத்தார் தி. மு. க. எம். எல். ஏ. யான இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன்.



தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சியும், நடிகர் ஜெய்சங்கரும், சென்ற மாதம் 29-ம் திகதி இலங்கை வந்துள்ளனர். அவர்கள் இருவரும் தங்கியிருந்த கிரீன்லண்ட்ஸ் ஹோட்டலில் வைத்துப் பிடிக்கப்பட்ட படம் இது. படத்தில் தமிழரசுக் கழகத்தின் சென்னை மாவட்டத் தலைவரும், செயலாளரும் காணப்படுகின்றனர். —படம்: ராஜப்பன்.


## எண்டர்டெயின்மெண்ட் திரைகளில்

### சித்திரா புரடெக்சன்ஸ்

# 'சித்தி'

குடும்பத்தில் மூத்த பெண், ஒரு தம்பி, ஆறு தங்கைகள், அதிலும் ஒரு பெண் ஊமை. தம்பியை டாக்டராக்கி விட வேண்டுமென்ற ஆசையினால் காதலை துறந்து ஒருவருக்கு இரண்டாம் தாரமாகிறார். புகுந்த இடத்தில் எல்லாம இருந்தது. ஆனால் கணவனோ ஒரு காமப்பித்து. அவனிடம் அவள் படும் அவஸ்தைகள் பல. இதுதான் சித்திரா புரடக்சான்சரின் 'சித்தி'

சித்தியாக பத்மினி தோன்றுகிறார். கலியாணத்தின் பின் காட்டு ரோஜாவாக காட்சி கொடுத்த பத்மினி நீண்ட இடைவேளைக்குப் பின்னர் சித்தியாக வந்துள்ளார்



பாத்திரமாக மாறிய பண்பட்ட நடிப்பு இன்று பத்மினியிடம் இல்லையென்றாலும் அவர் நடிப்பு சோடை போய்விட்டது என்று கூறிவிட முடியாது. இயற்கை நடிப்பை ஒரு சில இடங்களில் செயற்கை மிஞ்சி விடுகிறது.

பத்மினியின் கணவராக எம். ஆர். ராதா வருகிறார். முழுமை பாத்திரப் படைப்பு. கதாசிரியரின் வெற்றி பளிச்சிடுகிறது. ஆசை நிறைவேறவில்லையென்கின்ற நேரத்தில் ராதா உண்மையாகவே ஆத்திரப்படுகிறார்.

முத்துராமன் — விஜயா நிர்மலா காதல் ஜோடி கண்ணுக்கு நல்ல விருந்து' தொலை பேசியில் கூட காதல் பாட்டுப் பாடுகிறார்கள்,

பத்மினியின் முதல் காதலன் முத்தையா பாத்திரத்தை ஜெமினி எற்றிருக்கிறார். அவர் இதில் ஒரு துணை நடிகர். நாகேஷ் பொறுப்புள்ள பிள்ளை தான். எதிர் காலத்தில் நகைச்சுவை நடிகர் நாகேஷ் நல்ல குணசித்திர நடிகராக மாறினாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

மனிதனின் உட்பாட்டு உணர்வுகள் சில வற்றை முழுமையாக சித்தரிப்பதற்கு 'சித்தி' உதவியிருக்கிறது. அந்த முழுமையான உணர்வை எம். ஆர். ராதா மூலம் காட்டிவிட்டார் கே எஸ். கோபாலக் கிருஷ்ணன்: ஆனால் கதை என்ற நிலையில் பிரமாதமாக எதுவுமில்லை.

கே. எஸ். ஜி. தமிழ்த் திரையுலகில் ஏற்படுத்தி வரும் சில மாறுதல்கள் சித்தியிலும் தெளிவாகத் தெரிகிறது. பண்பு பேசிய பத்மினியையே இந்த நிலைக்கு கொண்டு வந்து விட்டார். அது அவரின் வெற்றி;

குடும்பச் சித்திரமென்றோ அல்லது பொழுது போக்குச் சித்திரமென்றோ கூறுவதிலும் பார்க்க ஒரு சோதனைச் சித்திரமென்று சித்தியைக் கூறுவதே பொருத்தம். —பூ

## கொழும்பு இந்து மகளிர் மன்ற நிதிக்கு "தொடாதே"

கொழும்பு இந்து மகளிர் மன்ற நிதியுதவிக்காக இம் மாதம் 8ம் திகதி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் ராஜ் நகைச்சுவைக் குழுவினரின் 'தொடாதே' என்ற நாடகம் நடைபெறுகிறது.

—

## ஜெயகாந்தனின் அடுத்த படம்

"யாருக்காக அழுதான்?" படத்தினை ஜூலை 22-ம் தேதி, திரைக்குக் கொண்டுவந்துள்ள ஜெயகாந்தன் 'நான் இருக்கிறேன்' என்ற படத்தினை அடுத்தபடியாகத் தயாரிப்பாரம்.

இப்படம், முழுக்க முழுக்க அவருடைய இலட்சியங்களைக் கொண்டதாக இருக்குமாம்.

ஒரு குஷ்ட ரோகியையும் கால் இல்லாத ஓர் இளைஞனையும் மையமாகக் கொண்ட இப்படத்தில் நன்றாக அறிமுகமில்லாத நடிகர்கள் நடிப்பார்களென்று தெரிகிறது.

கதை வசனம் டைரக்ஷன் எல்லாம் ஜெயகாந்தனே.

—

## பத்திரிகையாளர் பற்றி டைரக்டர் கிருஷ்ணன்

டைரக்ஷன் துறையில் புது திருப்பத்தை உண்டு பண்ணி புகழேணியில் நின்று, புதுமை செய்து கொண்டிருக்கும் இரட்டையர்கள் கிருஷ்ணன்-பஞ்சு என்பது யாவரும் அறிந்ததே.

அவர்களில் டைரக்டர் கிருஷ்ணன், தாங்கள் இருவரும் பத்திரிகையாளர்களிடம் பெரு மதிப்பையும், அன்பையும் வைத்திருப்பதாக கூறினார். அவர் மேலும் கூறுகையில் "நாங்கள் 'பூம் பாவை' போன்ற படங்களை டைரக்ட் செய்யும் போது '...... இந்தப் படம் வெற்றி அடைந்தே...விட்டது என்றே... கூற வேண்டும்' என்று தீர்மானமில்லாமல் விமரிசனம் எழுதுவார்கள். ஜாதி, மதங்கள், சட்சி ஆகியவைகளும் குறுக்கே நிற்கும். இப்பொழுது அப்படியில்லை 'சரி' என்று படுவதை திட்டவட்டமாகக் கூறி விடுகிறார்கள். இந்த முறை எனக்கு மிகவும் பிடிக்கும். கண்டித்து விட்டார்கள் என்பதற்காககலங்குவதும் இல்லை. எதிர்ப்பு எனக்குப் பிடித்தமானவைகளில் ஒன்று! ஏதோ ஒரு சக்தி நம்மிடம் இருப்பதால் தான் எதிர்க்கிறார்கள் என்று பூரிப்படைவேன்" என்று கூறினார்.

## 'சித்தி'

### இலவச குறுக்கெழுத்துப் போட்டி விடைக் 'கூப்பன்'

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 சி | த் | 2 | ■ | 3 | | | 4 சி |
| | ■ | 5 | 6 | ய | | ■ | |
| 7 | 8 ணி | ■ | ன | ■ | ■ | 9 வி | |
| ■ | 10 | 11 | ■ | 12 | 13 ஒ | | ■ |
| 14 அ | தி | | | ந் | | ■ | 15 நி |
| | ■ | ■ | ■ | 16 | | ம | |
| 17 | 18 பா | 19 | ■ | | | ■ | |
| 20 | | பா | | ■ | ■ | 21 | |

முழுப் பெயர்..........................................

முகவரி..........................................

..........................................

..........................................

..........................................

கையொப்பம்

### இடமிருந்து வலம்.

1. சிலோன் என்டர்டெயின்மென்சார் திரைப்பட ரசிகர்களுக்கு அளித்துள்ள இவ்வாண்டின் மிகச் சிறந்த படமிது.
3. 'சித்தி'யின் பெயர்.
5. இவர் இப்படத்தில் ஊமைப் பெண்ணாக நடிக்கிறார்.
7. இந்தக் குழந்தை நட்சத்திரம்கூட என்னமாதிரி நடித்திருக்கிறது 'சித்தியில்'!
9. சிலோன் என்டர்டெயின்மெண்ட்ஸ் திரைகளுக்கு வரவிருக்கும் மற்றொரு வெற்றிப்படமான 'ஆனந்தி'ல் நடித்துள்ள கதாநாயகியை அவரின் கணவர் இப்படித் தான் அழைப்பார்.
10. இந்த மனிதர் 'சித்தியில்' மட்டுமல்ல, எந்தப்படத்திலும் கொடுமைக்காரர்தான்!
12. 'சித்தியில், இவர் பாடியுள்ளபாடல்கள் நெஞ்சைப் பிழிகின்றன.
14. 'சித்தி' படத்தைப்பார்த்தவர்கள் 'சித்தி ஒரு......படம் என்று நிச்சயம் புகழுவார்கள்.
16. அறம் அலங்கோலப்பட்டு விட்டது.
17. 'சித்தி'யில், கல்வியின் பெருமையை விளக்க நாகேஷ் ஒரு கவிஞரின் பாடலை எடுத்துக் கூறுகிறாரல்லவா? அந்தக் கவிஞர் இங்கு உருமாறியிருக்கிறார்.
20. மாறியிருக்கும் இது தமிழ்ப்படங்களில் இப்பொழுது அதிகரித்து வருவதாக அறிஞர்கள் குறைப்படுகிறார்கள்.
21. சோர்வுள்ள உள்ளத்துக்கு இது மகிழ்ச்சியைக்கொடுக்கும்.

### மேலிருந்து கீழ்.

1. 'சித்தி' படத்தை தயாரித்த கம்பெனியின் பெயர்.
2. யாராலும் வெல்ல முடியாதது என்று கூறப்படும் இது இங்கே மாறிவிட்டது.
4. பிரபல தமிழ் நடிகர் ஒருவர்.
6. ......ரஞ்சகக் காட்சிகளுக்கு 'சித்தியில்' குறைவில்லை.
8. தலைகீழாகக் கிடக்கும் இது சிலரிடம் காணப்படுவதில்லை.
9. விலாங்கு குறைப்பட்டு விட்டது.
11. நாடகக் கணிகை.
12. 'சித்தியில்' நடித்துள்ள பழம்பெரும் நடிகையான இவர் பெயரைச் சுருக்கிக் கொண்டு காணப்படுகிறார்.
13. எத்தனை பெண்கள் இங்கே மாறுபட்டுக் கிடக்கும் இக் கொடுமையால் திருமணமின்றி வருந்துகிறார்கள்?
14. 'சித்தி' படத்தில் பத்மினியின் நடிப்பு......
15. 'சித்தியில் முத்துராமனின் காதலியாக தோன்றும் 'எங்கவீட்டுப் பெண்'ணான இவர் சுயரூபத்தில் தோன்றுகிறார்.
18. மூத்தாளின் குழந்தைகளிடம் பத்மினி காட்டும் இந்த உணர்ச்சி நம் கண்களை குளமாக்குகின்றது.
19 கீழிருந்து மேலாக வாசித்தால் அரைவாசியாகும்.

# அலைகடல்தான் ஓயாதோ?

"செங்கை ஆழியான்"

நள்ளிரவின் பாழ்வயிற்றைக் கிழித்துக் கொண்டு விரைந்து கொண்டிருந்தது, மெயில் வண்டி. யன்னலில் சாய்ந்து கொண்டு வெளியிய கரும் போர்வையைத் துளாவின, கண்கள். கரும் போர்வையின் 'போடராக' மெயிலின் மின் ஒளி யன்னலூடே கோடு கட்டியிருந்தது.

மின் ஒளிக் கோட்டி[illegible] வெண்பரப்பு [illegible] வி[illegible]து, தண்ட[illegible] [illegible]தனபக்க நிலத்தின் மேடுபள்ளங்களும், தாவரக்கவிப்பும் பின்னேக்கிக் கழிந்தன. நீர் தேங்கிச் சதுப்பாகிவிட்ட வாய்க்காலில் தாமரை இலைகளும், பல்வகைப் புற்களும் படர்ந்து நீரை மூடிக்கிடந்தன. அவற்றிலடையே கட்டாக்காலி எருமையொன்று சருங்கலாக தலையுயர்த்திக் கிடந்தது.

அவன் கண்கள் இவற்றைப் பார்த்தபோதிலும், [illegible]வை எடுத்துக் கொண்ட அர்த்தங்கள் மனதின் பிரதிபலிப்பாக அமைந்தன. ஓட்டமற்றுத் தேங்கிச் சேறகிக் கிடந்த அவ்வாய்க்கால் நீர்போல அவன் வாழ்க்கை இன்று தேங்கி விட்டது; அத்தேக்கத்தின் சுமையோடு பார்க்கிற போது, கவிந்துகிடந்த தாவரப்பசுமைகள் கவலைப்பாசிகளாக இருட்டிக் கிடந்தன. தேங்கிய நீரில் கருங்கற் பாறையாகக் கிடந்து, சுவையோடு அசை போடும் எருமையாக......; அவன் வாழ்வின் தேக்கத்திற்குக் குறுக்கே அணைத் தடையாக அமைந்த அவள் தான் காரணமா?

அவனுக்குத் தாக்கம் வரவில்லை. குமுறிக் குமுறி ஓயாத கடலாகத் தவித்தான்.

இன்னொரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான். சிகரெட்டை எடுக்கும் நேரமெல்லாம் அவனுக்குப் பரிமளாஎன்ற அச்சிறுமியின் நினைவுதான் வரும்.

அவள் முகத்தைக் சுழித்து, ஒரு கையால் முகத்திற்கு முன்னுள்ள புகைக்காற்றை விசியபடி முணுமுணுப்பாள். பருவ எழில் சிந்தா அச்சிறுமி மளமளப்பான இனிய முகம் சுழிப்பிற்குள்ளாகும் போது, மின் வெட்டாக அச்சிறு விழிகளும் சிரித்து விரியும். புகைக் காற்றுள் அம்மெல்லிய நீள் கை அலையும் போது, தண்டுடன் கூடிய தாமரை மொட்டொன்று, ஒரு பக்கம் சில இதழ்விரிவுடன் அசைவது போன்றிருக்கும்.

'சீ, கூடாத மணம்!'

அவளுடைய தங்கை பரிமளாவிற்கு முற்றும் நேர் மாறானவள்;

'நல்ல மணம், மாஸ்ரர்' என்பாள் திலகம்.

சாம்பிராணிப் புகையை மூக்கினுள் இழுத்து அனுபவிக்கும் ஒரு விருப்பு, திலகத்திற்கு அவளுடைய சிறு நாசி விரிந்து கொடுக்க அவள் விழிகள் கவ்வித் திறக்கும்.

செல்லப்பரின் குழந்தைகளில் திலகம் புறநடையானவள். பத்தே வயது நிரம்பிய அவள் நிறத்தில் செந்தாமரையைப் பழிப்பாள். குறுகுறுவென்ற அவள் விழிகளில், எதையும் ஆழ்ந்து நோக்கும் பாவமில்லை. பரிமளா பெற்றோரைப் போலப் பொது நிறமானவள். இளஞ் செம்மையினூடே மெல்லிதாகப் படரும் கருமையின் பளபளப்பு. அவள் வாய் வாய்க்காலின் இரு அந்தங்களிலும் மெல்லிதாக சிரிக்கும் போது விழும் குழிகள், வைத்த கண்களைப் பெயர்க்கவிடா.

திலகம் அழகான சிறுமி; பரிமளா கவர்ச்சியான சிறுமி.

அழகு என்பது நிறத்தைப் பொறுத்ததல்ல; அவரவர் உணர்வைப் பொறுத்தது. பனித்துளிகளின் சிறு துகள்களை இதழ்களில் தாங்கி, தென்றலின் மெல்லசைவில் தலையாட்டும் ரோசாவும் அழகு தான். சேற்றிலே கிடந்து, சந்தனக் குழம்பாடும் எருமையும் அழகுதான்.

'அழகு'...

நாகலிங்கத்திற்குப் பரம்திலலை நினைவில் வந்தான். சிறுவயதில் இருந்து அவனைப் புரிந்து கொண்டு நட்புடன் இருப்பவன்.

'நாகலிங்கம், நீ மற்றவர்களை நம்பி ஏமாந்து போகிறாய்...' என்று அடிக்கடி சுட்டிக் காட்டுவான், பரம்திலலை.

அவனுக்குச் சிரிப்புவரும்

'ஒருவரை ஒருவர் நம்பி நடக்காமல் இருந்தால் என்ன வாழ்க்கை, தில்லை?'

நினைவுகள் எங்கோ ஓட முயன்றன.

'அழகு'

பரம்தில்லையின் அழகு ரசனை வேறுபட்டது. அமைதியான குளத்து நீரில் அவனுக்கு அழகு தெரியாது; குமுறும் அலை கடலில் அவனுக்கு அழகு தெரியும். குலைகள் தள்ளி வாழை மரங்கள், குட்டிகளுடன் பந்தரிட்டு நிற்கும் போது அவனுக்கு அழகு தெரிவதில்லை. ஒரு நாள்—

சூறாவளிக் காற்று ஒன்றின் கோரப்பசிக்கு அவனது கிராமம் பாரதூரமாகப் பலியாகி விட்டது. பெரும் சேதம். வீடுகள் கூரையின்றிக் கிடந்தன; பாரிய மரங்கள் நிலைகுலைந்து புரண்டு கிடந்தன. அவர்களது வாழைத் தோட்டங்கள், எல்லாம் பிஞ்சுக்குலைகளுடன் இடை முறிந்த வாழைகளின் சுடுகாடாகக் கிடந்தன.

அவர்கள் இருவரும் இவற்றைப் பார்த்தார்கள். நாகலிங்கத்தின் வயிறு பற்றி எரிந்தது.

'எவ்வளவு அழகாகஇருக்கிறது, பார்த்தியா?' என்றான், பரமதில்லை. நாகலிங்கம் வெறியோடு அவனைத் திரும்பிப் பார்த்தான்.

பரம்தில்லையின் விழிகள் 'பொலபொல' வென்று நீரைச் சொரிந்தன. தன் வீட்டு தோட்டத்தின் சிதைவில் கூட அவனுக்கு அழகுதான் தெரிகிறது. அவன் அழுது கொண்டே அழகை இரசித்தான்.

மெயில் விரைந்து கொண்டிருந்தது வெளியே மெல்லிய மழைத்தூறல். நாகலிங்கம் புகையை நன்கு இழுத்து ஊதிவிட்டான்.

'பரிமளா'.

நாகலிங்கம் செல்லப்பரின் வீட்டில் ஓர் அங்கத்தவனுகி விட்டான். ஜெயில் காட் செல்லப்பர் சில விஷயங்களில் கண்டிப்பு மிகுந்தவர்.

'இரவு ஒன்பது, பத்து மணிக்கு முன்பேவீட்டிற்கு வந்துவிட வேண்டும், மாஸ்ரர்'.

செல்லப்பரின் கட்டளையைக் கடந்த ஐந்தாண்டுகளாக அவன் மீறியது கிடையாது. ஏழு மணிக்கு முன்பே அறைக்குள் அடங்கி விடுவான். சில நாட்களில் ஏதாவது கூட்டங்களுக்கு அல்லது சினிமாவிற்குச் செல்ல நேர்ந்தால் பத்து மணிக்குள் திரும்பிவிடுவான்.

அதனால் அவனை அவருக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டது. செல்லப்பரிலும் பார்க்க, அவனை அவர் குழந்தைகளுக்கு மிகவும் பிடித்துவிட்டதென்றே கூறவேண்டும்.

'மாஸ்ரர், ஒரு நாளைக்கு எத்தனை சிகரெட்டுகள் குடிப்பீர்கள்?' என்று கேட்பாள், பரிமளா.

'ஏன் நீ வாங்கித் தரப் போகிறயா?'

'இல்லை மாஸ்ரர், சும்மா கேட்டனுன்.

குடிக்காமல் விட்டால் என்ன, மாஸ்ரர்?'

'நீ சாப்பிடாமல் இருப்பாயோ?'

'இல்லை...'

'அப்படித்தான்இதுவும்.'

அவள் கலகலத்துச் சிரிப்பாள், பின் திரும்பவும் கேட்பாள்:

'குடிக்காமல் விடுங்களேன்?'

அவனுடன் பழகநேர்ந்த பலர், அவன் அதிகமாகச் சிகரெட் புகைப்பதைக் கண்டு, விட்டுவிடும்படி கூறியிருக்கிறார்கள். ஏதோ நன்மை சொல்ல வேண்டும் என்று நினைத்துக் கூறிய வார்த்தைகளாக அல்லது போலி வார்த்தைகளாகத்தான் அவை அவனுக்குப்பட்டன. ஆனல், இச்சிறுமியின் வார்த்தைகள் அவனுக்காகக் கூறப்பட்ட போலியற்ற வார்த்தைகள் என்பது அவனுக்குத் தெரியும்.

'குடிக்காமல் விடுங்களேன்,' என்று பரிமளா கேட்கும் போது, 'விட்டுவிடலாம்' போலத்தான் இருக்கும்.

'ஏன்...?' என்று வினவுவான்.

'கூடாத மணம்...'

மெயில் வண்டி வேகமாக முன்னேறியது. நாகலிங்கம் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான். அநுராதபுரத்தைக்கடந்து விட்டது போலும்.

மட்டக்களப்பு வாழ்க்கையில் ஆறு ஆண்டுகள் கழிந்து சென்று விட்டன. அதற்குள்தான் எத்தனை சம்பவங்கள்.

அவனுடைய மூத்த தங்கை விவாகம் செய்து கொண்டாள். காதல் கலியாணம் தான் அதைச் செய்து வைத்தவனும் அவன் தான்.

கல்லூரி முடிந்து அறைக்குத் திரும்பிய அவனுக்கு ஒரு தந்தி வந்திருந்தது. பரிமளா தான் கொண்டு வந்து கொடுத்தாள்.

பரிமளாவிற்கு அப்போது பதினுன்கு வயது.

பெரிய பெண்.

பதறும் கரத்தோடு தந்தியைப் பிரித்தான், அவன். 'மாஸ்ரர், என்ன தந்தி? 'உடனே புறப்பட்டு வரட்டாம். ஐயா அடித்திருக்கிறர்... ஆச்சிக்குத் தான் ஏதாவது...' அவன் இதயம் படபடத்தது.

'அப்படி ஒன்றுமிராது கவலைப் படாதையும்!' என்று ஆறுதல் கூறினர், செல்லப்பர்.

அவன் மிகவும் கோழை; எதையும் தாங்கும் சக்தி அவனுக்கு இல்லை. பொல பொலவென்று கண்ணீர் விடத்தான் தெரியும்.

'மாஸ்ரர், இதென்ன?' பரிமளாவின் விழிகளும் பனித்தன. அவன் உடனே தன் கண்களைத் துடைத்துக் கொண்டான்.

அவனுக்காக அவள் கலங்கினுள்.

வீட்டில் அவனுக்கு ஒரு பேரிடியும் காத்திருக்கவில்லை. ஆனல், வீட்டில் இருந்தோர் தான் இடிவிழுந்து போய் கிடந்தனர்.

அப்பு தலையில் கைவைத்துக் கொண்டு தலை வாயிலில் குந்தியிருந்தார். ஆச்சிதிட்டிக் கொண்டிருந்தாள். அண்ணர் கோபத்தோடு குந்தில் இருந்தார். தரகு இரத்தினம் அண்ணருக்கு ஏதோ கூறிக் கொண்டு நின்றார். ஈஸ்வரி தூணைப் பிடித்துக் கொண்டு நின்றாள். மூத்தவள் எங்கே?

எல்லோரும் அவனை ஒரு கணம் நிமிர்ந்து பார்த்தனர். எல்லார்முகத்திலும் ஒரு காரணமாா எழுந்த பல உணர்ச்சிகள் தேங்கிக் கிடப்பதை அவன் அவதானித்தான்.

'அண்ணை...?' என்று வீரிட்டபடி வீட்டிற்குள் இருந்து ஓடிவந்தாள், மூத்த தங்கை, அவள் ஓடி வந்த வேகத்தில் விழுந்து விடுவாள் போலிருந்தது. அவன் தாங்கிக் கொண்டான். அவள் அவன் தோளில் முகம் புதைத்துக் குலுங்கி அழுதாள்.

'சாரதா, இதென்ன?... என்ன தங்கச்சி...?,

அவள் செய்த வேலையைக் கேட்டியே?' என்று ஆச்சி எழுந்தாள்.

சாரத தலை நிமிர்த்தி ஆச்சியைக் குரோதத்தோடு பார்த்தாள். அவள் முகம் சிவந்து வீங்கிக் கிடந்தது. இதென்ன நெற்றியில்... கழுத்தில்... கைகளில்... அடித் தளும்புகள்.

'தங்கச்சி, ஆர் அடித்தது? நீ என்ன செய்தனி?'

அவளால் பேசமுடியவில்லை. அண்ணர் பேசினர்;

'உன்ரை சிநேகிதன், அந்த வடுவா பரம்தில்லையை உவள் கலியாணம் செய்யப் போகிறாளாம்? காதலிக்கினமாம்... உவளின்ரை எண்ணத்தைப் பாரென்... அவரேதோ பெரிய உத்தியோகமெண்டு... சந்தியிலே தேத்தண்ணிக் கடை வைச்சிருக்கிறர்...'

அண்ணர் தொடர்ந்தார்!

'உந்த எண்ணத்தை மட்டும் விட்டுவிடு! அவனைக் கலியாணம் செய்யலாம் என்று மட்டும் நினையாதை... அந்தக் குடிகாரத் தபியை எனக்குத் தெரியாதே...?,

'தம்பி இப்பிடி எல்லாம் கோபிக்கக் கூடாது. ஊருலகிலே இதெல்லாம் நடக்கிறது தானே?' என்று குறுக்கிட்டார், தரகர்.

'நீர் சும்மா இரும் காணும்;'

சாரதா தலை நிமிர்ந்தாள். எதர்க்குந் துணிந்த பார்வை. 'நான் அவரைத் தான் செய்வேன். என்னை வெட்டிப் போட்டாலும் அவரைத் தான் செய்வன்!' என வீரிட்டாள்.

ஆச்சி கத்திக் கொண்டு ஓடி வந்தாள்.

'பொத்தடி வாயை உன்னலை ஊர் சிரிக்குதடி!'

'சும்மா இரணை...!' நாகலிக்கத்தின் குரலிலிருந்த ஆவேசம் ஆச்சியை மட்டுமல்ல ஏனையோரையும் சிறு பொழுது திகைப்படைய வைத்து விட்டது.

'அப்பு' இது உங்களுக்கு நல்லா இருக்கே? அவள் விரும்பியவனைக் கட்டிக் கொள்ளட்டுமன்... அவள் தானே வாழ்கிறவள்...'

அப்பு தலையை நிமிர்த்தினர்!

'என்னை ஏனப்பா, கேட்கிறாய்? எனக்குச் சம்மதந்தான். உன்ரை கோச்சியும் கொண்ணருந்தான் ஒற்றைக் காலிலை துள்ளினம்...'

'நீங்கள் ஓமெண்டால் பிறகென்ன, தப்பு? அவையள் என்ன சொல்கிறது?'

'டேய், நாகலிங்கம்!' என்று உறுமினர், அண்ணர்: நீ அவ்வளவுக்கு வந்திட்டாய்?'

'இதிலை என்னண்ணை தவறு? மனமொத்தவர்களை இணைக்காமல் பிரிக்கக் கூடாது. உங்களுக்கு நானே சொல்ல வேண்டும்...?'

அண்ணர் முன்கோபி; கூறுகிற பாதிரிக் கூறினுல் கேட்டுக் கொள்வார்.

'நீயும் இப்படித்தான் செய்வாய்!' அவர் குரலில் வெறுப்பு.

'இல்லை, அண்ணைப் இல்லை! ஒரு போதும் அ... படிச் செய்ய மாட்டன் தங்கச்சின்ரை விஷயத்துக்குச் சம்மதியுங்கோ...!

அண்ணர் கடைசியாகக் கூறினர்!

'செய்யிறதைச் செய்து கொள்ளுங்கோ!'

அண்ணரின் கால்களைக் கட்டிக் கொண்டு விழி நீரால் அபிசேகம் செய்தாள், சாரதா




மாணவ ஆசிரியர்
தெரிவுப் பரீட்சை
பயிற்சிக் கோவைகள்
ரூபா
● தமிழ் பாஷை 5-00
● பொது அறிவு 5-00
● பொதுவிவேகம் 5-00
சர்வகலாசாலை
போதன கழகம்,
540, மருதானை வீதி,
த. பெ. 1079.
கொழும்பு-10.

# உங்கள் நோய்?

பதிலளிப்பவர்:

## வைத்தியகலாநிதி என். கந்தையா

த. தமிழன்பன்,
அக்கரைப்பற்று.

ப: நான சிறிது வேலை செய்தாலும் அளவுக்கதிகமாக இளைக்கின்றது. இதைப் பார்த்து பிறர் கேலி செய்கின்றனர்கள். இதைப் போக்க வழி சொல்லுங்கள் டாக்டர்?

ப: உங்கள் இருதயம் பெலவீனமடைந்திருப்பதாக அனுமானிக்கின்றேன். எனவே நல்ல போஷாக்குள்ள உணவு வகைகளுடன் பால், முட்டை, கீரை வகைகள் பாவித்து வரவும். அன்றியும் தக்க வைத்தியரின் உதவியை நாடுதல் சிறந்தது.

ப. ஜெகநிசன்,
யாழ்ப்பாணம்.

ப: நான் திருமணம் செய்யப்போகும் பெண் என்னிலும் பார்க்க ஏழுவயது கூட. அதனால் எங்கள் உடல் நிலைக்கு ஏதாவது இடையூறு உண்டாகுமா? எனது வயது 26.

ப: மனங்கொண்டதே மாளிகை. எனவே உமக்கு பெண்ணில் பூரண திருப்தியும், அன்பும் இருந்தால் வயதைப் பற்றிய கட்டுப்பாடில்லை. 63 வயதுக் கிழவர் 23 வயது இளவயது அழகு மங்கையை மணக்கும் போது நம் போல் இளைஞர் இப்படியான காரியத்தில் இறங்குவது சிறப்புடையது.

உடல் நிலையைப் பொறுத்த விடத்து மன நிறைவைப் பொறுத்தேயுளது. இருவரின் உடல் நிலையும் நல்ல ஆரோக்கியமாக இருத்தல் விரும்பத் தக்கது.

பொ. இராசரத்தினம்,
மிருசுவில்.

கே! எனது வயது 14. தலைமயிர்கள் சில நரைத்து விட்டன. தயவு செய்து இந்நரையைத்தடுக்க வழி சொல்லுங்கள். சக மாணவர்கள் என்னைக் கேலி செய்கின்றனர்.

ப: இள நரையை மருந்து வகைகள் மூலம் மாற்றுவது சிரமம். கேலி செய்யும் மாணவர்களுக்கும் ஒரு நாளில் கட்டாயம் நரைக்கவே செய்யும். எனவே கவலை கொள்ளாதீர். உயிருட்டிச் சத்துள்ள பொருட்களை நன்கு பாவிக்கவும். தலையை நன்கு மர்த்தனம் செய்வது நல்லது.

ஆர். பாலகிருஷ்ணன்,
கெந்த கொலை

கே! வயது 18. நிறை 100 இருத்தல். கண்பார்வை குறைவு, புத்தகம் படிக்கும் போதும். கூர்மையாகப் பார்க்கும் போதும் கண்ணீர் சொரிகின்றது. இதைத் தடுக்க வழி கூறுங்கள்.

ப: முட்டை, பால், கரட்கிழங்கு, பழ வகைகள் நன்கு பாவிப்பதோடு மீன் எண்ணெயும் அளவுடன் எடுத்து வருவது சிறந்த பலனை அளிக்கும். அத்துடன் நல்ல போஷாக்குள்ள உணவு வகைகளை அருந்தி வரவும். அத்துடன் நின்று விடாமல் ஒரு கண்வைத்திய நிபுணரையும் கலந்து ஆலோசித்தல் நன்று.

'தமிழ்த் தேவன்'
பருத்தித்துறை.

கே! எனது வயது 19. விடியக்காலையில் எழும்பியவுடன் தொடர்ச்சியாக தும்முகின்றது. இதனுல் படிக்க முடியவில்லை. இதற்குப் பரிகாரம் தாருங்கள்.

ப: உங்களுக்கு பீனிச ரோகம் ஏற்பட்டிருக்கின்றது. விடியற்காலையில் எழுவதை தவிர்ப்பதோடு குளிர்ந்த நீரில் குளிப்பதையும் நிறுத்த வேண்டும். பீனிசத்தைலம் தலைக்கு பாவிப்பதோடு மூக்குக்குள் நசியமும் இட்டு வரவும்.

திருமதி. நா. பாலசிங்கம்,
யாழ்ப்பாணம்.

கே! எனது வயது 20. விவாகமாகி மூன்று வருடங்கள். ஒரே குழந்தை. குழந்தை பிறந்த பின் சரியாக மாதவிடாய் படுவதில்லை. உடல் நன்றாகப் பருத்து விட்டது. ஒரு வேலையும் செய்ய முடிவதில்லை. இதற்கு என்ன செய்ய வேண்டும்.

ப: இன்றைய மாதரில் அநேகர் இதனுல் அவஸ்தைப் படுகின்றனர். முட்டு, மூச்சு இருந்தால் நல்ல உணவு வகைகள் முக்கியம். அத்துடன் வேப்பெண்ணை காலையில் ஒரு மேசைக்கரண்டியளவு கிழமைக்கொரு தரம் குடிக்கவும். வேப்பம் பட்டை கசாயமும் குடித்து வரலாம்.

கறிவகைகளில் சிரகம், உள்ளி சிறு வெங்காயம், கராம்பு, ஏலம் பாவித்துவருதல் நல்லது.

தி. செல்வம்,
கொழும்பு-3

கே: எனது தலைமயிர் நாளுக்கு நாள் உதிர்கின்றது. பார்ப்பவர்கள் கேலி செய்யுமளவிற்கு இருக்கின்றது. நான் கிறீம் முதலியவைகள் பாவிப்பதில்லை. சிறந்த எண்ணை வகைகள் உண்டா?

ப: உங்கள் வயது குறிப்பிடவில்லை. தலையில் சொடுகு ஏற்படாமல் இருப்பதற்கு தேசிக்காய் தலையில் தேய்த்துக் குழிப்பது நல்லது!. அத்துடன் 'கேசலோசனி' தைலம் பாவித்து வருவது சிறந்தபயனை அளிக்குமெனக் கூறுவேன்.

செல்வி கு.
வட்டு - கிழக்கு.

கே! வயது பத்தொன்பது. விவாகமாகவில்லை நெஞ்சில் சளி பிடித்திருக்கின்றது. மூச்சு விடும் போது அவஸ்தைப்படுகின்றேன். சில வேளைகளில் முதுகெலும்பில் சுளீரெனவலிக்கும், எக்ஸ்-ரே எடுத்து ஒன்றுமில்லை என்றுர்கள். ஆங்கிலமருந்துகள் பலனளிக்கவில்லை. நல்லதோர் தமிழ் மருந்து கூறுங்கள்.

> **உங்கள் நோய்?**
> 'சுதந்திரன்'
> த. பெ. எண். 1183,
> கொழும்பு-2.

ப: வட்டுக்கோட்டையில் பல சிறந்த தமிழ் வைத்தியர்கள் இருக்கின்றுர்கள். எனவே அவர்களிலொருவரிடம் நேரடியாகச் சென்று சிகிச்சை பெறுதல் சாலச் சிறந்தது.

ம. சந்திரன்,
அராலி.

கே: என் வயது 20. எனது கால், கை, நெஞ்சு முதலியவற்றில் அடர்த்தியாகவும் நீளமாகவும் மயிர் முளைத்திருப்பதால் பார்க்க அவலட்சணமாக இருக்கின்றது. இவற்றை அகற்றவோ அல்லது குறைக்கவோ யாது செய்ய வேண்டுமென பணிவுடன் கேட்கிறேன்.

ப: காலைக்கு - அத்துடன் வலிவுள்ள காளைக்கு இது அறிகுறி எனவே இதை குறைக்கவோ, நீக்கவோ, முயற்சிப்பது நன்றல்ல. இயற்கையாகவுள்ள இவ் ரோமங்களை நீக்குவதற்கு மருந்தில்லை.

என். பொன்னுத்துரை,
தரணியகலை.

கே. ஐயா! எனக்கு வயது 38. இரு கன்னங்களும் சிறிது வீங்கி இருக்கின்றது. சிற்றிளைப்புடன் - பாண்டு போல் முகம் வீக்கமாய் இருக்கின்றது. இதற்கு யாது செய்தல் வேண்டும்.

ப: உங்கள் உடலில் போதிய இரத்த அணுக்கள் இல்லை. ஒரு வேலையும் செய்ய முடியாத சோம்பல் உங்களைக் குடி கொண்டிருக்கும். இலகுவில் செமிக்கக் கூடிய - போஷாக்குள்ள உணவு முறைகள் மிகவும வேண்டற்பாலது.

அயபஸ்பம் அயசெந்தூரம் ஒரு நெல்லிளவிடை காலை மாலை நெய்யில் உண்டு வருவதுடன் இரும்புச் சத்துள்ள கீரை வகைகள், பழவகைகள், பால், முட்கள் அருந்திவரப் பயனுண்டு.

'மதிவாணன்'
தெல்தோட்ட.

கே! ......................

ப: இக் கேள்விக்கு நான் பதில் அளிக்கவில்லை, அநேகமாக 'சுதந்திரனில் இப்படியான விளக்கமில்லாத பதில்கள் அளிக்கப்படுவதில்லை என்பதை உங்கள் கவனத்துக்குத் தருகின்றேன்.

## இராகலை இளைஞர் மன்றம்

இராகலைக்கு அண்மையிலுள்ள நடுக்கணக்குத் தோட்டத்தில் இளைஞர் மன்றத்தின் பூர்வாங்கக் கூட்டம் கடந்த 12ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6 மணியளவில் தோட்டப் பாடசாலை மண்டபத்தில் திரு. கிருஷ்ணதாசன் தலை[illegible]ல் நடை பெற்றது. மலையகக் [illegible] கலாச்சார சமூகநலன்களு[illegible]டு படும் இம்மன்றத்[illegible] நடப்பு வருட பணியாளர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப் பட்டனர். தலைவர் மா. சிவநாதன், துணைத் தலைவர் வே. கிருஸ்ணதாசன். துணைச் செயலாளர்கள் இராசலிங்கம், க. செல்வராசா, அமைப்புச் செயலாளர்கள் தமிழ்மாறன், சிதம்பரம், பன்னிரண்டு பேர் கொண்ட ஆலோசனைக் குழுவும் தெரிவு செய்யப் பட்டது.

## நான்

### "மருதூர்க் கப்பாம்"

ரோசாவின் இதழ்களிலே மின்னுகின்ற பனியில்
ரம்மியத்தை வைத்த முகாய்ப் படைத்தவனும் நானே
கூசாமற் கண்சிமிட்டும் விண்மீனை மதியை
வானத்துச் சுவரினிலே வரைந்தவனும் நானே
பேசாமற் சிரிக்கின்ற பூ முகையில் நகையை
மனத்தினிலே மறைத்தொன்றாய் வைத்தவனும் நானே
கூசுகின்ற விழிகளினுல் பார்க்கமுடியாத
கதிரவனை என்னுருவில் அமைத்தவனும் நானே!

காலை இளந் தென்றலிலே மிதந்துவரும் இசையில்
கருத்திழந்து மூழ்கிடுவேன் கவியின்வசமாவேன்
சோலை இளங் காற்றுவந்து வீசுகின்ற போது
சிந்தனையின் நீரோடை பண்ணிசைத்து ஓடும்
வாலைஇளங் குமரிதனைக் கண்டவுடன் காதல்
வெறிகொண்டு கவிதைமழை சோவென்று பொழியும்
மாலைஇருள் சூழ்ந்ததுமே நிலவொளியை நாடி
மனமேங்கித் தவிக்கும்; அதைக் கண்டவுடன் களிக்கும்

நானென்றும் கவி இல்லை; கவிஞர்க்குள் நின்று
கவிபாடும் சக்தியினை அளிக்கின்ற ஆத்மா;
ஏனென்று கேட்பாரும் எனக்கில்லை ஆயின்
ஏனென்ற வினாக்குறியின் சுழிதானது ஜீவன்;
காவென்றும் காவென்றும் எதுவுமெனக் கில்லை
யாவும்என் வாழ்விடமே; யாக்கைஒரு பறவை;
தானுக ஒளிர்கின்ற ஆழ்கடலில் முத்து
நானேதான்; என்கூடு முத்தினது சிப்பி!

## கிழக்கு வெளுக்கிறது

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

அழைப்பதாகக் கூறிய வுடனே அவனது மனம் மூன்றுவருடங்களாக அந்த அலுவலகத்தில் அவன் பட்ட துன்பங்களோடு கையிலிருக்கும் பதவியுறுதிப்படுத்தற் கடிதத்தை இணைத்துப்பார்த்தது.

மிக ஆறுதலாகக் கதிரையிலிருந்து எழுந்தான் சுந்தரலிங்கம். உதவியாளை யாரார் என்று பொருதைக் கேட்டவுடன் படபடத்த அவனது நெஞ்சம் இப்போது மிகவும் தெளிவடைந்திருந்தது. இனி மேல் உதவியாளையாளர் அவனைக் கூப்பிட்டு வேலையிலிருந்தும் நீக்கப்போவதாகக் காரணமில்லாமற் பயமுறுத்த முடியாது. அவரது வார்த்தை வீச்சுகள் இன்றும் வழிதவறிப் போகாமலிருந்தால் அவருக்கு முன்னேயே 'நானும் ஒரு மனிதன் தான்' என்ற வார்த்தைகளைத் துணிந்து கூறிவிடப் போகும் துணிச்சலில் உதவியாளையாளரின் அறைக்குள் நுழைகின்றுன் சுந்தரலிங்கம். அதற்கு முன்பாகத் தன் சட்டைப் பைக்குள்ளிருக்கும் 'அரச சேவை' அடையாளம் பொறிக்கப்பட்ட பதவி உறுதிப்படுத்தற் கடிதத்தை ஒருமுறை தட்டிப் பார்த்துக் கொண்டான்.

(யாவும் கற்பனை)


## உங்கள் குறைகள் என்ன?

★ உத்தியோகத்தில் உங்களுக்கு நல்ல வெற்றி வேண்டுமா?
★ எதிரிகளை வெற்றிகொள்ள வேண்டுமா?
★ ஆண், பெண் விருப்பப்படி மணம் புரிய உதவி வேண்டுமா?

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே எழுதுங்கள்.
மஹா மாந்திரீக கலாநிதி
**பி. எம். திசாநாயக**
(அரசாங்கப் பதிவுசெய்யப்பட்ட மாந்திரீக வைத்தியர்)
நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா
கம்பளை, போன்: 454

## T. K. அமிர்தா
## ஜீரண சக்தி லேகியம்

மனிதருக்கு நோய்கள் அண்டாமலிருக்க தினசரி மலப் பிரவர்த்தி யாதொரு தடையின்றி வெளியாகி குடல் சுத்தம் ஏற்படவேண்டும். அது இல்லாதிருக்குமானுல், அதுவே சகல நோய்களுக்கும் காரணமாகி விடுகிறது. மலம் சரியாக தினசரி வெளியாகாதிருந்தால் உண்டாகும் வாதம், மூலநோய்கள், அஜீரணம், வயிற்றுப் பொருமல், வலி, உஷ்ண ரோகங்கள், தாது நஷ்டம், சொறி சிரங்கு, முதலிய நோய்களுக்கு பலன் கொடுக்கும் சிறந்த மருந்து. பத்தியமின்றி உபயோகிக்கலாம்.

குறிப்பு: மூல இரத்தப்போக்கு, குடல்வாயு, இடுப்புவலி: இவைகளுக்கு ஒருதின உபயோகத்திலேயே குணம்செய்யும்.

**அமிர்தா**
**ஜீரண சக்தி லேகியம்**
சிறிய புட்டி ஒன்றுக்கு ரூபா 3-00
பெரிய புட்டி ஒன்றுக்கு ரூபா 5-50
தபால் செலவு வேறு.

விபரங்களுக்கு:
**செல்லராஜா அன்கோ**
பாக்கியலெட்சுமி வைத்தியசாலை
170, செட்டியார் தெரு. கொழும்பு-11.

# 2-வது ஜனத்திரள் வாரம்!!



எம்பயர் (கொழும்பு) | செல்லமகால் (கொழும்பு) | நெல்சன் (திருமலை)

கிங்ஸ் (பதுளை) | வின்சர் (யாழ்ப்பாணம்)

**சிவாஜிகணேசன், சாவித்திரி, தேவிகா, முத்துராமன்,**
நாகேஷ், கே. பி. சுந்தராம்பாள், டி. ஆர். மகாலிங்கம்,
டி. எஸ். பாலையா, மனோரமா, ஜி. சகுந்தலா, சம்பந்தம்,
சாரங்கபாணி, கருணாநிதி
மற்றும் பலர் நடிக்கும்

# திருவிளையாடல்

(ஈஸ்ட்மன் கலர்)

6வது வெற்றி வாரம்!! கெயிட்டி (கொழும்பு) மற்றும் திரைகளில்

எஸ். எஸ். இராசேந்திரன், விஜயகுமாரி நடித்த

கலைஞர் கருணாநிதியின்

# "பூமாலை"

---

## 11-ம் திகதி வியாழன் முதல்

## கிங்ஸ்லி பிளாசா நவா வெலிங்டன்

(கொழும்பு) (வெள்ளவத்தை) (கும்பனித் தெரு) (யாழ்ப்பாணம்)

விஜயா (மட்டக்களப்பு) | சிறிகிருஷ்ணா (திருமலை) | விஜிதா (அட்டன்) | மொடர்ன் (பண்டாரவளை)

**சிவாஜி கணேசன், எஸ். எஸ். இராசேந்திரன், முத்துராமன், எம். ஆர். ராதா, டி. எஸ். பாலையா, ஸ்ரீராம், தேவிகா, நாகேஷ், புஷ்பலதா, ஆகியோர் நடித்த**

# பழநி



திரைக்கதை, டைரக்ஷன்: பீம் சிங்

இசை: விஸ்வநாதன் ராமமூர்த்தி

பாடல்கள்: கண்ணதாசன்

வசனம்: சோலைமலை

2 வது வாரம்

கெப்பிட்டல் (கொழும்பு)



'சன் ஒவ் இந்தியா' (இந்தி)

சினிமாஸ்கோப் ஈஸ்மன் கலர்

---

# வெற்றி நடை போடும் 2-வது வாரம்!

தாய்க்குலத்தின் பெருமைதனை தரணிக்கெல்லாம் பறைசாற்றும் தீந்தமிழ் திரை விருந்து!
ஆசைக்காக வாழாமல் கடமைக்காக வாழ்பவள்தான் பெண், என்ற
உண்மையை உணர்த்தும் உணர்ச்சிக் காவியம்!



சித்ரா புரொடக்சன்ஸாரின்

# சித்தி

திரைக்கதை வசனம்-டைரெக்ஷன்
கே. எஸ். கோபாலகிருஷ்ணன்

திரையுலகத் தாரகை பத்மினி

காதல் மன்னன் ஜெமினிகணேசன்

எம். ஆர். ராதா, முத்துராமன், விஜயநிர்மலா, புதுமுகம் விஜயஸ்ரீ,
நாகேஷ், வி. கே. ராமசாமி, குழந்தை நட்சத்திரம் ராணி
ஆகியோர் திறம்பட நடித்தது.

இசை: மெல்லிசை மன்னன் எம். எஸ். விஸ்வநாதன். பாடல்கள்: கவியரசு கண்ணதாசன்;

வார நாட்களில் குளிர்மை ஊட்டப்பெற்ற லிபர்ட்டியில் (கொள்ளுப்பிட்டி)
காலை 10, மணிக்குக் காண்பிக்கப்படும்.



சென்ட்ரல் (மருதானை)

ஈரோஸ் (பாமன்கடை)

ராணி (யாழ்ப்பாணம்) | ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) | ஜோதி (திருகோணமலை) | ஒடியன் (கண்டி) | சிகிரி (பண்டாரவளை) | லிபேர்ட்டி (ஹட்டன்)

இப்பத்திரிகை [illegible] நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ம் இலக்கத்தில் 1966-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 8-ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.